வடக்கின் முதல் நாளிதழ் – Estd 1959 Reg. No. : P . 1632 விலை ரூ. 20/=

# ஈழநாடு

Eelanadu ඊළනාඩු



மாருதி Money Exchange (Pvt) Ltd.
இல.390, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம்.
T.P: 021 221 4433
076 284 4443
இல.285, காலி வீதி, வெள்ளவத்தை, கொழும்பு 06
T.P: 011 236 2086
இவ் அனைத்து சேவைகளையும் இங்கு பெற்றுக் கொள்ளலாம்.
MoneyGram மணிகிராம் பணப்பரிமாற்றம்
Ria ரியா பணப்பரிமாற்றம்
WESTERN UNION வெஸ்ரேண் யூனியன் பணப்பரிவர்த்தனை

Email : news@eelanadu.lk மலர் : 03 09.02.2022 புதன்கிழமை இதழ் : 66 பக்கங்கள் : 16

# தமிழருக்கு நீதியை உறுதி செய்வது இலங்கையின் நலனுக்கு உகந்தது!

## இந்திய வெளிவிவகார அமைச்சர் வலியுறுத்து

புதுடில்லி, பெப்ரவரி 09

ஒன்றுபட்ட இலங்கைக்குள் தமிழ் மக்களுக்கு சமத்துவம், நீதி, சமாதானம், கௌரவம் என்பவற்றை உறுதி செய்வதே இலங்கையின் நலனுக்கு உகந்த விடயம் என்று இந்திய வெளியுறவு அமைச்சர் சு. ஜெய்சங்கர் வலியுறுத்தியுள்ளார்.

15



# ஜனாதிபதி - கூட்டமைப்பு சந்திப்பு பின்செல்ல கொரோனாவே காரணம்!

## இந்தியாவில் கூறினார் பீரிஸ்

புதுடில்லி, பெப். 09

தமிழ்த் தேசியக் கூட்டமைப்புக்கும் ஜனாதிபதி கோட்டாபயவுக்கும் இடையிலான சந்திப்பு பிற்போனமைக்குக் காரணம் கொரோனா தொற்றுப் பரவலே என்று கூறியிருக்கிறார் வெளிவிவகார அமைச்சர் ஜீ. எல். பீரிஸ்.

இரு நாள் பயணமாக இந்தியா சென்றுள்ள வெளிவிவகார அமைச்சர் பீரிஸ் தி இந்துவுக்கு அளித்த நேர்காணலிலேயே இவ்வாறு தெரிவித்துள்ளார்.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்

15

# மீனவர் பிரச்னைகளை பேசித் தீர்க்கவேண்டும்!

## தமிழர் சமூக ஜனநாயகக்கட்சி வலியுறுத்து

யாழ்ப்பாணம், பெப். 09

பாக்கு நீரிணை மீன் வளம், பல்லுயிர் பாங்கு பாதுகாக்கப்படுவதற்கு இலங்கை - இந்தியா இணைந்து செயற்பட வேண்டும் என்று தமிழர் சமூக ஜனநாயகக்கட்சி வலியுறுத்தியுள்ளது.

இதுதொடர்பாக கட்சியின் தலைவர் திருநாவுக்கரசு சிறிதரன் (சுகு) வெளியிட்டுள்ள அறிக்கையில் தெரிவித்துள்ளதாவது:

“தத்தமது எல்லைகளுக்குள் மீனவர்கள் தமது வாழ்

15

# தென்கொரியாவுக்கு பறக்கிறார் மைத்திரி!

கொழும்பு, பெப். 09

2022 உலக உச்சி மாநாட்டில் (கொரிய தீபகற்பத்தில் அமைதிக்கான உச்சி மாநாடு) சிறப்புரை ஆற்றுவதற்காக முன்னாள் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன நேற்று தென்கொரியாவின் சியோலுக்கு பயணமானார்.

157 நாடுகளைச் சேர்ந்த முக்கியப் பேச்சாளர்கள்

15

# இந்தியா - இலங்கை ஒப்பந்தங்களை விரைவில் பூர்த்தி செய்ய இணக்கம்!

புதுடில்லி, பெப். 09

இந்தியா மற்றும் இலங்கை இடையிலான பாதுகாப்பு, கலாசாரம், கல்வித்துறை தொடர்பான உடன்படிக்கைகளை விரைவில் பூர்த்தி செய்வதற்கு வெளிவிவகார அமைச்சர் ஜீ. எல். பீரிஸ் இணக்கம் தெரிவித்துள்ளார்.

இரு நாள்

15

## நிலஅளவைக்கு எதிர்ப்பு;

# சிவாஜி, ரவிகரன் மீதான வழக்கு ஜூலை 26இற்கு திகதியிடப்பட்டது

முல்லைத்தீவு, பெப். 09

முல்லைத்தீவில் கடற்படைக்கு காணி அபகரிப்புக்கு எதிர்ப்புத் தெரிவித்தமை தொடர்பில் முன்னாள் வடக்கு மாகாண சபை உறுப்பினர்கள் எம். கே. சிவாஜிலிங்கம், து. ரவிகரன் உள்ளிட்ட நால்வருக்கு எதிரான வழக்கு ஜூலை 26ஆம் திகதிக்கு ஒத்தி

15

# யாழ்ப்பாண மாவட்டத்தில் அதிகரிக்கின்றது தொற்று!

## அரச அதிபர் எச்சரிக்கை

யாழ்ப்பாணம், பெப். 09

“யாழ்ப்பாணம் மாவட்டத்தில் கொரோனா பரவல் அதிகரித்துச் செல்கின்றது. இது ஆரோக்கியமானது இல்லை” என்று மாவட்ட அரசாங்க அதிபர் க. மகேசன் தெரிவித்துள்ளார்.

நேற்று அவர் மாவட்ட செயலகத்தில் நடத்திய செய்தியாளர் சந்திப்பிலேயே இதனைத்

15



# ஆரியகுளத்தில் விபத்து; வடமராட்சி இளைஞர் பலி!

யாழ்ப்பாணம், பெப். 09

யாழ். நகருக்கு அண்மையாக - ஆரியகுளம் பகுதியில் நேற்று அதிகாலை இடம்பெற்ற விபத்தில் வடமராட்சியை சேர்ந்த இளைஞர் ஒருவர் உயிரிழந்தார்.

மோட்டார் சைக்கிளில் வந்த இளைஞர் வேகக் கட்டுப்பாட்டை இழந்து

15

# வடக்கில் நேற்று 37 தொற்றாளர்!

யாழ்ப்பாணம், பெப். 09

யாழ்ப்பாணம் மாவட்டத்தில் 25 பேர் உட்பட வடக்கு மாகாணத்தில் 37 பேருக்கு கொரோனா தொற்று உறுதி செய்யப்பட்டது.

யாழ்ப்பாணம் போதனா

15

# பயங்கரவாத சட்ட திருத்தம் மூலம் துஷ்பிரயோகங்கள் முடிவுக்கு வராது

## மனித உரிமைகள் கண்காணிப்பகம்!

புதுடில்லி, பெப். 09

இலங்கை அரசாங்கத்தின் பயங்கரவாத தடைச் சட்டத்தை திருத்துவதற்கான முன்மொழிவுகள் மூலம் அரசாங்கத்தின் மனித உரிமைகள் துஷ்பிரயோகங்கள் முடிவுக்கு வராது என்று சர்வதேச மனித உரிமைகள் கண்காணிப்பகம் தெரிவித்துள்ளது.

கண்காணிப்பகத்தின் தெற்காசியாவுக்கான இயக்குநர் மீனாட்சி கங்குலி இதுகுறித்து குறிப்பிடுகையில்,

மதிப்பிழந்த பயங்கரவாத தடைச் சட்டத்தை

15

# ‘இனப் படுகொலை’ என்பதால் இலங்கை கவலையடைகிறது!

## ஐ. நா. நிபுணர் குழுவின் தரவும் கற்பனையாம் கனடாவுக்கான இலங்கை தூதரகம் அறிக்கை

கொழும்பு, பெப். 09

2009இல் முடிவடைந்த இறுதிக்கட்ட மோதலை இலங்கை தமிழ் மக் களுக்கு எதிரான இனப் படுகொலையாக சித்திரிக்க கனடாவில் உள்ள சில தரப்பினர் முயற்சிப்பது இலங்கைக்கு கவலை அளிக்கிறது என்று கனடாவில் உள்ள இலங்கை தூதரகம் அறிக்கை வெளியிட்டுள்ளது.

அத்துடன், இறுதிப் போரில் இறந்தவர்களில் பெரும்பான்மை யானவர்கள் விடுதலைப் புலிகள் அல்லது நேரடியாகப் போரில் ஈடுபட்டவர்களாக இருந்திருப்பார்கள் என்றும் அது ஊகம் வெளியிட்டுள்ளது.

கனடாவின் ஒன்ராறியோ மாகாணத்தில் தமிழ் இனப் படுகொலை கல்வி வாரத்துக்கு எதிர்ப்புத்

15

# இலங்கை - இந்திய உடன்படிக்கை நடைமுறையாவதை உறுதிசெய்க!

## இந்தியாவை கோரியது நாடு கடந்த தமிழீழ அரசு

நியூயோர்க், பெப். 09

இந்திய - இலங்கை ஒப்பந்தத்தின் 1.4ஆம் சரத்தில் குறிப்பிட்டவாறு, இலங்கைத்தீவின் வடக்கு - கிழக்கு பகுதி தமிழர்களின் தாயகம் என்பதனை உறுதிசெய்தே, இலங்கைக்கான உதவிகளை இந்தியா வழங்க வேண்டும் என நாடு கடந்த தமிழீழ அரசாங்கம் கோரியுள்ளது.

இது தொடர்பில் நாடு கடந்த அரசு வெளியிட்ட செய்திக் குறிப்பில் தெரிவிக்கப்பட்டவை வருமாறு,

இலங்கையின் வெளி விவகார அமைச்சர் பேரா

15

# 35ஆக உயர்ந்தது கொரோனா பலி!

கொழும்பு, பெப். 09

நாட்டில் ஒருநாளில் கொரோனா தொற்றால் உயிரிழந்தவர்களின் எண்ணிக்கை 35ஆக உயர்ந்துள்ளது. நேற்று முன்தினம் இந்த மரணங்கள் நிகழ்ந்

15

## இப்படியும் நடக்கிறது...!

இந்திய இராணுவம் இலங்கையில் நிலைகொண்டிருந்த காலம். அப்போது 'ஈழநாடு' அலுவலகத்திற்கு அடிக்கடி இந்திய இராணுவத்தினர் வந்து போவார்கள். யாழ்ப்பாணக் கோட்டையில் முகாமிட்டிருந்த படையினரின் அதிகாரிகளே இவ்வாறு வந்துசெல்வது வழக்கமாக இருந்தது.

அன்றைய பத்திரிகையில் வெளிவந்த செய்திகள் பற்றி அறிந்துகொள்ளவே அங்கு வரும் அவர்கள், எழுதப்படாத கட்டளை ஒன்றையும் விடுத்திருந்தனர்.

பூனா என்ற எழுத்தும் லீனா என்ற எழுத்தும் பத்திரிகையில் அருகருகே வரக்கூடாது என்பதுதான் அந்தக் கட்டளை.

அதாவது 'புலி' என்ற சொல் பத்திரிகையில் இம்பெறக் கூடாது என்பதுதான் அவர்கள் இட்ட கட்டளை.

அண்மைக்காலமாக இந்த பாழாய்ப்போன பதின்மூன்றைப் பற்றி எழுதி எழுதி சலிப்படைந்து விட்டதால் கொஞ்ச நாட்களுக்காவது அதைப்பற்றி எழுதுவதில்லை என்று நினைத்தாலும் நண்பர்கள் விடுவதாக இல்லை.

லண்டனிலிருந்து தொடர்புகொண்ட நண்பர் ஒருவர், “நீங்கள் ஏன் இப்படியொரு கேள்வியை இதுவரை கேட்கவில்லை”, என்றார்.

“அப்படி என்ன கேள்வியைக் கேட்கவில்லை என்கிறீர்கள்”, என்று கேட்டேன்.

“பதின்மூன்றை அமுல்படுத்துமாறு கேட்கும் தமிழ் கட்சிகளை சிலர் இந்தியாவின் அடிவருடிகள் என்கிறார்கள். அப்படி, இந்த பதின்மூன்றை அமுல்படுத்துவதால் இந்தியாவுக்கு என்ன இலாபம் கிடைக்கும் என்று அதனை அவர்கள் அமுல்படுத்த துடிக்கின்றனர்?”

“இலங்கைத் தமிழர்களுக்கு உரிமைகள் கிடைக்க வேண்டும் என்று தமிழகம் நினைக்கின்றது. தமிழகத்தில் தமது கட்சியின் செல்வாக்கு இதனால் அதிகரிக்கும் என்று பாரதிய ஜனதா கட்சி கருதுவதால் அவர்கள் தமிழர்களுக்கு ஒரு தீர்வை பெற்றுக்கொடுக்க முயல்கிறார்கள் என்றால், அது தமிழர்கள் ஏற்றுக்கொள்கின்ற தீர்வை அல்லவா பெற்றுக் கொடுக்கவேண்டும். அதிகம் ஏன், தமிழகத்தில் மாறிமாறி ஆட்சி செய்துவரும் அண்ணா திராவிட முன்னேற்ற கழகமும், திராவிட முன்னேற்ற கழகமும் தமிழர்கள் தமது தலைவிதியை தீர்மானிக்கின்ற சர்வசன வாக்கெடுப்பை நடத்தவேண்டும் என்றல்லவா கோரிக்கை விடுத்துவருகின்றன. பதின்மூன்றை இலங்கைத் தமிழர்கள் மாத்திரமல்ல, தமிழக கட்சிகளும் நிராகரிக்கின்றபோது, அதனை நிறைவேற்ற இந்தியா துடியாய் துடிக்கின்றது என்பது போலவும், அதற்காக இங்குள்ள சிலரை தனது அடிவருடிகளாக பயன்படுத்துகின்றது என்றும் எதற்காக கூறுகின்றனர்.”

இந்த நண்பரின் கேள்வி நியாயமானதுதான். அத்தோடு அவர் நின்றுவிடவில்லை, கூடவே மற்றும் ஒரு கேள்வியையும் கேட்டார்.

“பதின்மூன்று வேண்டாம், அது யானை ஒன்றை வைத்து தீனி போடுவது போன்று, நாட்டுக்கு சுமையாக இருக்கின்றது. அதனை இல்லாமல் செய்யவேண்டும் என்று நினைக்கிறது இலங்கை அரசாங்கம். அப்படியிருக்கையில், அதனை வேண்டாம் என்று கோஷம் போடுபவர்கள் அரசாங்கத்தின் விருப்பத்தை நிறைவேற்றத்தானே இப்படி பாடாய்ப்படுகின்றனர். அதுமாத்திரமல்ல, அவர்கள்தான் மற்றவர்களைப் பார்த்து இந்திய அடிவருடிகள் என்கின்றனர்.”

“பதின்மூன்றுக்கு ஆதரவு வழங்குவதால், அது தமிழர்களுக்கு முழுமையாக கிடைத்தால், தமிழர்களுக்கு ஒருசில அதிகாரங்களாவது கிடைக்கும். ஆனால், அதனால் இந்தியாவுக்கு எந்த நன்மையும் கிடைக்கப்போவதில்லை.

“மாறாக, பதின்மூன்று வேண்டாம் என்பவர்களால் பதின்மூன்று இல்லாமல் போனால், இலங்கை அரசாங்கத்திற்கு நன்மை கிடைக்கும். தமிழர்களுக்கு இருக்கின்ற அந்த கொஞ்ச அதிகாரமும் இல்லாமல் போகும்.

“இப்போது சொல்லுங்கள், யார் யாரின் அடிவருடிகள்?”

நண்பரின் கேள்வி நியாயமானதுதான்.

ஆனால், அந்தக் கேள்விக்கு பதில் என்ன என்பதை வாசகர்களிடமே விட்டுவிடுகின்றேன்.

**- ஊர்க்குருவி**

# 80 சதவீதமான மருந்துகளுக்கு மருத்துவமனைகளில் தட்டுப்பாடு!

## ராஜித எம். பி. பாராளுமன்றில் குற்றச்சாட்டு

கொழும்பு, பெப்.9

மருத்துவமனைகளில் 80 சதவீதமான மருந்துகளுக்கு தட்டுப்பாடு நிலவுவதாக, ஐக்கிய மக்கள் சக்தியின் பாராளுமன்ற உறுப்பினர் ராஜித சேனாரத்ன தெரிவித்துள்ளார்.

நேற்றைய தினம் பாராளுமன்றில் நிலையியல், 2015ஆம் ஆண்டு 05ஆம் இலக்க தேசிய மருந்துகள் ஒழுங்குபடுத்தும் அதிகாரசபை சட்டத்தின் கீழான இரண்டு ஒழுங்குவிதிகளும் மஹாபொல உயர் கல்விப் புலமைப்பரிசில் நம்பிக்கைப் பொறுப்பு நிதியம் (திருத்தச்) சட்டமூலம் இரண்டாம் மதிப்பீடு என்பன விவாதத்துக்கு எடுத்துக்கொள்ளப்பட்டபோது உரையாற்றியபோதே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

மேலும், “நாட்டில் வறுமையும் பொருட்களுக்கான தட்டுப்பாடும் அதிகரித்துள்ள நிலையில் தற்போது நோயாளர்களுக்கான மருந்துகளிலும் தட்டுப்பாடு ஏற்பட்டுள்ளது.

நாடு பாரிய பிரச்னைகளுக்கு முகங்கொடுத்துள்ளது. உணவுப் பொருட்களுக்கு பெரும் தட்டுப்பாடு ஏற்பட்டுள்ளது. கட்டுமானத்துறைக்கு தேவையான பொருட்களுக்கு தட்டுப்பாடு ஏற்பட்டுள்ளது. எனவே நாட்டில் வறுமையும் சகல துறைகளில் தட்டுப்பாடும் ஏற்பட்டுள்ளது.

இந்நிலையில் நோயாளர்களுக்கு தேவையான மருந்துகளுக்கும் தட்டுப்பாடும் ஏற்பட்டுள்ளது. தற்போதைய நிலையில் அரசாங்க வைத்தியசாலைகளில் 80 சதவீதமான அத்தியாவசிய மருந்துகளுக்கு தட்டுப்பாடு ஏற்பட்டுள்ளது.

இதனை அரசாங்கமே தெரிவித்துள்ளது. டொலர் தட்டுப்பாடே இதற்கு பிரதான காரணம்.

நாடளாவிய ரீதியில் மருந்துகளுக்கான தட்டுப்பாடு தீவிரமடைந்துள்ளது. வைத்தியசாலைகளில் நோயாளர்கள் மருந்துகளின்றி உயிரிழக்கும் நிலைமை ஏற்பட்டுள்ளது. தைரோய்ட்டுக்கான மருந்து நாட்டில் எங்கும் இல்லை. மருந்துகளுக்கு கட்டுப்பாட்டு விலை பெயரளவில் இருந்தாலும் மருந்தகங்களில் கட்டுப்பாட்டு விலையை மீறியே மருந்துகள் விற்பனை செய்யப்படுகின்றன.

அந்நிய செலாவணியில் ஏற்பட்ட பற்றாக்குறையே இதற்கு காரணம். இதன் காரணமாக மருந்துகளை இறக்குமதி செய்வதில் சிக்கல் நிலைமை ஏற்பட்டுள்ளது என்றும் அவர் கூறினார்.

(கே)

# டொலர் நெருக்கடியாலேயே மருந்து கொள்வனவில் சிக்கல்!

கொழும்பு, பெப். 9

டொலர் நெருக்கடி காரணமாக மருந்துகளை கொள்வனவு செய்வதில் பெரும் சிக்கல் நிலைமை ஏற்பட்டுள்ளதாக தேசிய மக்கள் சக்தியின் பாராளுமன்ற உறுப்பினர் விஜித ஹேரத் தெரிவித்தார்.

நேற்று பாராளுமன்றில் உரையாற்றியபோதே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

நாட்டில் தற்போது மருந்துகளுக்கு பெரும் தட்டுப்பாடு நிலவிவருகின்றது. வைத்தியசாலைகளில் மருந்துகள் இல்லை. மருந்துகளை கொள்வனவு செய்வதற்கு போதிய நிதி இன்மையே மருந்துகளுக்கு தட்டுப்பாடு ஏற்படுவதற்கு பிரதான காரணமாகும்.

அதுமட்டுமன்றி தனியார் பிரிவுகளிலிருந்த மருத்துவ உபகரணங்களை கொண்டுவந்த நிறுவனங்களுக்கு இதுவரை அதற்கான கட்டணங்கள் செலுத்தப்படவில்லை. உண்மையில் இது கொரோனா வைரஸ் தொற்றுப் பரவலால் ஏற்பட்ட பிரச்னை இல்லை.

நாட்டில் தற்போது ஏற்பட்டுள்ள பொருளாதார நெருக்கடியானது கொரோனா வைரஸ் தொற்றுப் பரவலால் ஏற்பட்ட பிரச்னை அல்ல என்று, அரசாங்கத் தரப்பு அமைச்சர் உதய கம்மன்பிலவே கூறியிருந்தார். பொய்யுரைக்க வேண்டாம் என்று அவர் வலிந்து கூறினார். உண்மையை கூறுமாறு தெரிவித்திருந்தார்.

உண்மை என்னவென்பதை அரசாங்கமே கூறும் நிலைமை தற்போது ஏற்பட்டுள்ளது. உண்மையில் நாட்டில் தற்போது ஏற்பட்டுள்ள பிரச்சினை கொரோனா வைரஸ் தொற்றுப் பரவலால் ஏற்பட்ட பிரச்னை அல்ல.

இதேபோன்று கணக்கு வழக்கின்றி கடன்பெற்றமை நாட்டின் பொருளாதார பிரச்சினைக்கு காரணம் என்றும் அமைச்சர் உதயகம்மன்பில குறிப்பிட்டிருந்தார். இதுவே உண்மை கதை. கணக்கு வழக்கின்றி கடன் வாங்கி நாட்டில் ஏற்படுத்தியுள்ள அழிவு காரணமாகவே பொருளாதார பிரச்சினை ஏற்பட்டுள்ளது - என்றார்.

(கே)

# எரிபொருட்களின் விலையை ஐ.ஓ.சி. நிறுவனமே அதிகரித்தது!

## அமைச்சர் டலஸ் அழகப்பெரும விளக்கம்

கொழும்பு, பெப். 09

இந்தியன் ஐ. ஓ. சி. நிறுவனமே எரிபொருள் விலையை அதிகரித்தது. அமைச்சரவையில் இது தொடர்பில் எவ்வித கலந்துரையாடல்களும் முன்னெடுக்கப்படவில்லை என்று ஊடகத்துறை அமைச்சரும் அமைச்சரவை பேச்சாளருமான டலஸ் அழகபெரும தெரிவித்துள்ளார்.

அமைச்சரவை முடிவுகளை அறிவிக்கும் ஊடகவியலாளர் சந்திப்பு நேற்று அரசாங்கத் தகவல் திணைக்களத்தில் நடைபெற்றது. இதில், கலந்து கொண்டு உரையாற்றும் போதே அவர் இதனை தெரிவித்தார்.

இந்தியாவின் ஐ.ஓ.சி நிறுவனமே எரிபொருள் விலையை அதிகரித்துள்ளது. இந்த விலையேற்றத்துடன் கனியவள கூட்டுத்தாபனத்துக்கும் மேலும் சிக்கல் நிலைமையை எதிர்கொள்ள நேரிட்டுள்ளது என்று, கனியவள கூட்டுத்தாபனத்தின் தலைவர் தெரிவித்துள்ளார்.

எனினும் நேற்று வரை (நேற்று முன்தினம்) அமைச்சரவையில்கூட கனியவள கூட்டுத்தாபனத்தின் எரிபொருள் விலையை அதிகரிப்பு செய்வதா இல்லையா என்பதுத் தொடர்பில் கலந்துரையாடவில்லை.

நாட்டில் சீமெந்துக்கு தட்டுப்பாடு உள்ளது. ஆனால், பெருமளவில் இல்லை. துறைமுகத்தில் தேங்கிக் கிடக்கின்ற அத்தியாவசியப் பொருட்களை விடுவிப்பதற்கான நடவடிக்கைகளை உடன்டியாக எடுக்குமாறு நிதி அமைச்சருக்கும் மத்திய வங்கிக்கும் அதே போன்று சுங்கத் திணைக்களத்துக்கும் ஜனாதிபதி பணிப்புரை விடுத்துள்ளார்.

அபிவிருத்தித் திட்டங்களுக்கு பயன்படுத்துவதற்கான சீமெந்தில் பெருமளவில் தட்டுப்பாடுகள் ஏற்படவில்லை. சீமெந்து போதியளவு சந்தைக்கு விடப்படும்.

கடந்த வருடத்தில் சீமெந்து பாவனை நூற்றுக்கு 20 சதவீதமாக அதிகரித்திருந்தது. இதேபோன்று 5,000 ரூபாய் நிவாரணக் கொடுப்பனவு சில ஆசிரியர்களுக்கு வழங்கப்படவில்லை என்று குறை கூறப்பட்டது.

உரிய தகவல்கள் சரியாக திரட்டப்பட்டு மாவட்டச் செயலகங்களுக்கும் அந்தந்த அதிகார சபைகளுக்கும் உரிய முறையில் போய்ச்சேரவில்லை. அதனால் ஏற்பட்ட தாமதம் காரணமாகவே கொடுப்பனவு சிலருக்கு வழங்கப்படவில்லை - என்றார்.

(கே)

ஈழநாடு
Eelanadu
09.02.2021 புதன்கிழமை
பிலவ வருடம், தை 27

**"ஏசுவார்கள், எரிப்பார்கள், அஞ்சவேண்டாம்
உண்மையை எழுதுங்கள்; உண்மையாய் எழுதுங்கள்"**
- யோகர் சுவாமிகள்.

E-mail: eelanaduweekly@gmail.com
தொலைபேசி : 021 730 1370

# மீனவர் பிரச்னை - இந்தியாவின் அமைதி?

வட பகுதி மீனவர்களின் பிரச்னை ஒரு புதிய பிரச்னையல்ல. நீண்ட காலமாக இருந்துவரும் பிரச்னைதான். தற்போது சற்று வீரியமடைந்திருக்கின்றது. இரு பகுதி தமிழ் மீனவர்களும் கடலில் கைகலப்பில் ஈடுபடுமளவிற்கு பிரச்னை முற்றியிருக்கின்றது. எரியும் வீட்டில் கொள்ளி பிடுங்க முயற்சிப்பது போன்று, சீனத் தூதுவர் வட பகுதி மீனவர்களை பயன்படுத்திக் கொள்வதற்கான சோதனை முயற்சியொன்றையும் மேற்கொண்டிருந்தார். இதனை இந்தியா எவ்வாறு எடுத்துக் கொள்கின்றது?

இந்தியாவுக்கும் இலங்கைக்கும் இடையில் 400 கிலோமீற்றர் கடல் பகுதி எல்லையாக இருக்கின்றது. இது மூன்று வேறுபட்ட இடங்களுடன் தொடர்புபடுகின்றது. வடக்கில் வங்காள விரிகுடா, பாக்கு நீரிணை மற்றும் மன்னார் வளைகுடா ஆகிய பகுதிகளின் கடல் எல்லைகள் மேற்படி 400 கிலோமீற்றர் கடல் எல்லைக்குள் அடங்குகின்றது. இந்த மூன்று பகுதிகளும் இந்து சமுத்திர பிராந்தியத்தின் மேற்கு பகுதியின் மையத்தில் அமைந்திருக்கின்றன. இந்த பகுதியில்தான் தமிழ்நாட்டு மீனவர்கள் மீன் பிடியில் ஈடுபடுகின்றனர். இது தமது வாழ்வாதாரத்தை பாதிக்கின்றது என்பதுதான் வடபகுதி மீனவர்களின் குற்றச்சாட்டாக இருக்கின்றது.

இந்த பகுதியில் நுழைந்து மீன்பிடியில் ஈடுபட்ட பல தமிழ்நாட்டு மீனவர்கள் இலங்கை கடற்படையினரின் துப்பாக்கி பிரயோகங்களிலும் அகப்பட்டிருக்கின்றனர். இதில் பலர் கொல்லப்பட்டிருக்கின்றனர். இது தொடர்பில் தமிழ்நாடு அரசாங்கம் மத்திய அரசுக்கு பல்வேறு சந்தர்பங்களில் அழுத்தங்களை கொடுத்திருக்கின்றது. ஆனால், இதுவரையில் இந்த பிரச்னைக்கு சுமுகமான தீர்வை காண முடியவில்லை. இந்தப் பிரச்னையை தீர்க்க வேண்டுமாயின் தமிழ்நாட்டு மீனவர்கள் இலங்கையின் கடல் எல்லைக்குள் வருவதை தடுக்க வேண்டும். எப்படி தடுப்பது? இந்தப் பிரச்னைக்கு தீர்வு காணப்படாத வரையில், மீனவர் பிரச்னை தீரப் போவதில்லை. ஏனெனில், 2003இலிருந்து இரு தரப்பு மீனவர்களுக்கும் இடையில் பல்வேறு சந்திப்புக்கள் இடம்பெற்றிருக்கின்றன. எதுவுமே ஆக்கபூர்வமான விளைவுகளை தரவில்லை.

டக்ளஸ் தேவானந்தா இருக்கின்ற காலத்தில் இந்த பிரச்னையை தீர்க்கலாம் என்று சிலர் கருதலாம். ஏனெனில், அவர் ஒரு தமிழராக இருப்பதால் தமிழ்நாட்டோடு உரையாடுவது இலகுவானதென்றும் ஓர் அபிப்பிராயமுண்டு. ஆனால், அவர் இந்தப் பொறுப்பை எடுத்த பின்னர்தான் இந்த பிரச்னை இன்னும் தீவிரமடைந்திருக்கின்றது. அவரால் எதனையும் செய்ய முடியவில்லை. இந்தப் பிரச்னையுடன் மூன்று பகுதிகள் தொடர்புறுகின்றன. இலங்கை, இந்தியா மற்றும் தமிழ்நாடு. இந்தியாவில் மாநிலங்கள் அதிகாரமுடையவை. இந்த நிலையில் தமிழ்நாட்டின் ஆக்கபூர்வமான தலையீடு இல்லாமல் இந்தப் பிரச்னையை மத்திய அரசாங்கம் கையாள முடியாது. டக்ளஸை தமிழ்நாட்டில் எந்தளவுக்கு ஏற்றுக்கொள்வார்கள் என்பது அடுத்த பிரச்னை. ஆனால் இப்போது பிரச்னையின் தன்மை சற்று மாற்றமடைந்திருக்கின்றது. அதாவது, எரிகின்ற வீட்டில் கொள்ளியெடுக்கலாம் என்னும் நோக்கிலும் மீனவர் பிரச்னை நோக்கப்படுகின்றது.

வடக்கின்மீதும் சீனா ஆர்வம் காட்டிவரும் நிலையில் இவ்வாறான எரியும் பிரச்னைகளை அவர்கள் பயன்படுத்திக் கொள்ள முயற்சிக்கலாம். சீனத் தூதுவரின் வடக்கு விஜயத்திற்கு பின்னர், வழமையான மீனவர் பிரச்னை பிறிதொரு நிலைக்கு சென்றிருப்பது போன்றும் தெரிகின்றது. இதனை இந்தியா எவ்வாறு கையாளப் போகின்றது?

1974வரையில் இந்தியாவிடமிருந்த கச்சதீவை, இந்திரா காந்தி இலங்கைக்கு வழங்கியிருந்தார். இதன்போது தமிழ்நாட்டின் கருத்துக்களை அவர் செவிமடுக்கவில்லை. இன்று தமிழ்நாட்டு மீனவர்கள் பாதிக்கப்படுவதற்கு இந்திரா காந்தியின் செயல்தான் காரணமென்றும் தமிழ்நாட்டு அரசியல் தரப்புக்கள் குற்றம்சாட்டி வருகின்றன. காந்தி காலத்து பிரச்னையை மோடி காலத்து இந்தியா எவ்வாறு கையாளப் போகின்றது? இதனால் இந்தியாவின் தேசிய பாதுகாப்பிற்கு அச்சுறுத்தல் ஏற்படாதென்று இந்தியா உறுதியாக நம்புகின்றதா?

# வடக்கு - கிழக்கு விடயத்தில் ஜெய்சங்கர் பீரிஸைவிட அனுபவஸ்தர்!

**- அலசுவது இராஜத்திரி -**

இலங்கை வெளிவிவகார அமைச்சர் பேராசிரியர் ஜீ. எல். பீரிஸ், இந்திய வெளிவிவகார அமைச்சர் எஸ். ஜெய்சங்கர் ஆகியோர் புதுடில்லியில் நேற்று முன்தினம் சந்தித்து உரையாடியுள்ளனர்.

இந்திய - இலங்கை வெளிவிவகார அமைச்சர்களைப் பொறுத்தவரை இந்திய வெளிவிவகார அமைச்சர் எஸ். ஜெய்சங்கர் இலங்கை - இந்திய வெளியுறவு விடயத்தில் நன்கு பரிச்சயமான ஒருவராவார்.

இந்திய இராஜதந்திர சேவையில் ஒரு மூத்த இராஜதந்திரியாக பல நாடுகளில் பணியாற்றிய அனுபவம் பெற்றவர் எஸ். ஜெய் சங்கர். அத்துடன், இலங்கையில் இந்திய உயர்ஸ்தானிகராலயத்தில் ஒரு முக்கிய அதிகாரியாக பணியாற்றியதோடு , ஜே. என். டிக்ஸிட் இந்திய உயர் ஸ்தானிகராக இலங்கையில் பணியாற்றிய காலத்தில் 1987ஆம் ஆண்டு இலங்கை - இந்திய சமா தான ஒப்பந்தத்தை அமுலாக்க வந்திருந்த இந்திய அமைதிப் படைக்கு பொறுப்பான விசேட அதிகாரியாகவும் ஜெய்சங்கர் பணிபுரிந்திருந்தார்.

இந்திய - இலங்கை சமாதான ஒப்பந்தம் கொண்டு வரப்பட்டபோது இலங்கை வெளிவிவகார அமைச்சர் பேராசிரியர் ஜீ. எல். பீரிஸ் கொழும்பு பல்கலைக்கழக உபவேந்தராக பணியாற்றியிருந்தார்.

1994ஆம் ஆண்டு சந்திரிகா பண்டாரநாயக்க குமாரதுங்க இலங்கையின் ஜனாதிபதியாகத் தெரிவானபோது தமது அமைச்சரவையில் சிறப்புத் தகமையுள்ள வர்களுக்கும் இடமளித்து அவர்களை நியமன அமைச்சர்களாகவும் பதவியில் அமர்த்தியிருந் தார் சந்திரிகா பண்டாரநாயக்க குமாரதுங்க.

அவ்வாறு பதவியில் அமர்த்தப்பட்டவர்களில் முக்கியமானவர்களே மறைந்த வெளிவிவகார அமைச்சர் லக்ஷ்மன் கதிர்காமர், மற்றும் இன்றைய வெளிவிவகார அமைச்சர் பேராசிரியர் ஜீ. எல். பீரிஸ் ஆகியோர் என்பது குறிப்பிடத்தக்கது.

இலங்கையின் வெளிவிவகார துறையைப் பொறுத்தவரை 1983ஆம் ஆண்டுக்கு பின்னரே சர்வதேச ரீதியாக பெரிதும் பேசப்படும் நிலைக்குள்ளாகியதோடு இந்தியாவுடனும் வெளியுறவுத்துறை குறித்து நெருங்கி செயல்பட வேண்டிய நிலைக்குள்ளாகியிருந்தது. இதற்கு இலங்கையில் 1983ஆம் ஆண்டில் ஏற்பட்ட கறுப்பு ஜூலை இனக் கலவரமே முக்கிய காரணமாகும். அன்று இந்திய பிரதமராக இருந்தவர் இந்திரா காந்தி. இலங்கையில் 83 ஜூலை இனக் கலகம் ஏற்பட்டபோது நிலைமையை நேரில் கண்டறிவதற்காக இலங்கைக்கு அன்று வந்த இந்திய வெளிவிவகார அமைச்சரே பி. வி. நரசிம்மராவ். இவர் பின்னாளில் இந்திய பிரதமராகவும் பதவி வகித்திருந்தார்.

எனவே, 1983ஆம் ஆண்டு முதல் இன்று வரை இந்திய - இலங்கை வெளியுறவுத்துறைகள் பலதரப்பட்ட சவால்களுக்கு முகங்கொடுத்து இருக்கின்றன.

தற்போதைய சூழலில் இந்தியா, இலங்கை ஆகியவை தமது உள்நாட்டு விவகாரங்கள் சம்பந்தமாகவும் பிராந்திய , சர்வதேச விவகாரங்கள் குறித்தும் அதிகம் கவனம் செலுத்த வேண்டியவையாக இருக்கின்றன.

இலங்கையின் பொருளாதார நிலவரம் என்றுமில்லாதவாறு பெரும் நெருக்கடிக்கு உள்ளாகியிருக்கின்றது. அத்துடன், உள்நாட்டு அரசியலைப் பொறுத்தவரை இலங்கையில் 13ஆவது திருத்தச் சட்டம் இலங்கையின் அரசியல் உறுதிப்பாட்டுக்கு மிக அவசியமானதாக இருக்கின்றது.

13ஆவது திருத்தச்சட்டம் அமுலாக்கப்பட வேண்டியதன் அவசியத்தை இலங்கையின் தமிழ் தரப்பினர் வடக்கு - கிழக்கு யுத்தம் முடிவுக்கு வந்த காலம் முதல் வலியுறுத்தி வருகின்றன. இது விடயத்தில் இந்திய வெளிவிவகார அமைச்சர் எஸ். ஜெய்சங்கர் இந்திய வெளியுறவு செயலாளராக இருந்த காலம் முதல் கொண்டு வலியுறுத்தப்பட்டு வருகின்றது. இருந்தபோதிலும் இது விடயத்தில் இந்தியா அசமந்தப் போக்குடனிருப்பதை நோக்கும் போது 13ஆவது திருத்தச்சட்டம் இலங்கையில் முழுமையாக அமுலாக்கப்படும் பட்சத்தில் இலங்கைமீதான தனது பிடியை இழந்துவிடக்கூடுமோ என இந்தியா நினைத்திருப்பது போன்றே தோன்றுகின்றது.

இலங்கை வெளிவிவகார அமைச்சர் பேராசிரியர் ஜீ. எல். பீரிஸ் தற்போது இந்தியாவுக்கு மேற்கொண்டுள்ள விஜயம் இலங்கையை பொருளாதார அழுத்தங்களிலிருந்து விடுபடச்செய்யும் விதத்தில் இந்தியாவின் உதவியை நாடுவதாகவே இருக்கின்றது. ஏற்கனவே இலங்கை பொருளாதார நெருக்கடியிலிருந்து விடுபடும் விதத்தில் பெருமளவு நிதியுதவியை வழங்கியுள்ளது.

இந்நிலையில், 13ஆவது திருத்தச்சட்டம் தொடர்பாக தனது பங்களிப்பை இந்தியா தற்போது வெளிப்படுத்த வேண்டியது இன்றியமையாததாகின்றது. அத்துடன், எதிர்வரும் மார்ச் மாதம் ஜெனிவாவில் இடம்பெறவுள்ள 49ஆவது ஐ. நா. மனித உரிமைகள் பேரவை கூடடத்தொடரிலும் இதுவரை காலமும் இலங்கை மீதான 46-1 ஜெனிவா தீர்மானம் நிறைவேற்றப்படாதிருப்பதையும் இந்தியா கவனத்தில் கொள்ள வேண்டியதாக இருக்கின்றது. இதுகுறித்து இலங்கை இந்தியாவை திசை திருப்ப முயலும் நடவடிக்கைக்கு இந்தியா இடம்தரக்கூடாதெனவும் பாராளுமன்ற உறுப்பினர் சி. வி. விக்னேஸ்வரன் இந்தியாவை எச்சரித்துள்ளார்.

எனவே, இந்தியா இலங்கையுடனான தனது வெளியுறவு கொள்கை விடயத்தில் வடக்கு - கிழக்கில் 13ஆவது திருத்தச்சட்டம் தொடர்பாக கூடுதல் அழுத்தங்களை தற்போதைய சூழ்நிலையில் இலங்கைக்கு வழங்குவதே இன்றியமையாததாகின்றது.

## அப்புக்குட்டி அண்ணையின் 'டவுட்'






**மேடம்** குடும்பத்தில் இருந்த சச்சரவுகள் மறைந்து சுமுக உறவு உண்டாகும். குழந்தைகளின் திறமைகள் வெளிப்பட்டு பாராட்டு பெறுவர். வீண் அலைச்சல் குறையும். புதிய வாய்ப்புகள் கிடைக்கும்.

**இடபம்** காலையிலேயே மனதிற்கு இனிய நிகழ்ச்சி நடக்கலாம். கவலை குறையும். நண்பர் உங்களுக்கு உதவிக்கரம் நீட்டுவார். வழக்குகள் சாதகமாக முடியும். பரபரப்பு அதிகரிக்கும்.

**மிதுனம்** பொதுத் தொடர்புகள் விரிவடையும். யோகமான நாள். நியாயமான வழியிலும், மனசாட்சிபடியும் செயல்படுவீர்கள். அலுவலக வழக்குகளில் நல்லதொரு திசைத் திருப்பம் ஏற்படும்.

**கடகம்** கணவன் மனைவி இணைந்து நிதி பற்றி தீர்மானிப்பீர்கள். தள்ளிப்போட்ட வேலைகளை இன்று முடித்து நிம்மதி காண்பீர்கள். பெரியோர், உயர் அதிகாரிகளின் ஆதரவு உற்சாகம் தரும்.

**சிம்மம்** புதிய முயற்சிகள் வெற்றி பெறும். நல்ல எண்ணங்கள் வரும். மாலையில் அலைபேசி மூலம் வரும் செய்தி மகிழ்ச்சி தரும். கவனக்குறைவால் பிரச்னை ஏற்படாதபடி எச்சரிக்கை தேவை.

**கன்னி** யாருடனும் வீண் விவாதம் செய்வதைத் தவிர்க்க வேண்டும். பிறரிடம் வாக்குவாதம் செய்யாதிருந்தால் மன உளைச்சல் வராது. புகழ் மிக்கவர்களைத் தொடர்பு கொண்டு மகிழ்வீர்கள்.

**துலாம்** வியாபாரத்தில் பங்குதாரர்கள் உதவிகரமாக இருப்பர். சூழ்நிலை அறிந்து பிறருக்கு விட்டுக் கொடுப்பீர்கள். பிரச்னை தீரும். வழிபாட்டில் ஆர்வம் காட்டுவீர்கள். கலகலப்பான நாள்.

**விருட்சிகம்** பணியிடத்தில் உயர் அதிகாரியை அனுசரித்து செல்வது நல்லது. வீடு தொடர்பான பிரச்னைகள் நல்ல முடிவுக்கு வரும். இன்று இனிய செய்தி ஒன்று வந்து உங்களை மகிழ்விக்கும்.

**தனுசு** வெளிவட்டாரத்தில் புதிய சந்திப்பு பற்றி கவனம் தேவை. ஆன்லைனில் நடக்கும் சுபநிகழ்ச்சிகளில் கலந்து கொள்வீர்கள். சமூகத்தில் உங்களின் அந்தஸ்து உயரும். உறவினர் தொடர்பு கொள்வர்.

**மகரம்** குடும்பத்தினரின் விருப்பத்திற்கேற்ப செயல்படுவீர்கள். வழக்கத்துக்கு அதிகமாக உழைக்கத் தொடங்குவீர்கள். சொத்து வாங்குவது, விற்பது லாபகரமாக அமையும்.

**கும்பம்** உடல் நலனில் கூடுதல் கவனம் செலுத்துவீர்கள். பணியிடம் அல்லது கட்சியில் தலைமைக்கு நெருக்கமாவீர்கள். உங்களின் மதிப்பு உயர்வதால் மனதில் மகிழ்ச்சி நிலவும்.

**மீனம்** பல நாளாக எதிர்பார்த்த உயர்வும் நன்மையும் வரும்.எதிர்காலத்துக்கு உதவக்கூடிய திட்டங்களை தீட்டுவீர்கள்.பணியிடத்தில் பாராட்டின் அடையாளமாக உங்களுக்கு சிறு நன்மை வரும்.

# ஆளுநர்தேவையில்லை என்ற இயக்கத்தை மு.க.ஸ்டாலின் முன்னெடுக்க வேண்டும்!

## தமிழக சட்டப் பேரவையில் நேற்று வலியுறுத்தல்

சென்னை, பெப். 09

"மாநில உரிமைகளைக் காக்க, மாநிலங்களுக்கு ஆளுநர் தேவையில்லை என்ற இயக்கத்தை தமிழக முதல்வர் ஸ்டாலின் முன்னெடுக்க வேண்டும்" என்று தமிழக சட்டப்பேரவையில் மனித நேய மக்கள் கட்சியின் தலைவர் ஜவாஹிருல்லா வலியுறுத்தியுள்ளார்.

தமிழக சட்டப்பேரவை சிறப்புக் கூட்டத்தில் நேற்று மனித நேய மக்கள் கட்சியின் தலைவர் ஜவாஹிருல்லா பேசுகையில், "ஆளுநரின் கடிதத்தை படித்து மிகுந்த வேதனையில் உள்ளேன். மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்ட பிரதிநிதிகள் தமிழ்நாட்டுக்கு நீட் தேர்வு தேவையில்லை என்று நிறைவேற்றி அனுப்பிய மசோதாவை மத்திய அரசால் அனுப்பப்பட்ட ஆளுநர் திருப்பி அனுப்பியுள்ளார். இதனை உணர்ந்துதான் அன்றே அண்ணா, 'ஆட்டுக்குத் தாடி தேவையில்லை. மாநிலங்களுக்கு ஆளுநர் தேவையில்லை' என்று கூறினார்.

சமூக நீதியைக் காக்க சமூக நீதிக் கூட்டமைப்பை முதல்வர் உருவாக்கியுள்ளார். அதை வரவேற்கிறோம். அதேபோல், மாநிலங்களுக்கு ஆளுநர் தேவையில்லை என்ற இயக்கத்தை முதல்வர் முன்னெடுக்க வேண்டும். அது மாநிலங்களின் பிரச்னைக்குத் தீர்வாக அமையும். நீதிபதி ஏ.கே.ராஜன் அறிக்கையை காமாலைப் பார்வையின் அறிக்கை என்று ஆளுநர் கூறியிருப்பது தமிழக மக்களை அவமதிக்கும் செயல். ஆளுநர் தனது கடிதத்தில் தனது தனிப்பட்ட கருத்துகளைத் திணித்திருக்கிறார்" என்றார்.



# ஆளுநர் நீட் மசோதாவை திருப்பியனுப்பியது அரசியலமைப்புக்கு விரோதமான செயற்பாடு

## மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் மா.சுப்பிரமணியன்

சென்னை, பெப். 09

நீட் விலக்கு சட்ட முன்வடிவை ஆளுநர் திருப்பி அனுப்பியது அரசியலமைப்பு முறைப்படி சரியானதல்ல என மசோதாவை தாக்கல் செய்த மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் மா.சுப்பிரமணியன் கூறினார்.

நீட் தேர்வில் விலக்கு கோரி சட்டப்பேரவையில் மசோதா நிறைவேற்றப்பட்டு ஆளுநருக்கு அனுப்பிவைக்கப்பட்டதை அளுநர் அரசுக்கே திருப்பி அனுப்பினார்.

மசோதா திருப்பி அனுப்பியதை தொடர்ந்து சட்டமன்ற அனைத்துகட்சி கூட்டம் நடைபெற்றது. அனைத்துக்கட்சி கூட்டத்தின்போது எடுக்கப்பட்ட தீர்மானத்தின்படி நீட் விலக்கு மசோதாவை மீண்டும் நிறைவேற்றும் வகையில் தமிழ்நாடு சட்டப்பேரவையின் சிறப்புக் கூட்டம் நேற்று நடைபெற்றது.

நீட் தேர்வு விலக்கு மசோதாவை மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் மா.சுப்பிரமணியன் தாக்கல் செய்தார். அவர் கூறியதாவது:-

அரசியல் அமைப்பு சட்டப்படி ஆளுநர், குடியரசு தலைவருக்குதான் மசோதாவை அனுப்பி இருக்க வேண்டும். சட்ட முன்வடிவை குடியரசு தலைவருக்கு அனுப்பாமல், ஆளுநர் திருப்பி அனுப்பி இருப்பது சரியல்ல.

ஆளுநரின் கருத்த உயர் மட்டக்குழுவை அவமானப் படுத்துவது போல் உள்ளது. நீட் விலக்கு மசோதா பற்றிய ஆளுநரின் மதிப்பீடுகள் அனைத்தும் தவறானது எனத் தெரிவித்தார்.



# நீட் விலக்கு மசோதா மீண்டும் நிறைவேறியது

சென்னை, பெப். 09

தமிழக சிறப்பு சட்டப்பேரவை கூட்டத்தொடரில் நீட் தேர்வு விலக்கு மசோதா நேற்று மீண்டும் ஒருமனதாக நிறைவேற்றப்பட்டது.

நீட் தேர்வுக்கு விலக்கு அளிக்கும் மசோதாவை மீண்டும் நிறைவேற்றும் வகையில், சென்னை தலைமைச் செயலகத்தில் தமிழ்நாடு சட்டப்பேரவை சிறப்பு கூட்டம் நடைபெற்றது. தமிழகத்தில் நீட் விலக்கு கோரும் மசோதாவை அமைச்சர் மா. சுப்பிரமணியன் அறிமுகம் செய்து வைத்தார்.

இதேபோல் முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் பேசுகையில், "ஜனநாயகம் காக்க, கல்வி உரிமையை வென்றெடுக்க, கூட்டாட்சி தத்துவம் காக்க நாம் இன்று கூடி உள்ளோம். பல சாதனைகளை செய்த இந்த சட்டமன்றத்தால் நீட் தேர்வுக்கு எதிரான முடிவையும் எடுக்க முடியும். 16 வயதில் பொதுவாழ்வில் நுழைந்த எனக்கு மறக்க முடியாத நாள் இது" என்றார்.

இதன் தொடர்ச்சியாக, சிறப்பு சட்டப்பேரவை கூட்டத்தொடரில் நீட் தேர்வு விலக்கு மசோதா மீண்டும் ஒருமனதாக நிறைவேற்றப்பட்டது. ஆளுநருக்கு உடனடியாக அனுப்பி வைக்கப்படும் என அறிவிக்கப்பட்டது.

# எந்த கட்சியுடனும் கூட்டணி இல்லை

## விஜய் மக்கள் இயக்கம் அறிவிப்பு

சென்னை, பெப். 09

நகர்ப்புற உள்ளாட்சித் தேர்தலில் எந்த கட்சியுடனும் கூட்டணி இல்லாமல் தனித்துப் போட்டியிடுவதாக விஜய் மக்கள் இயக்கம் அறிவித்துள்ளது.

கடந்த ஆண்டு நடந்து முடிந்த ஊரக உள்ளாட்சி அமைப்புகளுக்கான தேர்தலில் விஜய் மக்கள் இயக்கத்தின் ஆதரவுடன் முதன்முறையாக வேட்பாளர்கள் போட்டியிட்டனர். தற்போதைய தேர்தலில் விஜய் மக்கள் இயக்கம் எந்த கட்சியுடனும் கூட்டணி இல்லாமல் தனித்துப் போட்டியிடுவதாக அதன் பொதுச் செயலாளர் புஸ்ஸி ஆனந்த் தெரிவித்துள்ளார்.

இது குறித்து அவர் வெளியிட்டுள்ள அறிக்கையில், "விஜய் மக்கள் இயக்கம் எந்தக் கட்சியுடனும் கூட்டணியோ ஆதரவோ இல்லாமல் தனித்துப் போட்டியிடுகிறது. எனவே விஜய் மக்கள் இயக்கத்தின் சார்பில் நிறுத்தப்பட்டுள்ள வேட்பாளர்களுக்காக அனைத்து மாவட்ட தலைவர்களும், நிர்வாகிகளும், தொண்டர்களும், ரசிகர்களும் முழுமூச்சுடன் பிரச்சாரம் செய்து விஜய் மக்கள் இயக்கத்தின் மூலமாக செய்த நற்பணிகளை மக்களிடம் கொண்டு சேர்த்து வேட்பாளர்களை வெற்றிபெற செய்யவேண்டுமென கேட்டுக் கொள்கிறேன்" என்று தெரிவித்துள்ளார்.



## காங்கேசந்துறையில் தடுத்து வைக்கப்பட்ட 5 இந்தியப் படகுகள் ஏலத்தில் விற்பனை!

யாழ்ப்பாணம், பெப். 09

காங்கேசன்துறையில் இருந்த 5 இந்தியப் படகுகளும் நேற்று 4 லட்சத்து 31 ஆயிரத்து 500 ரூபாவுக்கு ஏலமிடப் பட்டன.

இலங்கை கடற்பரப்புக்குள் எல்லைதாண்டி மீன்பிடித்த சமயம் கைது செய்யப்பட்ட இந்திய மீனவர்களின் ட்ரோலர் படகுகள் நேற்றுமுன்தினம் முதல் ஏலம் விடப்படுகின்றன.

இதற்கமைய நேற்று காங்கேசன்துறை துறைமுகப் பகுதியில் தரித்து வைக்கப்பட்டிருந்த 5 படகுகள் நீரியல் வளத்துறை திணைக்கள அதிகாரிகளினால் ஏலம் விடப்பட்டன. இதன் போதே இந்த ஐந்து படகுகளும் 4 லட்சத்து 31 ஆயிரத்து 500 ரூபாவுக்கு ஏலமிடப்பட்டன.

நீர்கொழும்பு, கொழும்பு, புத்தளம், மன்னார் மற்றும் யாழ்ப்பாணம் உள்ளிட்ட பல வேறு பகுதிகளில் இருந்து வருகை தந்தவர்கள் ஏலத்தில் கலந்துகொண்டனர்.

இதேநேரம் இன்றுகிளி நொச்சி மாவட்டம் கிராஞ்சியில் உள்ள 14 படகுகள் ஏலம் விடப்படவுள்ளமையும் குறிப் பிடத்தக்கது. (அ-03)



## மனிதப் பண்பியல்புகளோடு ஆளுமையுள்ள ஒரு நல்ல சமுதாயத்தை உருவாக்கவேண்டும்

### அறநெறிப் பாடசாலைகள் அந்த பணிக்காக உதவவேண்டும் என்கிறார் வேலன் சுவாமிகள்

யாழ்ப்பாணம், பெப். 09

மனிதப் பண்பியல்புகளோடு ஆளுமையுள்ள ஒரு நல்ல சமுதாயத்தை உருவாக்க வேண்டிய தூர நோக்கில் அறநெறிப் பாடசாலைகள் அமைந்துள்ளன என்று வேலன் சுவாமிகள் தெரிவித்தார்.

நெடுந்தீவு செல்லம்மாள் வித்தியாலய வளாகத்தில் சிவன் மானுட மேம்பாட்டு நிறுவனத்தின் ஏற்பாட்டில் செல்லம்மாள் ஞாபகார்த்த அறநெறி பாடசாலை மற்றும் செல்லம்மாள் ஞாபகார்த்த முன்பள்ளி ஆகிய வற்றிற்கான அடிக்கல் நாட்டு விழா நேற்றுமுன்தினம் நடைபெற்றது.

இதில் சிறப்பு அதிதியாக கலந்துகொண்டு உரையாற்றிய போதே அவர் இவ்வாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவிக் கையில்-

சிறுவர்களுக்கு ஆரம்பக் கல்வியை மேம்படுத்தவும் அறநெறியை போதிப்பதற்காகவும் எடுக்கப்படும் இந்த முயற்சி சிறப்பாக அமைய வேண்டும் என்று இறைவனை பிரார்த்தித்துக் கொண்டு இன்று நமது மண்ணிலேயே சிறுவர்களை இளம் சந்ததியினரை நல்ல வழியில் ஆன்மீக ரீதியில் வழிகாட்டி வளர்த்தெடுக்கவேண்டிய பொறுப்பில் அனைவரும் இருக்கின்றோம்.

எமது பண்பாடு கலை கலாசார விழுமியங்களைப் பேணக் கூடிய விதத்தில் மனித பண்பியலோடு ஆளுமையுள்ள ஒரு நல்ல சமுதாயத்தை உருவாக்க வேண்டிய தூர நோக்கில் இந்த அறநெறிப் பாடசாலைகள் முக்கிய பாகங்களை வகிக்கின்றன.

அந்த வகையிலேயே நெடுந்தீவு மண்ணில் இருக்கக்கூடிய சிறார்களுக்கு எமது பண்பாட்டு கலாச்சார விழுமியங்களை எடுத்துச் செல்லக்கூடிய வகையில் இந்த அறநெறி பாடசாலை அமையவேண்டும்- என்றார்.

சிவன் மானுட மேம்பாட்டு நிறுவனத்தின் ஏற்பாட்டில் தலைமையில் நடைபெற்ற இந்த நிகழ்வில் சிவன் மானுட மேம்பாட்டு நிறுவனத்தின் நிறுவனத்தைச் சேர்ந்த கலியுக வரதன் மற்றும் பாராளுமன்ற உறுப்பினர் சிவஞானம் சிறிதரன், நெடுந்தீவு பிரதேச செயலாளர் சத்தியசோதி, ஓய்வுநிலை விரிவுரையாளரும் இந்துமகா சபையை சேர்ந்தவருமான சோ. பத்மநாதன் மற்றும் சிவன் மானுட மேம்பாட்டு நிறுவனத்தினர், பொதுமக்கள் எனப் பலர் கலந்துகொண்டனர். (அ-03)

# காலிக்கு வெள்ளிக்கரண்டி நுவரெலியாவுக்கோ தகரம்

### மனோ கணேசன் சாடல்

கொழும்பு, பெப். 09

**"எங்கள் ஆட்சியின் போது, 29 ஒக்ரோபர் 2019ஆம் வருடம் வெளியிடப்பட்ட அரச வர்த்தமானியின்படி, நுவரெலியா, காலி, இரத்தினபுரி ஆகிய மாவட்டங்களின் பழைய பிரதேச செயலகங்கள் பிரிக்கப்பட்டோ, தரமுயர்தப்பட்டோ புதிய முழுமையான பிரதேச செயலகங்கள் உருவாக்கப்பட வேண்டும் என்பதே அரச முடிவு.**

இதன்படி புதிதாக வந்த இந்த ஆட்சியில், காலியின் பழைய உப பிரதேச செயலகங்கள், புதிய முழு பிரதேச செயலகங்களாக தரமுயர்த்தப்பட்டு கோலாகலமாக திறந்தும் வைக்கப்பட்டுள்ளன. ஆனால், அதே அரச வர்த்தமானியில் கூறப்பட்டுள்ள நுவரெலியா மாவட்டத்துக்கான ஐந்து மேலதிக முழு பிரதேச செய லகங்கள் உருவாக்கப்படவேண்டும் என்பதை உதாசீனம் செய்துவிட்டு, இரண்டு உப பிரதேச செயலகங்களை மாத்திரம் பெயரளவில் இந்த அரசு திறந்து வைத்துள்ளது.

காலிக்கு வெள்ளிகரண்டி. நுவரேலியாவுக்கு தகரம். இது இன பாரபட்சமில்லையா?"

இவ்வாறு கேள்வி எழுப்பியுள்ளார் தமிழ் முற்போக்கு கூட்டணி-ஜனநாயக மக்கள் முன்னணி தலைவர் மனோ கணேசன்.

அவர் மேலும் தெரிவிக் கையில்-

மனித உரிமை செயற்பாட்டாளர் அம்பிகா ஒரு நீண்டகால மனித உரிமை போராளி. அவரை நான் 2005ம் வருடம் முதல் அறிவேன். கொழும்பில் வெள்ளை வான் கடத்தல்களுக்கு எதிராக எமது மக்கள் கண்காணிப்புக் குழு ஆரம்பிக்கப்பட்ட காலம் முதல் அவர் எம்முடன் இணைந்து செயல் பட்டார். அவர் ஐரோப்பிய ஒன்றியத்துக்கு வழங்கிய சாட்சியத்தில் இந்த பிரதேச செயலகங்கள் பற்றி கூறினாரோ என எனக்கு தெரியாது. ஆனால் இந்நாட்டு இனப் பாரபட்ச நடப்பில் இது ஒரு சிறிய உதாரணம்.

கடந்த 74 வருட காலமாக இந்நாட்டில் தமிழ் மக்களுக்கு உரிமை பகிர்வு, அபிவிருத்தி இரண்டிலும், பித்தளை, தகரக் கரண்டிகள்தான் காட்டப்பட்டுள்ளன. அத்தனைக்கும் காலியை விட, நுவரேலியாவில் தான் இந்த பிரதேச செயலர் பிரிவில் ஜனத்தொகை அதிகம். நீண்டகாலமாக அங்கே பிரதேச சபைகளே போதுமானளவு இல்லாமல் இருந்து அவற்றை நாமே பிரித்து பெற்றுக்கொடுத்தோம். இப்போது அவற்றுக்கு சமாந்திரமாக பிரதேச செயலகங்களை கேட்டால் கிடைக்கவில்லை. அமைச்சரவை தீர்மானம் எடுத்து வர்த்தமானி பிரகடனம் செய்தாலும் கிடைக்கவில்லை.

ஆனால், அதே வர்த்தமானியில் நுவரெலியாவுடன் சேர்ந்து அறிவிக்கப்பட்ட காலிக்கு கொடுக்கிறீர்கள். நுவரெலியாவில் தமிழர் பெரும்பான்மையாக வாழ்கிறார்கள். ஒருவேளை நுவரெலியாவில் தமிழர் வாழாவிட்டால் கிடைத்திருக்கும். அப்படியானால், இதுதானே இன பாரபட்சம்?

அரசாங்க உடன்பாடு ஏற்பட்டு வர்த்தமானியில் பிரகடனம் செய்யப்படுவதுதான், இதில் மிக முக்கிய அங்கம். அதை நாம் செய்து முடித்து விட்டோம். ஆட்சி முன்கூட்டியே கலைக்கப்பட்டது. இன்றைய ஆட்சி நாம் விட்ட இடத்தில் இருந்து முன் கொண்டு செல்ல வேண்டும். காலிக்கு மாத்திரம் முன் கொண்டு செல்கிறார்கள். நுவரேலியாவுக்கு இல்லை. அப்படியானால், இந்த நாட்டில் நாம் மாற்றாந்தாய் மக்கள். இதுதான் பாரபட்சம்.

வெள்ளிக் கரண்டி பெரும்பான்மை மக்களுக்கு என்றால், ஏனைய மக்களுக்கு பித்தளை கரண்டி. மலையக மக்களுக்கு பித்தளை கரண்டிகூட கிடைப்பதில்லை. வெறும் தகரம்தான். அதனால்தான் பிரதேச சபைகள் பெறுவதற்கே 1987இல் இருந்து முப்பது வருடங்கள் நமது மக்கள், தமிழ் முற்போக்கு கூட்டணி ஆட்சியில் பங்காளி ஆகும்வரை காத்திருந்தார்கள். இத்தகைய இன பாரபட்சங்களைதான் அம்பிகா சற்குருநாதன் எடுத்து கூறியுள்ளார் என்பதை படித்த பேராசிரியர் அமைச்சர் ஜி.எல். பீரிஸுக்கு எடுத்து கூறுகிறேன்-என்றார். (அ)

# சுங்கம் வசமுள்ள அத்தியாவசியப் பொருட்களை உடன் விடுவிக்குமாறு ஜனாதிபதி ஆலோசனை!

கொழும்பு, பெப். 09

சுங்கத் திணைக்களத்தின் வசமுள்ள அத்தியாவசியப் பொருட்கள் அடங்கிய கொள்கலன் ணகளை உடனடியாக விடுவிக்கத் தேவையான நடவடிக்கைகளை முன்னெடுக்குமாறு ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ உரிய அதிகாரிகளுக்கு ஆலோசனை வழங்கினார்.

சந்தையில் உணவுப் பொருட்கள் உள்ளிட்ட அத்தியாவசியப் பொருட்களுக்குத் தட்டுப்பாடு ஏற்படாதிருப்பதை இலக்கு வைத்தே, ஜனாதிபதியால் இந்தத் தீர்மானம் எடுக்கப்பட்டது.

உணவு உள்ளிட்ட அத்தியாவசியப் பொருட்களைத் தட்டுப்பாடின்றி வழங்குவதற்காக, நிதி அமைச்சர் பஸில் ராஜபக்ஷ தலைமையிலான குழுவொன்றை நியமிக்கவும் ஜனாதிபதி நடவடிக்கை எடுத்தார்.

சுங்கத் திணைக்களத்தின் வசமுள்ள அத்தியாவசியப் பொருட்களை விடுவிப்பது தொடர்பிலான விசேட கூட்டமொன்று, ஜனாதிபதி அலுவலகத்தில் நேற்று முன்தினம் பகல் நடைபெற்றது.

உணவு உள்ளிட்ட அத்தியாவசியப் பொருட்களைத் தட்டுப்பாடின்றி பொதுமக்கள் கொள்வனவு செய்வதற்கான ஏற்பாடுகளைச் செய்ய வேண்டுமென்று எடுத்துரைத்த ஜனாதிபதி, அதற்காக தற்போதிருந்தே உரிய திட்டமிடல்களை வகுக்குமாறு, அதிகாரிகளுக்கு அறிவுறுத்தினார்.

தெரிவு செய்யப்பட்ட சில அத்தியாவசியப் பொருட்களின் கொள்வனவுக்குச் சந்தர்ப்பம் வழங்குமாறும் இதன்போது, குறுகிய எண்ணங்களுடன் அதிகப்படியான பொருட்களை இறக்குமதி செய்வதற்கோ அல்லது பொருட்களைப் பதுக்கி வைப்பதற்கோ இடமளிக்கக் கூடாது என்றும் ஜனாதிபதி எடுத்துரைத்தார்.

உணவு உள்ளிட்ட அத்தியாவசியப் பொருட்களைச் சந்தைக்கு விநியோகிப்பது தொடர்பில் முறையான பொறிமுறையொன்று உடனடியாகத் தயாரிக்கப்பட வேண்டுமென்று அறிவுறுத்திய ஜனாதிபதி, இது தொடர்பான ஒழுங்குபடுத்தல்கள் மற்றும் மேற்பார்வைப் பணிகளை புதிய குழுவிடம் ஒப்படைத்தார்.

அமைச்சர்களான பஸில் ராஜபக்ஷ, பந்துல குணவர்தன, ரோஹித்த அபேகுணவர்தன, மத்திய வங்கியின் ஆளுநர் அஜித் நிவாட் கப்ரால், இராஜாங்க அமைச்சர் லசந்த அழகியவன்ன, ஜனாதிபதியின் செயலாளர் காமினி செனரத், நிதி அமைச்சின் செயலாளர் எஸ்.ஆர்.ஆட்டிகல ஆகியோரும் நிதி அமைச்சு மற்றும் சுங்கத் திணைக்களத்தின் சிரேஷ்ட அதிகாரிகள் பலரும் இந்தக் கலந்துரையாடலில் கலந்துகொண்டனர். (அ)




# 3 படகுகளுடன் 11 இந்திய மீனவர் நெடுந்தீவுக் கடற்பரப்பில் கைது!

யாழ்ப்பாணம், பெப். 09

இலங்கை கடற்பரப்பிற்குள் அத்துமீறி நுழைந்து மீன்பிடியில் ஈடுபட்டிருந்த இந்திய மீனவர்கள் 11 பேர் இலங்கை கடற்படையினரால் கைது செய்யப்பட்டனர்.

அத்துமீறி மீன்பிடியில் ஈடுபட்ட இந்திய மீனவர்கள் 11 பேர் மூன்று படகுகளுடன் நேற்றுமுன்தினம் இரவு இலங்கை கடற்படையினரால் கைது செய்யப்பட்டனர்.

நேற்று முன்தினம் நள்ளிரவு நெடுந்தீவு அருகே இந்திய மீனவர்கள் மீன்பிடித்துக் கொண்டிருந்தபோது அப்பகுதியில் ரோந்துப் பணியில் ஈடுபட்ட கடற்படையினர் ராமேஸ்வரம் பகுதியைச் சேர்ந்த மூன்று படகுகளையும் அதில் இருந்த 11 மீனவர்களையும் கைது செய்தனர்.

கைது செய்யப்பட்டவர்கள் கடற்படையினரால் மயிலிட்டி மீன்பிடித் துறைமுகத்துக்கு அழைத்து வரப்பட்ட நிலையில் மீனவர்களுக்கு மலேரியா, கொரோனா பரிசோதனை மேற்கொள்ளப்பட்டு கடற்றொழில் நீரியல் வள திணைக்கள அதிகாரிகளிடம் சட்ட நடவடிக்கைக்காக கையளிக்கப்பட்டனர். (அ-03)

# சட்டத்தரணிகள் குழுமீது இணுவிலில் தாக்குதல்!

யாழ்ப்பாணம், பெப். 09

சுகாதார பரிசோதகர், சட்டத்தரணிகள், காவலாளி மீதான குழு மீது ஐவர் கொண்ட கும்பல் ஒன்று வழிமறித்துத் தாக்குதல் நடத்தியுள்ளது.

இணுவில் பகுதியில் நேற்று முன்தினம் இரவு 11 மணியளவில் இந்தத் தாக்குதல் நடத்தப்பட்டுள்ளதாகக் கூறப்படுகின்றது.

இந்தச் சம்பவம் குறித்து உடனடியாகப் பொலிஸாருக்கு தகவல்அளித்தபோதும் நேற்று காலை வரை பொலிஸார் சம்பவ இடத்துக்கு வருகை தரவில்லை என்று கூறப்பட்டது.

எனினும், இந்தச் சம்பவம் தொடர்பில் பொதுச் சுகாதாரப் பரிசோதகர் மற்றும் சட்டத்தரணிகள் சுன்னாகம் பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு பதிவு செய்துள்ளனர். (ஐ-3)

# டிலான் பெரேராவுக்கு கொரோனா

கொழும்பு, பெப். 09

ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனவின் பதுளை மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் டிலான் பெரேராவுக்கு கோவிட் தொற்று உறுதியாகியுள்ளது.

இதன்படி, பாராளுமன்ற உறுப்பினர் திலான் பெரேரா, கோவிட்-19 தொற்றுக்குள்ளான 50 ஆவது பாராளுமன்ற உறுப்பினர் ஆவார்.

இதேவேளை, ஐக்கிய மக்கள் சக்தியின் கம்பஹா மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் ஹர்ஷன ராஜகருணா மற்றும் ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனவின் பாராளுமன்ற உறுப்பினர் லலித் எல்லாவல ஆகியோருக்கு கடந்த ஞாயிற்றுக்கிழமை கோவிட் தொற்று உறுதிப்படுத்தப்பட்டமை குறிப்பிடத்தக்கது. (அ)



பருத்தித்துறை, கிராமக்கோட்டுச் சந்திக்கு அருகாமையிலுள்ள பருத்தித்துறை பிரதேச சபைக்குரிய காணியில் பிரதேச அபிவிருத்தி உதவித் திட்டத்தின் கீழ் 10.85 மில்லியன் ரூபாவில் கடைத்தொகுதி அமைக்கும் பணி ஆரம்பமானது. கடைத்தொகுதிக்கான அடிக்கல்லை நேற்று பருத்தித்துறை பிரதேச சபையின் தவிசாளர் அ. சா. அரியகுமார் நாட்டிவைத்தார். (வடமராட்சி நிருபர்)

# உள்ளூராட்சிமன்றத் தேர்தல் இந்த ஆண்டுக்குள் நடக்கும்

## தேர்தல் ஆணைக்குழு கூறுகிறது

கொழும்பு, பெப்.09

இவ்வாண்டு இறுதிக்குள் உள்ளூராட்சி மன்றத் தேர்தலை நடத்துவதற்கு எதிர்பார்ப்பதாக தேர்தல் ஆணைக்குழுவின் தலைவர் நிமால் புஞ்சிஹேவா தெரிவித்துள்ளார்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவிக்கையில்,

தேர்தல் நடத்தப்பட்டால் அது சுகாதார வழிமுறைகளை பின்பற்றியே மேற்கொள்ளப்படும்.

தேர்தல் நடத்துவது குறித்து உத்தியோகத்தர்களை பயிற்றுவித்தல், வாக்குச் சாவடிகள் நிறுவுதல் குறித்த ஆரம்ப கட்ட பணிகள் தற்போது மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

தேர்தல் காலத்தில் சட்டங்களை அமுல்படுத்துவது குறித்து பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரிகள் மற்றும் சிரேஸ்ட பொலிஸ் உத்தியோகத்தர்களுக்கு தெளிவூட்டல் செய்யும் நடவடிக்கை தற்போது மேற்கொள்ளப்பட்டு வருகின்றது - என்றார். (அ)

# சிரேஷ்ட பிரஜைகளுக்கு முன்னுரிமை அளியுங்கள்!

அக்கரைப்பற்று, பெப். 09

அம்பாறை மாவட்டத்தின் பல பகுதிகளிலுமுள்ள முதியோர் மற்றும் சிரேஷ்ட பிரஜைகள் தமது தேவைகளை நிறைவேற்றுவதற்காக சமூகமளிக்கும்போது சேவை நிலையங்களில் முன்னுரிமை வழங்கி, அவர்களின் தேவைகளை நிறைவேற்றிக் கொடுக்குமாறு, சாய்ந்தமருது ஓய்வுதியர் சங்கம் கேட்டுள்ளது.

தமது வாழ்நாளில் பலவிதமான திணைக்களங்களிலும் பாடசாலைகளிலும் சேவையாற்றி தற்போது வயதாகி ஓய்வான நிலையில் தமக்கேற்படும் தேவைகளை பூர்த்தி செய்ய அவர்கள் முயற்சிக்கின்றனர்.

இந்நிலையில், அரச திணைக்களங்கள் மற்றும் வங்களுக்கு அவர்கள் வருகை தரும்போது, நீண்ட நேரம் வரிசையில் காத்திருக்க வேண்டியிருப்பதால் பல கஷ்டங்களை எதிர்நோக்குகின்றனர். இதை சுட்டிக்காட்டியே மேற்படி கோரிக்கை விடுக்கப்பட்டதாகத் தெரிவிக்கப்பட்டது. (ஐ)

# 11 இலட்சத்து 70 ஆயிரம் பேர் ஒரு தடுப்பூசிகூட ஏற்றவில்லை

கொழும்பு, பெப். 09

நாட்டில் 20 வயதுக்கு மேற்பட்ட 11 இலட்சத்து 70 ஆயிரம் பேர் இதுவரை எந்தவொரு கோவிட் தடுப்பூசியையும் பெற்றுக் கொள்ளவில்லை என உள்நாட்டலுவல்கள் இராஜாங்க அமைச்சின் செயலாளர் எம். எச். எம். சித்ரானந்த தெரிவித்தார்.

கடந்த சில வாரங்களாக முன்னெடுக்கப்பட்ட மதிப்பீட்டில் இந்த விடயம் தெரியவந்துள்ளது என என அவர் சுட்டிக்காட்டினார்.

"20 தொடக்கம் 29 வயதுக்கிடைப்பட்டவர்களில் 7 லட்சத்து 19 ஆயிரம் பேர் இது வரை எந்தவொரு கொவிட் தடுப்பூசியையும் பெற்றுக் கொள்ளவில்லை.

அத்துடன், 30 தொடக்கம் 60 வயதுக்கிடைப்பட்டவர்களில் 03 இலட்சத்து 86 ஆயிரத்து 408 பேர் இதுவரை தடுப்பூசி பெற்றுக் கொள்ள வில்லை.

60 வயதுக்கு மேற்பட்டவர்களில் 64 ஆயிரத்து 234 பேர் கோவிட் தடுப்பூசியை பெற்றுக் கொள்ளவில்லை என்பது தெரியவந்துள்ளது.

அரசினால் முன்னெடுக்கப்படும் கோவிட் தடுப்பூசியேற்றல் வேலைத்திட்டம், கிராமிய மட்டத்திலும் செயற்படுத்தப்பட்டுவரும் நிலையில் சிலர் தடுப்பூசியை பெற்றுக் கொள்ளாதிருப்பது கவலைக்குரிய விடயமாகும்." - எனவும் அவர் குறிப்பிட்டார். (அ)

# பெருந்தோட்டப் பகுதி மக்களுக்கு கோதுமை மா வழங்கப்படவில்லை

## சாணக்கியன் எம்.பி. சுட்டிக்காட்டு

கொழும்பு, பெப். 09

பெருந்தோட்டப்பகுதி மக்களுக்கு கோதுமைமா நிவாரணம் வழங்கப்படும் என உறுதியளிக்கப்பட்டி ருந்தாலும், அவ்வாறு கோதுமை மா வழங்கப்படவில்லை - என்று தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் பாராளுமன்ற உறுப்பினர் இரா. சாணக்கியன் தெரிவித்தார்.

பாராளுமன்றத்தில் நேற்று நடைபெற்ற விவாதத்தில் கலந்து கொண்டு உரையாற்றுகையிலேயே அவர் இவ்வாறு கூறினார்.

இது தொடர்பில் அவர் மேலும் கூறியவை வருமாறு:

பெருந்தோட்ட மக்களுக்கு நிவாரண விலையில் கோதுமை மா வழங்கப்படும் என உறுதியளிக்கப்பட்டது. ஆனால் தமக்கு மா வழங்கப்படவில்லை என மக்கள் தெரிவிக்கின்றனர். கோதுமை மாவ இல்லை என நிதி அமைச்சரும் குறிப்பிடுகின்றார். இறக்குமதி செய்ய நடவடிக்கை எடுக்கப்படும்-என்றார்.

# பருத்தித்துறை பொலிஸில் அரையாண்டு பரிசோதனை

வடமராட்சி, பெப். 8

பருத்தித்துறை பொலிஸ் நிலையத்தின் அரையாண்டு பரிசோதனை நேற்று செவ்வாய்க்கிழமை இடம்பெற்றது.

நேற்றுக் காலை 7:30 மணியளவில் பரிசோதனைக்காக பருத்தித்துறை பொலிஸ் நிலையத்திற்கு வருகை தந்த காங்கேசன்துறை சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர் றஞ்சித் பொட்டச்சி, பருத்தித்துறை உதவி பொலிஸ் அத்தியட்சகர் சுஜீவ இத்துமால்கொட, பருத்தித்துறை பொலிஸ் பொறுப்பதிகாரி பிரியந்த சமரசிங்க ஆகியோர் ஏற்றுக் கொண்டனர்.

இதைத் தொடர்ந்து பொலிஸ் வாகனங்கள், கட்டடங்கள், உட்பட்ட பொலிஸாரின் அனைத்து சொத்துக்களும் ஒழுக்க கட்டுப்பாடுகள், பொலிஸ் நடவடிக்கைகள் என்பன கண்காணிக்கப்பட்டன. (ஐ-2)



# நுவரெலியாவில் குவியும் சுற்றுலாப் பயணிகள்!

## கோவிட் அச்சத்தில் அங்கு வாழும் மக்கள்

கொழும்பு, பெப். 09

நுவரெலியாவில் வார விடுமுறை நாட்களில் சுற்றுலா பயணிகளின் வருகை அதிகரித்து வருவதால் கொரோனா தொற்று அதிகரித்து விடும் என்ற அச்சம் நுவரெலியா வாழ் மக்கள் மத்தியில் ஏற்பட்டுள்ளது.

வார இறுதியில் சனி, ஞாயிற்றுக்கிழமைகளிலும் ஏனைய விடுமுறை நாட்களிலும் வெளிமாவட்டங்களிலிருந்தும் வெளி நாடுகளிலிருந்தும் பெருந்தொகையான சுற்றுலாப் பயணிகள் நுவரெலியாவுக்கு செல்கிறார்கள்.

இவ்வாறு நுவரெலியாவுக்கு வருகைதரும் சுற்றுலாப் பயணிகள் கொரோனா தொற்று தடுப்புப் பிரிவினரால் அறிவிக்கப்பட்டுள்ள சுகாதார நடமுறைகளை பின்பற்றுவதில்லை.

முகக் கவசங்களை அணியாமலும் இடை வெளிகளை பின்பற்றாமலும் அங்கும் இங்கும் அலைந்து திரிகின்றனர். இதனை எவரும் கண்டுக்கொள்வ தில்லை.இதனால் இங்குள்ள மக்கள் கொரோனா தொற்று அதிகரித்து விடும் என்ற அச்சத்தில் இருக்கின்றனர்.

விடுமுறை நாட்களில் விக்டோரியா பூங்காவிலும் கிரகறி பூங்காவிலும் கிறகறி வாவி கரையிலும் சுற்றுலாப் பயணிகள் கூட்ட கூட்டமாக குவிந்துள்ளனர். அத்தோடு நுவரெலியா வாவிக் கரையில் அமைக்கப்பட்டுள்ள களியாட்ட நிகழ்வுகளிலும் பெருந்தொகையான சுற்றுலாப் பயணிகள் குவிந்து காணப்படுகின்றார்கள்.

இவ்வாறு சுற்றுலாப் பயணிகள் விடுமுறை நாட்களில் நுவரெலியாவுக்கு செல்வதால் வாகன தரிப்பிடங்களிலும் பிராதான பாதைகளிலும் போக்குவரத்து நெரிசல் ஏற்பட்டுள்ளது.

இதேவேளை, நாடு முடக்கப்பட்டிருந்த வேளையில் கொரொனா தொற்றாளர்கள்

குறைவாகவே அடையாளம் காணப்பட்டனர்.

ஆனால் தற்போது தொற்றாளர்கள் அதிகரித்து வருகின்றனர். தற்போதும்

25 தொற்றாளர்கள் நுவரெலியா மாவட்ட பொது வைத்தியசாலையில் சிகிச்சை பெற்று வருகின்றனர். தொற்று தடுப்பு வழிமுறைகளை பின் பற்றாததால் தொற்றாளர்கள் அதிகரித்து வருவதாக நுவரெலியா மாவட்ட பொது வைத்திய சாலை பணிப்பாளர் மருத்துவர் மகேந்திர செனிவிரன தெரி வித்தார். (அ)

# வடகொரியாவிடம் ஆயுதம் வாங்கியமை; சர்வதேச விசாரணையை கோர முடியாது!

## பஸில் ராஜபக்ஷ திட்டவட்டம்

**கொழும்பு, பெப். 09**

**“வடகொரியாவிடம் நாம் ஆயுதம் வாங்கிய நடவடிக்கை சட்டவிரோதமானது அல்ல. எனது இந்தக் கருத்தை அடிப்படையாகக் கொண்டு தமிழர் தரப்புக்கள் சர்வதேச விசாரணையை ஒருபோதும் கோர முடியாது.”**

- இவ்வாறு நிதி அமைச்சர் பஸில் ராஜபக்ஷ தெரிவித்தார்.

“இறுதிக்கட்டப் போரின் போது கறுப்புப் பணத்தை பயன்படுத்தி வடகொரியாவிடம் ஆயுதங்கள் வாங்கியதாக நீங்கள் தெரிவித்த கருத்தை போர்க்குற்ற ஒப்புதல் வாக்கு மூலமாகக் கருதி சர்வதேச விசாரணை முன்னெடுக்கப்பட வேண்டும் என்று தமிழர் தரப்புக்கள் வலியுறுத்துகின்றன. இது தொடர்பில் உங்கள் நிலைப்பாடு என்ன?“ என்று நிதி அமைச்சர் பஸில் ராஜபக்ச விடம், சர்வதேச ஊடகம் ஒன்றின் கொழும்புச் செய்தியாளர் கேள்வி எழுப்பினார்.

அதற்குப் பஸில் ராஜபக்ஷ, “தமிழீழ விடுதலைப் புலிகளுக்கு எதிரான போர் உச்சம் பெற்ற காலப்பகுதியில் கறுப்புச் சந்தையில் கிடைத்த பணத்தைப் பயன்படுத்தியே இலங்கை வடகொரியாவிடமிருந்து ஆயுதங்களை வாங்கியது என்ற கருத்தை நான் ஒருபோதும் வாபஸ் பெறப்போவதில்லை. அன்று நடந்த உண்மையைத் தான் இன்று கூறினேன். அது சட்டவிரோத நடவடிக்கை அல்ல. அதை எம்மால் எந்தச் சந்தர்ப்பத்திலும் நியாயப்படுத்த முடியும். எனினும், இந்தக் கருத்தை ஊடகங்கள் என்னிடம் திரும்பத் திரும்பக் கிளறுவதை நான் விரும்பவில்லை. சர்வதேசப் பிரச்னையை எழுப்ப நான் விரும்பவில்லை. எனது கருத்தைத் தமிழ்த் தரப்பினர் அல்லது புலம்பெயர் தரப்பினர் சர்வதேச விசாரணைக்கு வலியுறுத்த முடியாது. ஏனெனில், பயங்கரவாதிகளான தமிழீழ விடுதலைப்புலிகளை அழித்தொழிக்கவே அன்று ஆயுதங்களைக் கொள்வனவு செய்தோம். நாம் தமிழ் மக்களுக்கு எதிராகப் போர் செய்ய ஆயுதங்களைக் கொள்வனவு செய்யவில்லை” - என்று பதில் வழங்கினார். (அ)

# மஹிந்தானந்தவுக்குஎதிரான வழக்கை மீளப்பெற உத்தரவு

கொழும்பு, பெப். 09

அமைச்சர் மஹிந்தானந்த அளுத்கமகேக்கு எதிராக இலஞ்ச ஊழல் ஆணைக்குழு முன்வைத்த குற்றச்சாட்டில் அரசாங்கத்துக்கு 2000 கோடி ரூபாய் நட்டம் ஏற்பட்டுள்ளதாக அறிவிக்கப்பட்டது,

இந்த வழக்கு கொழும்பு மேல் நீதிமன்றத்தின் மூவரடங்கிய நீதியரசர்கள் குழாம் முன்னிலையில் விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்பட்ட போதே இவ்வாறு தெரிவிக்கப்பட்டது.

வழக்கை முன்னெடுப்பதில் சிரமம் இருந்தால் அதனை மீளப்பெற்றுக்கொள்ளுமாறும் நீதிமன்றத்தை நகைச்சுவை இடமாக மாற்றக்கூடாது என்றும் இலஞ்ச ஊழல் ஆணைக் குழு அதிகாரிக்கு நீதிபதி பிரதீப் ஹெட்டியாராச்சி உத்தரவிட்டார்.

கடந்த 2015 ஆம் ஆண்டு நடைபெற்ற ஜனாதிபதி தேர்தலின்போது சதோச நிறுவனத்தின் ஊடக 1400 கரம்போட்கள் மற்றும் 11000 டாம் போட்களை இறக்குமதி செய்து அவற்றை அரசியல் செயல்பாடுகளுக்காக பயன்படுத்தியதாக குற்றம் சாட்டப்பட்டது.

இதன் மூலம் அரசாங்கத்திற்கு 5 கோடி ரூபாய் நட்டம் ஏற்பட்டதாக தெரிவித்து இலஞ்ச ஊழல் ஆணைக் குழுவால் மஹிந்தானந்த அளுத்கமகே மற்றும் சதோச நிறுவனத்தின் முன்னாள் தலைவர் நளின் பெர்னாண்டோ ஆகியோருக்கு எதிராக இந்த வழக்கு தாக்கல் செய்யப்பட்டது. (அ)

# சர்வதேசத்துடன் எவ்வாறு பேசுவதென்று கூட்டமைப்பிடம் கற்றுக் கொள்ளுங்கள்!

## அரசுக்கு சாணக்கியன் எம்.பி. ஆலோசனை

கொழும்பு, பெப். 09

சர்வதேசத்துடன் எவ்வாறு கதைப்பதென்று, தமிழ்த் தேசியக் கூட்டமைப்பிடமிருந்து கற்றுக் கொள்ளுங்கள் என கூட்டமைப்பின் பாராளுமன்ற உறுப்பினர் இரா.சாணக்கியன் தெரிவித்துள்ளார்.

பாராளுமன்றத்தில் நேற்று செவ்வாய்கிழமை உரையாற்றிய போதே அவர் இவ்வாறு குறிப்பிட்டார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-

இன்று நாட்டில் சுகாதார பணியாளர்களின் வேலை நிறுத்தம் நடைபெறும் அதேநேரம், பொது வைத்தியசாலைகளில் மருந்துத் தட்டுப்பாடும் ஏற்பட்டுள்ளது.

நான் கொரோனாவினால் பாதிக்கப்பட்டு தனிமையில் இருந்தபோது முகநூல் உள்ளிட்ட சமூக வலைத்தளங்களில் சில காணொளிகளைப் பார்த்தேன்.

இதில் ஒன்றில், ஹிட்லரைப் போன்று ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ ஆட்சி செய்ய வேண்டும் என்றுக் கூட ஒரு சிலர் கூறியிருந்தனர். உண்மையில், இன்று ஹிட்லரைப் போன்றுதான் ஜனாதிபதி ஆட்சி நடத்தி வருகிறார். ஹிட்லர் தனது கடைசி காலத்தில் ஜேர்மானியர்கள் எத்தனைப் பேர் இறந்தாலும் பரவாயில்லை என்று தனது கொள்கையை செயற்படுத்தி வந்தார்.

அதேபோன்றுதான் ஜனாதிபதி கோட்டாபயவும் செயல்பட்டு வருகிறார். ஜனாதிபதிக்கு நெருக்கமானவர்கள் ஒவ்வொருவராக வழக்குகளில் இருந்து விடுதலை செய்யப்படுகிறார்கள்.

இன்று நாட்டில் நீதிக்கு என்ன நடந்தது எனும் கேள்வி எழுந்துள்ளது. நாட்டில் இன்று பொருளாதார யுத்தம் ஒன்று இடம்பெற்று வருகிறது. இதில் ஜனாதிபதி உள்ளிட்ட பொது ஜன பெரமுனவினர் தோல்வியடைந்து வருகிறார்கள்.

எனவே, இனியும் மக்களை துன்பத்துக்கு உள்ளாக்க வேண்டாம் என அரசாங்கத்திடம் கேட்டுக் கொள்கிறோம். கொரோனாவினால் பல உயிர்களை நாம் இழந்துவிட்டோம். இந்த நிலையில் உணவின்றியும் மக்களின் உயிர்களை பறிக்க வேண்டாம் நாம் இவர்களிடம் கேட்டுக் கொள்கிறோம்.

நாட்டின் பொருளாதாரத்தை முதலில் உயர்த்த நடவடிக்கை எடுக்கவும். பொருளாதாரத்தை முன்னேற்ற முடியாத தரப்பிடம் இந்த நாடு இன்று சிக்குண்டுள்ளது.

கருறுப்புப் பணத்தைக் கொண்டு வடகொரியாவிடமிருந்து ஆயுதம் வாங்கியதாக நிதியமைச்சர் கூறியுள்ளார். சரியாயின் இந்த விவகாரம் தொடர்பாக உடனடியாக விசாரணையை ஆரம்பிக்க வேண்டும்.

வடகொரியா என்பது பொருளாதாரத் தடைக்குட்பட்ட நாடாகும். இந்த நாட்டிலிருந்து எவ்வாறு கருப்புப் பணத்தை கொடுத்து ஆயுதம் வாங்க முடியும்?

விவசாய அமைச்சரோ பாதிக்கப்பட்ட விவசாயிகளுக்கு நஷ்டஈடு வழங்க 40 மில்லியன் ரூபாய் ஒதுக்கப்பட் டுள்ளதாகத் தெரிவித்துள்ளார். இது யாருடைய பணம்? விவசாயிகளுக்கு உரத்தை வழங்கியிருந்தால் அவர்கள் சீராக அவர்களின் வாழ்க்கையை கொண்டு சென் றிருப்பார்கள். அதனை விடுத்து மக்களின் வரிப்பணத்தைக் கொண்டு இவ்வாறு செய்வது சரியா? இது தொடர்பாக அரசாங்கம் சிந்திக்க வேண்டும். -என்றார். (அ)

# மின்வெட்டு நேரத்தை தெளிவாக அறிவிக்க ஜனாதிபதி பணிப்புரை

கொழும்பு, பெப். 09

மின்வெட்டு ஏற்பட்டால் மின்வெட்டு ஏற்படும் நேரத்தை தெளிவாக அறிவிக்கவேண்டும் என ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ பணிப்புரை விடுத்துள்ளார்.

ஆளுங்கட்சி உறுப்பினர்கள் குழுக் கூட்டத்தில் கலந்து கொண்டு உரையாற்றும்போதே ஜனாதிபதி இதனைத் தெரிவித்தார் என பொதுஜன பெரமுனவின் பாராளுமன்ற உறுப்பினர் ஜகத் குமார தெரிவித்தார்.

இது குறித்து சம்பந்தப்பட்ட நிறுவனங்களுக்கு தெரிவிக்கப்பட்டுள்ளதாகவும் அவர்கள் முடிவு செய்து தெரிவிக்க வேண்டும் என்றும் அவர் கூறினார்.எனினும் மின்சாரம் துண்டிக்கப்படாமல் மக்களைப் பாதுகாப்பதே அரசாங்கத்தின் முயற்சி எனவும் அவர் கூறினார். (அ)

# சுகாதார அமைச்சுடனான கலந்துரையாடல் தோல்வி

## சுகாதாரஊழியர்களின்போராட்டம்தொடர்கிறது

கொழும்பு, பெப். 09

சுகாதார அமைச்சுடன் மேற்கொள்ளப்பட்ட கலந்துரையாடல் இணக்கப்பாடின்றி நிறைவடைந்துள்ளதாக சுகாதார ஊழியர்களின் தொழிற்சங்கம் தெரிவித்துள்ளது.

இந்த நிலையில்,பணிப்புறக்கணிப்புப் போராட்டம் தொடர்ச்சியாக இடம்பெறும் என அந்த சங்கம் தெரிவித்துள்ளது.

சம்பள உயர்வு உள்ளிட்ட 7 முக்கிய கோரிக்கைகளை முன்வைத்து தாதியர்கள் உள்ளிட்ட 18 சுகாதார சேவை தொழிற்சங்கங்கள் நேற்றுமுன்தினம் காலை முதல் பணிப்புறக்கணிப்பு நடவடிக்கையில் ஈடுபட்டுள்ளன. இதன்காரணமாக பல வைத்திய சாலைகளின் சேவைகள் பாதிப்படைந்துள்ளன.

இதேவேளை, சுகாதார ஊழியர்களினால் முன்னெடுக்கப்படும் எதிர்ப்புப் போராட்டம் காரணமாக கொழும்பு நகர மண்டபப் பகுதியில் நேற்று மதியம் கடும் வாகன நெரிசல் ஏற்பட்டமை குறிப்பிடத்தக்கது. (அ)



# மாகாணசபை முறை பாதுகாக்கப்படுவது இன்றைய வரலாற்று அவசியம்

## வலியுறுத்துகிறது தமிழர் சமூகஜனநாயக கட்சி

“அரசியலமைப்புக்கான 13வது திருத்தத்தின் மூலமாகக் கொண்டுவரப்பட்ட மாகாணசபை முறை பாதுகாக்கப்படுவது இன்றைய வரலாற்று அவசியம்”என தமிழர் சமூக ஜனநாயக கட்சி வலியுறுத்தியிருக்கின்றது.

இக்கட்சியின் தலைவர் தி.ஸ்ரீதரன் இது தொடர்பாக அறிக்கை ஒன்றை வெளியிட்டுள்ளார். அந்த அறிக்கையின் விபரம் வருமாறு:

“இந்திய இலங்கை ஒப்பந்தம். அதனடிப்படையில் இலங்கையின் அரசியல் யாப்பில் இடம்பெற்றிருக்கும் 13 ஆவது திருத்தச் சட்டமூலம், மாகாண சபை முறைமை என்பன 1987, 1988 ஆண்டுகளில் நிகழ்ந்த மிக முக்கிய ஜனநாயக சீர்திருத்தம்.

இலங்கையின் மாகாண மட்டத்தில் அதிகாரங்களை பகிர்வதற்கும் ஐக்கியத்தை வலுப்படுத்துவதற்குமான பொறிமுறை.

இலங்கையின் தமிழ் சிங்கள மலையக முஸ்லிம் இதர சமூகங்கள் சமத்துவமாக ஒருங்கிணைந்து செயற்படுவதற்கான சிறந்த சாதனம்.

ஆனால் அக்காலத்தில் இருந்து பேரினவாதமும் வடக்கின் தலைவர்கள் என சொல்லப்பட்ட குறுந்தேசியவாத அரசியல்வாதிகளும் சரி அதனை செயற்படாமல் தடுப்பதில் கடந்த 30 ஆண்டுகளுக்கு மேலாக அதனை நிராகரித்தும் புறக்கணித்தும் சிதைத்தழித்தும் வந்திருக்கிறார்கள்.

மாகாணத்திலுள்ள அதிகாரங்கள் மத்திய அதிகாரங்கள் எவை எவை என 13 ஆவது திருத்தச் சட்டத்தில் குறித்துரைக்கப்பட்டுள்ளன.

அரசியல் சட்டத்தில் உள்ள அதிகாரங்களை ஏற்றுக்கொள்வதில் பேரினவாதிகளும் 13ஆவது ஒன்றும் கிடையாது என்று சொல்வதில் தமிழ் தலைவர்கள் எனப்படும் குறுந்தேசியவாதிகளும் போட்டி போட்டுக் கொண்டு செயல்படுகிறார்கள்.

உண்மையில் பிராந்திய மட்டத்தில் மாகாண மட்டத்தில் அதிகாரங்கள் பகிரப்படுவதை இவர்கள் விரும்புகிறார்களா என்பதில் மிகப்பெரிய சந்தேகம் இருக்கிறது.

அடுத்து வரும் தேர்தல் நோக்கங்களுக்காக மக்களை ஏமாற்றுவதற்கா அல்லது மாகாண மட்டத்தில் உணமையாகஅதிகாரம் வேண்டுமென நினைக்கிறார்களா என்ற கேள்வி இருக்கிறது.

13ஆவது மாகாண சபை முறையில் காணி, சட்டம், ஒழுங்கு, நிதி, கல்வி, சுகாதாரம், போக்குவரத்து, உள்ளூராட்சி, புனர்வாழ்வு உள்ளிட்ட விடயங்கள் குறித்துரைக்கப்பட்டுள்ளன.

இவற்றை எமது மாகாணங்களின் மக்களுக்காகவும் இலங்கையின் அனைத்து மாகாணங்களுக்கும் உறுதிப்படுத்துவது முதல் முக்கியமான காரியமாகும்.

ஆனால் அவற்றினை உறுதிப்படுத்துவதில் அக்கறை காட்டாமல் “கூட்டத்தில் கூடிநின்று கூவிப் பிதற்றலன்றி” காரியமாற்றுவதற்கு தமிழ் அரசியல் தலைவர்கள் எனப்படுவோர் தகுதியற்றவர்களாக இருக்கிறார்கள்.

மாகாணசபை முறை இல்லாமல் போனால் அதைவிட வேறொன்றும் நம் கண் முன்னே இக்காலத்தில் தெரியவில்லை.

பெரும் பிரயாசையுடன் இந்தியாவின் அனுசரணையுடன் கொண்டுவரப்பட்ட மாகாண சபை முறைமை கிழக்கு வடக்கு பிரிக்கப்பட்டு அதிகாரங்கள் மத்திக்கு எடுத்துச்செல்லப்பட்டு பலவீனப்படுத்தப்பட்டுள்ளது.

இலங்கையின் அரசியல் சட்டத்தில் உள்ளவற்றை முழுமையாக நடைமுறைப்படுத்த நாம் போராட வேண்டியிருக்கிறது.


ஆகக்குறைந்த இருப்பையும் இல்லாமல் செய்வதற்கு இனவாத சக்திகள் தேர்தல் வியாபாரிகள் முயல்கிறார்கள். இந்த சுயநல சக்திகளின் பிடியிலிருந்து மக்கள் விடுபட வேண்டும். நாம் என்ன நிலையில் இருக்கிறோம் என்பதை மக்கள் புரிந்து கொள்ள வேண்டும்.

காலங்காலமாக தமிழ் மக்களுக்கு துரோகம் இழைத்த மேட்டுக்குடி கனவான்களின் மோசடி அரசியலா அல்லது இரண்டு தலைமுறைகளாக அழிந்துபோன உங்களின் பிள்ளைகளின் நினைவுகளா உங்களை ஆட்கொள்கின்றன மக்களே நீங்கள் சிந்திக்க வேண்டும். பிள்ளைகளின் மரணங்களுக்கும் எம் சமூகத்தின் பேரழிவுக்கும் அர்த்தம் வேண்டும் அது இருப்பதையும் இல்லாமல் செய்வதல்ல.

13ஆவது திருத்தத்தின் மூலமாகக் கொண்டுவரப்பட்ட மாகாணசபை முறை பாதுகாக்கப்படுவது இன்றைய வரலாற்று அவசியம்.” ■

---

# கோட்டாபய அரசு 13 அவது திருத்தத்தை எவ்வாறு கையாளப்போகிறது?



**அகிலன்**

இலங்கை அரசியலமைப்பில் உள்ள 13 ஆவது திருத்தத்தின் எதிர்காலம் எவ்வாறானதாக அமையும் என்ற கேள்வி பலமாக எழுப்பப்பட்டிருக்கின்றது.

13 ஆவது திருத்தம் முழுமையாக நடைமுறைப்படுத்தப்பட வேண்டும் என்பது உட்பட்ட பல கோரிக்கைகளுடனான கடிதம் ஒன்றை ஆறு தமிழ்க் கட்சிகள் இணைந்து இந்தியப் பிரதமர் நரேந்திர மோடிக்கு கடந்த வாரம் அனுப்பி வைத்தன. கஜேந்திரகுமார் தலைமையிலான தமிழ்த் தேசிய மக்கள் முன்னணி அதற்கு எதிரான பேரணி ஒன்றை யாழ்ப்பாணத்தில் கடந்த வாரம் நடத்தியது.

இவ்வாறு 13 க்கு ஆதரவாகவும், எதிராகவும் கோசங்கள் தமிழர் தாயகத்தில் எழுப்பப்பட, புதிதாக வரப்போகும் அரசியலமைப்பில் 13 இல் சொல்லப்பட்டுள்ள அம்சங்கள் காணாமலாக்கப்பட்டு விடலாம் என்ற தகவலும் இப்போது கசிந்திருக்கின்றது.

கஜேந்திரகுமார் தலைமையிலான தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியினர் கடந்த ஞாயிற்றுக்கிழமை யாழ்ப்பாணத்தில் நடத்திய போராட்டம் 13 இற்கு எதிரான ஒன்றாகவே இருந்தது. தமிழ் மக்களுடைய உரிமைகளை 13 இற்குள் புதைப்பதற்கு தமிழ்க் கட்சிகள் சில முயற்சிக்கின்றன என சவப்பெட்டியுடன் இந்தப் போராட்டம் அவர்களால் முன்னெடுக்கப்பட்டது.

அவர்கள் சவப்பெட்டியுடன் பேரணியை நடத்த, ஜனாதிபதி கோட்டாபய தலைமையிலான அரசு 13 இற்கு புதைகுழி தோண்டி தயாராக வைத்திருப்பதாக ஞாயிற்றுக்கிழமை திவயின பத்திரிகை செய்தி வெளியிட்டுள்ளது.

புதிய அரசியலமைப்பு ஒன்று உருவாக்கப்படும் என்ற வாக்குறுதியுடன்தான் கோட்டாபய ஜனாதிபதித் தேர்தலில் போட்டியிட்டு வெற்றி பெற்றிருந்தார். அரசியலமைப்பை உருவாக்குவதற்காக குழு ஒன்றையும் அவர் அமைத்திருந்தார். அந்தக் குழு பலரிடமும் ஆலோசனைகளைக் கேட்டது. ஜனாதிபதி சட்டத்தரணி ரொமேஸ் டி சில்வா தலைமையிலான அந்தக் குழு தனது யோசனைகளை இப்போது பூர்த்தி செய்து இறுதி அறிக்கையை அடுத்த சில தினங்களுக்குள் ஜனாதிபதியிடம் கையளிக்கவிருக்கிறது.

இந்த அறிக்கையின் உள்ளடக்கம் உத்தியோகபூர்வமாக வெளிவரவில்லை என்றாலும், கசிந்துள்ள தகவல்களின் அடிப்படையில் செய்தி ஒன்றை திவயின வெளியிட்டிருக்கின்றது.

அதன்படி, புதிய அரசியலமைப்பில் மாகாண சபைகள் இருக்கப்போவதில்லை. இவ்வருட இறுதிக்குள் புதிய அரசியலமைப்பு பாராளுமன்றத்துக்குக் கொண்டு வரப்படும். இதனை மூன்றில் இரண்டு பெரும்பான்மையுடன் நிறைவேற்றுவது ராஜபக்சக்களுக்கு சிரமமானதாக இருக்கப்போவதில்லை.

அதேவேளையில், போரில் வென்றதைப்போல மாகாண சபைகளுக்கு சமாதி கட்டியதை தமது அடுத்த தேர்தல் வெற்றிக்கான முதலீடாக அவர்கள் பயன் படுத்தலாம். தென்னிலங்கை அரசியலில் நிலை இது.!

மாகாண சபைகள் தேவையில்லை என்பது ஜனாதிபதி கோட்டாபயவின் நிலைப்பாடாக பல சந்தர்ப்பங்களில் வெளிவந்திருக்கின்றது. இந்தியாவை அல்லது சர்வதேசத்தை சமாளிப்பதற்காக மாகாண சபைகளை புதிய அரசியலமைப்பில் வழங்க அவர் முன்வந்தாலும்கூட, முக்கியமான அதிகாரங்கள் அகற்றப்பட்ட ஒன்றாகத்தான் அது இருக்கும். ■

# ஈரானிய உளவு அமைப்புகளில் ஊடுருவிய இஸ்ரேலிய “மொசாட்” உளவுப்படை

## அதிர வைக்கும் தகவல்கள்




**மொசாட்டின் தாக்கம் ஈரானின் பல பகுதிகளில் மிக அதிகமாகவுள்ளது. ஈரானில் அதிஉயர் பதவிகளில் இருப்பவர்கள் அவர்களின் உயிருக்கும் பாதுகாப்பிற்கும் அஞ்ச வேண்டிய நிலை உள்ளது.**

ஜியார் கோல்

**2020**ஆம் ஆண்டு ஈரானின் முக்கிய அணு விஞ்ஞானி மொஹ்சென் ஃபக்ரிஸாதே கொல்லப்பட்ட பிறகு அவர், செயற்கை நுண்ணறிவின் உதவியுடன் இயங்கும் தொலைவிலிருந்து இயக்கப்படும் “ரிமோட் கன்ட்ரோல்” துப்பாக்கியால் கொல்லப்பட்டதாக தெரிய வந்தது.

இந்த மாதிரியாக ஓடும் காரில் வேறு யாருக்கும் உயிர் சேதம் வராமல் இலக்கு வைக்கப்பட்ட நபர் மட்டும் துல்லியமாக கொல்லப்படுவதற்கு களத்தில் நிகழ்நேர உளவு ஆற்றல் அவசியம்.

இந்த கொலை நடந்த பிறகு ஈரானின் உளவுத் துறை அமைச்சர் மஹ்மூத் அலாவி, இரண்டு மாதங்களுக்கு முன்னதாகவே ஃபக்ரிசாதே இதே இடத்தில் கொல்லப்படுவார் என பாதுகாப்பு படைகளை தான் எச்சரித்ததாக தெரிவித்தார்.

மேலும், இந்த கொலையை திட்டமிட்டவர் “ஆயுதப் படையை சேர்ந்தவர்”. ஆயுதப் படையினர் மீது உளவு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுவதில்லை என்றும் அவர் கூறினார்.

ஆனால் அவர் குறிப்பிட்ட அந்த ஆயுதப்படை, ஈரானிய இராணுவத்தில் உயர் படையான இஸ்லாமிய புரட்சிகர பாதுகாப்புப் படை ஆகும். அதன் உறுப்பினர் ஒருவரே இந்த தாக்குதலை திட்டமிட்டதாக அமைச்சர் மஹ்மூத் அலாவி மறைமுகமாக கூறினார். தமது எச்சரிக்கையை அலட்சியப்படுத்தி விட்டு குறித்த இடம், நேரம் மற்றும் நாளில் ஃபக்ரிஸாதேவை தாக்கும் அளவிற்கு ஈரானிய படையில் அந்த நபர் உயர் பதவியில் இருப்பவராக இருக்கக் கூடும் என்றும் அமைச்சர் மஹ்மூத் தெரிவித்தார்.

மொஹ்சென் ஃபக்ரிஸாதேவும் ஈரானிய புரட்சிகர பாதுகாப்புப்படையில் உறுப்பினராக இருந்தவர்.

வெளிநாடுகளுக்காக உளவு பார்த்தவர்கள் அடைக்கப்பட்டிருக்கும் தெஹ்ரானின் எவின் சிறைச்சாலையின் ஈரானிய பாதுகாப்பு படையைச் பகுதியை சேர்ந்த பல தளபதிகள் தடுத்து வைக்கப்பட்டதாக அந்த சிறையின் உள்வட்டாரங்கள் தெரிவித்ததன.

ஈரானிய புரட்சிகர பாதுகாப்புப் படையின் பெயருக்கு களங்கம் ஏற்படுவதைத் தடுக்க அங்கு அடைக்கப்பட்டிருப்பவர்களின் பெயர் மற்றும் பதவிகளை வெளியே தெரிவிக்காமல் ஈரானிய அரசு தவிர்த்து வருகிறது.

ஐஆர்ஜிசியின் குர்து படையின் முன்னாள் உளவு அதிகாரி ஒருவர், ஈரானிய தூதர்கள் மற்றும் ஐஆர்ஜிசியின் கமாண்டர்கள் சிலருக்கு எதிராக வெளிநாட்டு முகமைகள் சில ஆதாரங்களை சேகரித்துள்ளதாக தெரிவித்தார்.

பெண்களுடனான அவர்களின் தொடர்பு உட்பட பல ஆதாரங்களை அவர்கள் சேகரித்துள்ளனர். அந்த ஆதாரங்கள் அதிகாரிகளை மிரட்டுவதற்காக வெளிநாட்டு முகமைகளால் பயன்படுத்தப்படலாம் என அந்த அதிகாரி தெரிவித்துள்ளார்.

ஈரானின் தலைநகர் தெஹ்ரானிலிருந்து 30 கிமீட்டர் தூரத்தில் உள்ள ஒரு தொழிற்சாலைகள் நிறைந்த மாவட்டத்தில் பத்துக்கும் மேற்பட்டவர்கள் ஒரு சேமிப்புக்குக் கிடங்குக்குள் நுழைந்தனர்.

அங்கு 32 பாதுகாப்பு பெட்டகங்கள் இருந்தன. ஆனால் அதில் எந்த பெட்டகத்தில் முக்கிய கோப்புகள் உள்ளன என்பது அவர்களுக்கு தெரியும். ஏழு மணி நேரத்துக்கும் குறைந்த கால கட்டத்தில் அவர்கள் 27 பெட்டகங்களின் பூட்டை உருக்கினர். அதன்பின் அரை தொன்னுக்கும் அதிகமான அணு உலை தொடர்பான ஆவணங்களை அவர்கள் திருடிச் சென்றனர். ஆனால் இது குறித்து அதிகாரிகள் ஏதும் சொல்ல வில்லை.

மூன்று மாதங்களுக்கு பிறகு அந்த ஆவணங்கள் 1,2000 மைல்களுக்கு அப்பால் இஸ்ரேலின் டெல் அவிவ் நகரில் இருந்தது.

அப்போது இஸ்ரேல் பிரதமராக இருந்த பெஞ்சமின் நெதன்யாஹூ, திருடப்பட்ட ஆவணங்கள் மொசாட்டின் (இஸ்ரேலின் உளவுப் அமைப்பு) நடவடிக்கையால் கைப்பற்றப்பட்டவை என்று கூறி காட்சிப்படுத்தினார். அந்த சமயத்தில் அந்த ஆவணங்கள் போலியானவை என ஈரான் அதிகாரிகள் தெரிவித்தனர். அதேபோல அம்மாதிரியான ஒரு சம்பவம் நடைபெறவே இல்லை என்றும் அவர்கள் கூறினர்.

ஆனால், 2021ஆம் ஆண்டு ஆகஸ்டு மாதம் ஈரானிய ஜனாதிபதி ஹசன் ரூஹானி தனது பதவியின் கடைசி நாளன்று ஈரானின் அணு ஆவணங்களை இஸ்ரேல் திருடியதற்கான ஆதாரங்களை அமெரிக்க ஜனாதிபதி டொனால்ட் டிரம்பிடம் காண்பித்ததாக உறுதிப்படுத்தினார்.

2018ஆம் ஆண்டு ஏப்ரல் மாதம் ஒரு சிறப்பு செய்தியாளர் சந்திப்பில், நெதன்யாஹூ, ஒரு அறிவிக்கப்படாத அணு ஆயுத திட்டத்தில் மொஹ்சென் ஃபக்ரிஸாதேவின் பங்கு குறித்து விவரித்தார்.

“மொஹ்சென் ஃபக்ரிஸாதே... பெயரை நினைவில் வைத்து கொள்ளுங்கள்” என மீண்டும் வலியுறுத்தினார். ஃபக்ரிஸாதே இரு வருடங்கள் கழித்து கொலை செய்யப்பட்டார்.

**சுடுங்கள்... பேசாதீர்கள்!**

கடந்த 20 வருடங்களில் ஈரானின் பல முக்கிய அணு விஞ்ஞானிகள் கொல்லப்பட்டுள்ளனர். ஈரானின் அணு மற்றும் இராணுவ இடங்களில் பல சேதங்கள் நடைபெற்றுள்ளன. ஆனால் இதுவரை இம்மாதிரியான நடவடிக்கைகளில் ஈடுபட்டவர்களை ஈரான் பாதுகாப்பு படையினர் கைப்பற்றியதில்லை.

மஹ்மூத் அஹ்மத்நிஜாத் ஜனாதிபதியாக இருந்த கடைசி வருடமான 2013ஆம் ஆண்டில் ஐஆர்ஜிசி கொமாண்டர்கள், உளவுத் துறை அதிகாரிகள் மற்றும் இறந்தவர்கள் குறித்து மத உரையாற்றுபவர்கள் பலர் மொசாட்டிற்கு உளவு பார்த்த குற்றத்தின் பேரில் கைது செய்யப்பட்டதாக வதந்திகள் பரவின. ஆனால் அந்த குற்றச்சாட்டுகள் அதிகாரபூர்வமாக உறுதிப்படுத்தப்படவில்லை.

அதில் குற்றம்சாட்டப்பட்டவர்களில் ஒருவர் ஈரான் உளவுத் துறையில், இஸ்ரேலுக்கு எதிரான நடவடிக்கை பிரிவில் இருக்கும் அதிகாரி. ஈரானிய நீதிமன்றம் பொதுவெளியில் தெரிவிக்கா மல் அவர் மீது குற்றம் சுமத்தி, மரணத் தண்டனை விதித்து அதை நிறைவேற்றியது.

கடந்த வருடம்தான் அஹமதினேஜாத் தனது உளவுத் துறை அமைச்சகத்தில் மொசாட் நுழைந்துவிட்டதாக உறுதிப்படுத்தினார்.

அவர், “இஸ்ரேலிய உளவாளிகளை கட்டுப்படுத்த மற்றும் ஈரானில் இஸ்ரேல் வகுக்கும் திட்டங்களை ஒடுக்க நியமிக்கப்பட்ட மூத்த அதிகாரிகளே இஸ்ரேலிய முகவர்கள் ஆனது இயல்பானதா?” என்று தெரிவித்தார்.

இஸ்ரேல் அரிதாகவே தனது மொசாட் நடவடிக்கைகள் குறித்து பேசும். இஸ்ரேலிய பாதுகாப்பு படையின் ஓய்வு பெற்ற ஜெனரல் மற்றும் முன்னாள் பாதுகாப்பு அமைச்சகத்தின் அதிகாரி அமோஸ் கிலாட் இது சில நல்ல காரணங்களுக்காகதான் என தெரிவித்தார்.

“பொதுப்படையாக பேசுவதற்கு எதிரானவன் நான். நீங்கள் சுட விரும்பினால் சுட்டுவிட வேண்டும் அதை விடுத்து பேசிக் கொண்டு இருக்கக் கூடாது. மறைமுகமாக எந்த விளம்பரமும் இன்றி சிறப்பான வேலைகளை செய்வதே மொசாத்தின் வேலை என்று கூறப்படுகிறது.”

இன்று ஈரானின் பாதுகாப்பு மற்றும் உளவு அமைப்புகளில் உள்ள உயர் அதிகாரிகளை மொசாத் நெருங்கிவிட்டது என முன்னாள் ஈரானிய அதிகாரிகள் கவலைக் கொள்கின்றனர்.

முன்னாள் ஈரானிய உளவுத் துறை அமைச்சரும் ஜனாதிபதி ருஹானியின் மூத்த ஆலோசகருமான அலி யூனேசி நேர்காணல் ஒன்றில் இதுகுறித்து எச்சரிக்கை விடுத்தார். “மொசாட்டின் தாக்கம் ஈரானின் பல பகுதிகளில் மிக அதிகமாகவுள்ளது. ஈரானில் அதிஉயர் பதவிகளில் இருப்பவர்கள் அவர்களின் உயிருக்கும் பாதுகாப்பிற்கும் அஞ்ச வேண்டிய நிலை உள்ளது. ■



# புலமைச் சிகரம் — தரம் 5 புலமைப் பரிசில் மாணவர்களுக்கான வழிகாட்டி

**மாதிரிப் பரீட்சை வினாத்தாள்**

கல்வி tv CHANNEL

11. ஒரு வரிசையில் 25 மாணவர்கள் உள்ளனர். குமரன் அவ்வரிசையில் நடுவில் உள்ளான். குமரனுக்குப் பின்னால் ஆறாவதாக கண்ணன் நின்றான் எனின், கண்ணனுக்கும் குமரனுக்கும் இடையில் எத்தனை பேர் உள்ளனர்.


1) 6 2) 7 3) 5

12. கிணறு ஒன்றை வெட்டுவதற்கு 5 மனிதர்களுக்கு 12 நாட்கள் எடுத்தன. அவ்வேலையை 6 மனிதர்கள் எத்தனை நாட்களில் செய்து முடிப்பார்கள்.

1) 10 நாட்கள் 2) 6 நாட்கள் 3) 60 நாட்கள்


❖ **வெற்றிடத்திற்குப் பொருத்தமான எண்ணைத் தெரிவு செய்க.**

13.




1) 26 2) 23 3) 12

14.





1) 3 2) 6 3) 14

15.



அட்டை A அட்டை B

அட்டை Aயிலுள்ள (குறியீடு) எனும் குறியீட்டின் இடத்தில் B யிலுள்ள (குறியீடு) எனும் குறியீடு அமையுமாறு ஒட்டிய பின் காணக்கூடிய தோற்றத்தைத் தெரிவு செய்க.



1) 2) 3)

❖

| | நிரல்1 | நிரல்2 | நிரல்3 |
|---|---|---|---|
| நிரை1 | லை | இ | க |
| நிரை2 | டு | பா | பூ |

முதலாம் நிரல் இருக்கும் இடத்திற்கு இரண்டாம் நிரலையும் இரண்டாம் நிரல் இருந்த இடத்திற்கு முதலாம் நிரலையும் மாற்றுக.


16. மேற்கூறப்பட்ட மாற்றங்களைச் செய்த பின்பு முதலாம் நிரையிலுள்ள நிரல்-1 ஐயும் நிரல்-2 ஐயும் சேர்க்கும்போது வரும் சொல் என்ன?

1) பாடு 2) இலை 3) பூ

17. 3ஆம் நிரலில் 2 ஆம் நிரையில் அமைந்துள்ள ஓரெழுத்துச் சொல் என்ன?

1) க 2) பா 3) பூ

18. பின்வரும் படங்களை ஒழுங்குபடுத்தும்போது சரியாகக் காட்டும் விடையினைத் தெரிவு செய்க.



A B C D

1) CABD 2) CADB 3) CABD

19. கரன் படம் ஒன்றைக் காட்டி இதில் இருப்பவர் எனது சகோதரி என்றான், எனினும் இவள் எனது தங்கை அல்ல எனின், படத்தில் இருப்பவருக்கு கரன் என்ன உறவு முறை?

1) அக்கா 2) அண்ணா 3) தம்பி

20. சசியை விட மதி உயரம் கூடியவள். மதியை விட ரதி உயரம் குறைந்தவள். மதியை விட அபி உயரம் கூடியவள் எனின் மிகவும் உயரம் கூடியவர் யார்?

1) மதி 2) அபி 3) ரதி

## விடைகள்

11. 3
12. 1
13. 1
14. 2
15. 3

15. 3
16. 2
17. 3
18. 1
19. 3

---

கல்வி tv CHANNEL-1

**09.02.2022**
**புதன்கிழமை**

| நேரம் | தரம் | |
|---|---|---|
| 05.15 | தரம்-06 | கணிதம் |
| 06.00 | தரம்-07 | விஞ்ஞானம் |
| 06.45 | தரம்-08 | விஞ்ஞானம் |
| 07.30 | தரம்-09 | விஞ்ஞானம் |
| 08.15 | தரம்-10 | புவியியல் |
| 09.00 | மாணவர்களுக்கானது | ஆலோசனை |
| 09.15 | க.பொ.த.உயர்தரம் | அரசியல் |
| 10.15 | க.பொ.த.உயர்தரம் | கணக்கீடு |
| 11.15 | க.பொ.த.உயர்தரம் | இரசாயனவியல் |
| 12.15 | General knowledge | General knowledge |
| 12.30 | 06 TO சாதாரணதரம் | English |
| 01.15 | க.பொ.த. சா.தரம் | English |
| 02.00 | க.பொ.த. சா.தரம் | தமிழ் |
| 02.45 | க.பொ.த. சா.தரம் | ICT |
| 03.30 | க.பொ.த சா.தரம் | புவியியல் |
| 04.15 | க.பொ.த. சா.தரம் | தமிழ் இலக்கியம் |
| 05.00 | A/Lவினாத்தாள் | Live Telecast கணிதம் |
| 06.00 | தரம்-05 | புலமைப்பரிசில் |
| 07.00 | A/Lவினாத்தாள் | மாதிரி வினாத்தாள் |
| | மறு ஒளிபரப்பு | மறுஒளிபரப்பு-LIVE கணிதம் |
| | | மறு ஒளிபரப்பு |
| | | அனைத்துப்பாடங்களும் |
| 08.00 | தரம்-05 | புலமைப்பரிசில் |
| | | மாதிரி வினாத்தாள் |
| 09.00 | க.பொ.த.உயர்தரம் | அரசியல் |
| 10.00 | க.பொ.த.உயர்தரம் | கணக்கீடு |
| 11.00 | க.பொ.த.உயர்தரம் | இரசாயனவியல் |
| 12.00 | 06 TO Learning English | English |
| 12.45 | க.பொ.தா சா.தரம் | English |
| 01.30 | க.பொ.தா சா.தரம் | தமிழ் |
| 02.15 | க.பொ.தா சா.தரம் | ICT |
| 03.00 | க.பொ.தா சா.தரம் | புவியியல் |
| 03.45 | க.பொ.தா சா.தரம் | தமிழ்இலக்கியம் |
| 04.30 | தரம்-10 | புவியியல் |

கல்வி tv CHANNEL - 2

**09.02.2022**
**புதன்கிழமை**

| நேரம் | தரம் | |
|---|---|---|
| 06.00 | பஞ்சபுராணம் | பஞ்சபுராணம் |
| 06.15 | நற்கருணை | நற்கருணை |
| 06.30 | திருக்குறள் பொருள | நாள் ஒரு திருக்குறள் |
| 06.45 | PLAY GROUP | கதை |
| 07.30 | முன்பள்ளி | ஆரம்பநிலை பாடங்கள் |
| 08.15 | தரம்-01 | தமிழ் |
| 09.00 | தரம்-02 | சமயம் |
| 09.45 | தரம்-03 | தமிழ் |
| 10.30 | தரம்-03 | சுற்றாடற்கல்வி - paper |
| 11.15 | தரம்-04 | தமிழ் |
| 12.30 | தரம்-04 | Computer |
| 01.15 | தரம்-05 | தமிழ் |
| 02.00 | தரம்-05 | சுற்றாடற்கல்வி - paper |
| 02.45 | புலமைப்பரிசில் பேப்பர் | புலமைப்பரிசில் பேப்பர் |
| 03.30 | PLAY GROUP | கதை |
| 04.15 | முன்பள்ளி | ஆரம்பநிலை பாடங்கள் |
| 05.00 | தரம்-01 | English Cartoom |
| 05.15 | தரம்-02 | சமயம் |
| 06.00 | தரம்-03 | தமிழ் |
| 06.45 | தரம்-03 | சுற்றாடற்கல்வி - paper |
| 07.30 | தரம்-04 | தமிழ் |
| 08.15 | தரம்-04 | Computer |
| 09.00 | தரம்-05 | தமிழ் |
| 09.45 | தரம்-05 | சுற்றாடற்கல்வி-paper |
| 10.30 | புலமைப்பரிசில் பேப்பர் | புலமைப்பரிசில் பேப்பர் |
| 11.15 | தரம்-03 | தமிழ் |
| 12.30 | தரம்-03 | சுற்றாடற்கல்வி - paper |
| 01.15 | தரம்-04 | தமிழ் |
| 02.00 | தரம்-04 | Computer |
| 02.45 | தரம்-05 | தமிழ் |
| 03.30 | தரம்-05 | சுற்றாடற்கல்வி - paper |
| 04.15 | புலமைப்பரிசில் பேப்பர் | புலமைப்பரிசில் பேப்பர் |
| 05.00 | English | CARTOON |
| 05.30 | English | பாட்டு |

# கிழக்கில் ஒரு மாதத்தில் 457 டெங்கு தொற்றாளர்!

## மக்களை அவதானத்துடன் செயல்பட சுகாதார பிரிவு வலியுறுத்து

திருகோணமலை, பெப். 09

**கிழக்கு மாகாணத்தில் கடந்த ஒரு மாத காலத்தினுள் 457 டெங்கு நோயாளர்கள் இனங்காணப்பட்டுள்ளனர் என்று கிழக்கு மாகாண சுகாதார சேவைகள் பணிப்பாளர் மருத்துவர் ஏ.ஆர் எம். தௌபீக் நேற்று தெரிவித்தார்.**



கல்முனை பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் பிரிவில் 168 பேரும், மட்டக்களப்பு பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் பிரிவில் 117 பேரும், திருகோணமலை பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் பிரிவில் 142 பேரும், அம்பாறை பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் பிரிவில் 30 பேரும் இவ்வாறு டெங்கு நோயாளர்கள் இனங்காணப்பட்டுள்ளனர்.

கடந்த வருடத்தை விட இவ்வருடத்தின் முதல் மாதத்திலேயே அதிகளான டெங்கு நோயாளர்கள் அடையாளம் காணப்பட்டுள்ளதோடு, கல்முனை பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் பிரிவிலேயே அதி கூடிய டெங்கு நோயாளர்கள் அடையாளம் காணப்பட்டுள்ளனர் எனவும் அவர் சுட்டிக்காட்டினார்.

அத்தோடு, ஒருங்கிணைந்த சுகாதார மேம்பாட்டு அபிவிருத்தி வேலைத் திட்டத்தின் ஊடாக டெங்கொழிப்பு நடவடிக்கையை சிறந்த முறையில் முன்னெடுப்பதற்கு சுகாதார வைத்தியதிகாரி பிரிவுகள் தோறும் டெங்கொழிப்பு வேலைத் திட்டங்கள் முன்னெடுக்கப்பட்டு வருவதோடு, புகை விசிறும் நடவடிக்கையும் முன்னெடுக்கப்பட்டு வருவதாகவும் தெரிவித்தார்.

பொதுமக்கள் விழிப்புடன் செயல்பட்டு, வீடுகளில் தேங்கியுள்ள குப்பைகள், நீர் தங்கியுள்ள இடங்கள் போன்றவற்றை அகற்றி, டெங்கு நுளம்புகள் பெருகுவதற்கு இடம் கொடுக்காத வகையில் தமது இடங்களை துப்புரவாக வைத்து கொள்ளுமாறு கேட்டுள்ளார். (ஐ)



## விவசாய அமைச்சின் செயலர் பதவியேற்பு

திருகோணமலை, பெப். 09

கிழக்கு மாகாண விவசாய, கால்நடை அபிவிருத்தி, நீர்ப்பாசன கூட்டுறவு அபிவிருத்தி, கூட்டுறவு ஊழியர் மற்றும் மீன்பிடி அமைச்சின் செயலாளராக ஐ. கே. ஜீ. முத்து பண்டா தனது அமைச்சின் கடமைகளை சர்வமத அனுஷ்டானங்களுடன் நேற்றுப் பொறுப்பேற்றுக் கொண்டார்.

இந்நிகழ்வில் கிழக்கு மாகாண கூட்டுறவு அபிவிருத்தி ஆணையாளரும் கூட்டுறவு சங்கங்களின் பதிவாளருமான ஏ. எல். எம். அஸ்மி உள்ளிட்ட அமைச்சின் செயலாளர்கள், திணைக்களத் தலைவர்கள் எனப் பலர் கலந்து கொண்டனர். (ஐ)







## தென்கிழக்கு பல்கலையின் பட்டமளிப்பு விழா ஆரம்பம்!

அக்கரைப்பற்று, பெப். 09

தென்கிழக்கு பல்கலைக்கழகத்தின் 14ஆவது பொது பட்டமளிப்பு விழா பல்கலைக்கழக ஒலுவில் வளாக மாநாட்டு மண்டபத்தில் சிறப்பாக நேற்று முன்தினம் ஆரம்பமாகி நடைபெற்று வருகின்றது.

பல்கலைக்கழக உபவேந்தர் பேராசிரியர் கலாநிதி ரமீஸ் அபூபக்கர் தலைமையில் நேற்று முன்தினம் சம்பிரதாயபூர்வ ஆலவட்ட நிகழ்வுடன் ஊர்வலமாக ஆரம்பமாகியுள்ள பட்டமளிப்பு நிகழ்வு நாளை 10 ஆம் திகதி வரை நடைபெறவுள்ளது.

இந்த பொதுப்பட்டமளிப்பு விழாவில் மொத்தமான 2621 மாணவர்கள் பட்டங்களைப் பெறவுள்ளனர்.

இந்தப் பொதுப்பட்டமளிப்பு விழாவில், பேராதனை பல்கலைக்கழக ஓய்வுபெற்ற பேராசிரியர் எஸ். தில்லைநாதன், தென்கிழக்கு பல்கலைக்கழக முன்னாள் பதிவாளர் ஜௌபர் சாதிக் ஆகிய இருவருக்கும் கௌரவ கலாநிதிப்பட்டங்கள் வழங்கப்படவுள்ளமையும் குறிப்பிடத்தக்கது.

விழாவில் முதல் நாள் நிகழ்வில் இணையவழி ஊடாக கல்வி அமைச்சின் செயலாளர் கபில பெரேரா கலந்து கொண்டு சிறப்புரை ஆற்றினார்.

ஏனைய அதிதிகளான உயர் நீதிமன்ற நீதியரசர் திலீப் நவாஸ், பல் கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவின் தலைவர் சம்பத் அமரதுங்க, ருகுணை பல்கலைக்கழக பேராசிரியர் காமினி சேனநாயக்க (முன்னாள் உபவேந்தர்) ஆகியோர் பங்கேற்று சிறப்புரையாற்றினர். (ஐ)



## காஞ்சிரங்குடா கிராமத்தில் இரு திட்டங்கள் ஆரம்பம்!

மண்முனை, பெப். 09

மண்முனை மேற்கு - காஞ்சிரங்குடா கிராமத்துக்கு குடிதண்ணீர் சேவையை வழங்கும் நிகழ்வு இராஜாங்க அமைச்சர் எஸ். வியாழேந்திரன் தலைமையில் இடம்பெற்றது.

அத்துடன், காஞ்சிரங்குடா தொடக்கம் பன்சேனை வரையான 6 கிலோமீறற்றர் வீதியும் கொங்கிறீட் வீதியாக திருத்தும் பணியையும் இராஜாங்க அமைச்சர் தொடக்கி வைத்தார்.

குடிதண்ணீர் திட்டம் மூலம் 125 குடும்பங்கள் பயனடையவுள்ளன. இதற்காக முதல்கட்டமாக 30 இலட்சம் ரூபாய் நிதி ஒதுக்கப்பட்டுள்ளது. இதே போன்று வீதி திருத்தப்பணிக்கு 24.9 கோடி ரூபாய் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

இந்த நிகழ்வுகளில் மண்முனை தென்மேற்கு பிரதேச சபையின் உறுப்பினர் வை. சந்திரமோகன்,

நீர்ப்பாசன நிலைய பொறுப்பதிகாரி நிர்மலன், இராஜாங்க அமைச்சரின் இணைப்புச்செயலாளர்கள்

ஏனைய அரச திணைக்களங்களின் அதிகாரிகள், முற்போக்கு தமிழர் கழகத்தின் பிரதிநிதிகள் மற்றும் பொதுமக்கள் என பலரும் கலந்துகொண்டனர். (ஐ)

## பரீட்சை வினாத்தாள் தாமதம் மாணவர்கள், பெற்றோர் விசனம்!



களுவாஞ்சிக்குடி, பெப். 09

நேற்றுமுன்தினம் ஆரம்பமான உயர்தரப் பரீட்சை வினாத்தாளை பட்டிருப்பு - களுவாஞ்சிக்குடி தேசிய பாடசாலையில் தாமதமாக வழங்கப்பட்டதாக மாணவர்களும், பெற்றோரும் விசனம் வெளியிட்டனர்.

திங்கட்கிழமை நடைபெற்ற இணைந்த கணிதபாட பரீட்சையின்போது, வழங்கப்பட்ட வினாத்தாள்களில் முதலாம் பகுதியும், இரண்டாம் பகுதியும், காலை 8.30 மணிக்கே மாணவர்களுக்கு வழங்கப்பட்டிருக்க வேண்டும்.

ஆனால், இரண்டாம் பகுதி வினாத்தாள் காலை 8.30 மணிக்கு வழங்கப்பட்டிருந்தோடு, மற்றய முதலாம் பகுதி வினாத்தாளை மாணவர்கள் கேட்ட பின்னர் - முற்பகல் 10 மணிக்கே வழங்கப்பட்டதாகவும் எனினும், முற்பகல் 11.40 மணிக்கு பரீட்சை முடிவுறுத்தப்பட்டதாகவும் மாணவர்கள் சாடியுள்ளனர்.

இந்த விடயம் குறித்து பாதிக்கப்பட்ட மாணவர்களின் பெற்றோர் பரீட்சை ஆணையாளர் நாயகத்திற்கு முறைப்பாடு தெரிவித்துள்ளனர்.

இந்நிலையில் இவ்விடயம் அறிந்த பாராளுமன்ற உறுப்பினர், இரா. சாணக்கியன், பட்டிருப்பு வலயக்கல்வி அதிகாரிகளுடனும், பெற்றோர்களுடனும், கலந்துரையாடினார். அத்துடன், இந்த விடயம் குறித்து கல்வி அமைச்சரை நேரில் சந்தித்து அவரின் கவனத்துக்க இந்த விடயத்தை கொண்டுசெல்வதாகவும் உறுதி வழங்கினார். (ஐ)




## ஒட்டாவா போராட்டம் குறித்து கனடா பாராளுமன்றில் விவாதம்

### முடிவுக்கு கொண்டுவர பிரதமர் அழைப்பு

ஒட்டாவா, பெப். 09

கனேடிய தலைநகர் ஒட்டாவாவை ஆக்கிரமித்துள்ள கனேடிய சரக்கு வாகன சாரதிகள் போராட்டங்களை முடிவுக்குக் கொண்டு வருமாறு பிரதமர் ஜஸ்டின் ட்ரூடோ அழைப்பு விடுத்துள்ளார்.

கனேடிய பாராளுமன்றத்தில் நேற்று முன் தினம் இடம்பெற்ற அவசர விவாதத்தின்போது பேசிய அவர், அனைத்து கனேடியர்களும் கோவிட் தொற்று நோயால் சோர்வடைந்துள்ளனர். அவர்களை மேலும் துன்பத்துக்குள்ளாக்குவதற்கான நேரம் இதுவல்ல எனக் கூறினார்.

தலைநகர் ஒட்டாவாவில் இரண்டாவது வாரமாக சரக்கு வாகனச் சாரதிகள் போராட்டம் நீடித்து வரும் நிலையில், தலைநகரின் பாதுகாப்பை உறுதி செய்வதற்கான அழுத்தங்கள் சகல மட்டங்களிலும் இருந்து எழுந்து வருவதாக ட்ரூடோ தெரிவித்தார்.

ஒட்டாவா மக்கள் தங்கள் சொந்த இடங்களில் துன்புறுத்தப்படுவதை தொடர்ந்து அனுமதிக்க முடியாது. வன்முறைகள், அவமதிப்புக்கள், கேலி, கிண்டல்களை தொடர்ந்தும் அந்த மக்களால் சகித்துக்கொள்ள முடியாது எனவும் அவர் குறிப்பிட்டார்.

கட்டாய தடுப்பூசி ஆணைக்கு எதிராக சரக்கு வாகன சாரதிகள் ஒரு பிரிவினர் மேற்கொண்டு வரும் போராட்டத்தால் ஒட்டாவா முடங்கியுள்ள நிலையில் போராட்டக்காரர்களை கட்டுப்படுத்தும் நோக்கில் கடந்த ஞாயிற்றுக்கிழமை முதல் நகரத்தில் அவசர கால நிலை அமுல்படுத்தப்பட்டுள்ளது.

ஒட்டாவாவில் முகாமிட்டுள்ள போராட்டக்காரர்களால் நகர குடியிருப்பாளர்களின் பாதுகாப்பிற்கு கடுமையான ஆபத்து மற்றும் அச்சுறுத்தல் ஏற்பட்டுள்ளதால் அவசர நிலை அறிவிக்கப்பட்டுள்ளதாக ஒட்டாவா மேயர் ஜிம் வாட்சன் கூறினார்.

அதிக ஒலி எழுப்புதல், வீதி சமிக்ஞைகளை மீறுதல், பாதசாரிகளுக்கான நடைபாதையில் வாகனம் ஓட்டுதல் மற்றும் பட்டாசு வெடித்தல் உள்ளிட்ட விதி மீறல்களால் ஒட்டாவா குடியிருப்பாளர்கள் பாதிக்கப்பட்டுள்ளனர்.

எனினும் நேற்று முன் தினம் திங்கட்கிழமை மாலை நிலவரப்படி, நூற்றுக்கணக்கான லொறிகள் நகரம் முழுவதும் தெருக்களை மூடி போக்குவரத்தில் இடையூறுகளை ஏற்படுத்தும் வகையில் நிறுத்தப்பட்டிருந்தன. போராட்டத்தை கைவிட்டு போராட்டக்காரர்கள் கலைந்து செல்லும் அறிகுறிகளைக் காண முடியவில்லை.

இந்நிலையில் அவசர விவாதத்துக்கு அழைப்பு விடுத்த புதிய ஜனநாயகக் கட்சி, ஒட்டாவா மீது உலகின் கவனம் திரும்பியுள்ளது. நிலைமை நெருக்கடியான நிலையை அடைந்துள்ளது. இதற்கு முடிவு காணப்பட வேண்டும் என வலியுறுத்தியது.

இதேவேளை, போராட்டங்களின் தொடக்கத்திலிருந்தே போராட்டக்காரர்கள் பிரதமர் ட்ரூடோ மீதான தனிப்பட்ட வெறுப்பை வெளிப்படுத்தி வருவதுடன், வன்முறை வழிகளை கையாண்டு வருவதால் போராட்டக்காரர்களுடன் பேச்சுவார்த்தை நடத்தும் திட்டம் இல்லை என்ற நிலைப்பாட்டை ட்ரூடோ எடுத்துள்ளார் என்பதும் குறிப்பிடத்தக்கது. (அ)

## ஆப்கானில் பனிச்சரிவில் சிக்கி 20 பேர் உரிழப்பு!

காபூல், பெப். 09

ஆப்கானிஸ்தானின் பனிச்சரிவில் சிக்கி 20 பேர் உயிரிழந்துள்ளனர். பனிச்சரிவில் சிக்கியவர்களில் 15 பேரின் சடலங்கள் மீட்கப்பட்டுள்ளன. ஏனையோரை தேடும் பணி இடம்பெற்று வருகிறது.

ஆப்கான்- கிழக்கு குனார் மாகாணம், டங்கம் மாவட்டத்தில் இந்த அனர்த்தம் இடம்பெற்றதாக ஆப்கான் அரசு ஊடகமான பக்தர் திங்கட்கிழமை தெரிவித்துள்ளது.

இதேவேளை, கடந்த ஞாயிற்றுக்கிழமை பிற்பகுதியில் கோரிகா கிராமத்தில் கடுமையான பனிப்பொழிவு மற்றும் பனிச்சரிவு ஏற்பட்டதாகவும், அதன்பின்னர் 90 கிராமவாசிகள் காணாமல் போயுள்ளதாகவும் டங்கம் மாவட்டத்தைச் சேர்ந்த உள்ளூர்வாசிகள் தெரிவித்துள்ளனர். காணாமல் போனவர்களில் 15 பேரின் உடல்களை நாங்கள் மீட்டு மருத்துவமனைகளுக்கு அனுப்பி வைத்துள்ளோம் எனவும் அவர்கள் குறிப்பிட்டனர். (அ)

### உக்ரைன் மீது படையெடுத்தால்

# ரஷ்யாவிலிருந்து ஜேர்மனி செல்லும் எரிவாயுக் குழாய் துண்டிக்கப்படும்!

### ஜோ பைடன் எச்சரிக்கை

நியூயோர்க், பெப். 09

உக்ரைன் மீது ரஷ்யா படையெடுத்தால் ரஷ்யாவிலிருந்து ஜேர்மனிக்கு எரிவாயு கொண்டு செல்ல அமைக்கப்பட்ட குழாய் துண்டிக்கப்படும் என்று அமெரிக்க ஜனாதிபதி பைடன் எச்சரித்துள்ளார்.

வொஷிங்டனில் ஜேர்மன் சான்சிலர் ஓலாப் ஸ்கோல்ஸை நேற்று முன் தினம் சந்தித்துப் பேசிய பின்னர் செய்தியார்களிடம் கருத்து வெளியிடும்போதே அவர்இவ்வாறு கூறினார்.

பிரெஞ்சு ஜனாதிபதி இம்மானுவேல் மக்ரோன் மொஸ்கோவில் ரஷ்ய ஜனாதிபதி விளாடிமிர் புடினை நேற்று முன் தினம் சந்தித்து போரைத் தவிர்க்க முடியும் என்று நம்பிக்கை தெரிவித்திருந்த சம நேரத்தில் அமெரிக்க ஜனாதிபதி ஜேர்மனியுடன் இணைந்து இவ்வாறான எச்சரிக்கையை விடுத்தார்.

உக்ரைன் மீது படையெடுத்து அந்நாட்டை ஆக்கிரமிக்க ரஷ்யா முயற்சித்து வருவதாக அமெரிக்கா மற்றும் பல ஐரோப்பிய ஒன்றிய நாடுகள் தொடர்ந்து குற்றஞ்சாட்டி வருகின்றன. ஆனால் இந்தக் குற்றச்சாட்டை ரஷ்யா மறுத்து வருகிறது.

ரஷ்யா தற்போது உக்ரைன் எல்லையில் 100,000க்கும் அதிகமான துருப்புக்களை குவித்துள்ளது.

முழு அளவிலான படையெடுப்பிற்குத் தேவையான 70மூ படைகளை ரஷ்யா திரட்டியுள்ளதாக அமெரிக்க அதிகாரிகள் கடந்த ஞாயிற்றுக்கிழமை தெரிவித்தனர்.

நேட்டோ கூட்டணியில் உக்ரைன் எப்போதுமே இணையாது என்பதை உறுதி செய்ய வேண்டும். கிழக்கு ஐரோப்பாவில் நேட்டோ துருப்புக்களின் எண்ணிக்கையைக் குறைக்க வேண்டும் என சமீபத்திய வாரங்களாக ரஷ்யா வலியுறுத்தி வருகிறது.

எனினும் ரஷ்யாவின் இந்த இரண்டு கோரிக்கைகளையும் நேட்டோ நிராகரித்துள்ளது. அதற்கு பதிலாக அணு ஆயுதங்களை கட்டுப்படுத்துவது போன்ற பிற விடயங்கள்குறித்து பேச்சுக்களை ஆரம்பிக்க முடியும் என நேட்டோ பரிந்துரைத்துள்ளது.

இவ்வாறான நிலையிலேயே வொஷிங்டனில் ஜேர்மன் சான்சிலர் ஓலாப் ஸ்கோல்ஸ் - மற்றும் அமெரிக்க ஜனாதிபதி ஆகியோர் நேற்று முன்தினம் சந்தித்துப் பேசினர்.



இதன் பின்னர் இருவரும் கூட்டாகச் செய்தியாளர்களைச் சந்தித்துப் பேசியபோதே உக்ரைன் மீது ரஷ்யா படையெடுத்தால் ரஷ்யாவிலிருந்து ஜேர்மனிக்கு கொண்டு செல்லப்படும் எரிவாயு குழாய் துண்டிக்கப்படும் என்று அமெரிக்க ஜனாதிபதி பைடன் தெரிவித்தார்.

இதனை எவ்வாறு செய்ய முடியும்? என செய்தியாளர்கள் கேட்டபோது, மேலதிக விபரங்களை பைடன் தெரிவிக்கவில்லை.

எங்களால் அதைச் செய்ய முடியும் என உங்களுக்கு உறுதியளிக்கிறேன் என்று அவர் கூறினார்.

இதேவேளை, உக்ரைனை ஆக்கிரமித்தால் ரஷ்யாவுக்கு எதிரான பொருளாதாரத் தடை நடவடிக்கையில் அமெரிக்காவும் ஜேர்மனியும் ஒன்றுபட்டுச் செயற்படும் என ஜேர்மன் சான்சிலர் ஓலாப் ஸ்கோல்ஸ் குறிப்பிட்டார்.

ரஷ்யாவிலிருந்து ஜேர்மனிக்கு எரிவாயு கொண்டு செல்லும் குழாய் 1,225 கி.மீ .(760-மைல்) தூரத்துக்கு அமைக்கப்பட்டுள்ளது. இதனை அமைக்க 05 வருடங்கள் எடுத்தன. இதற்கான மொத்த செலவு 11 பில்லியன் அமெரிக்க டொலர்களாகும். ஜேர்மனிக்கு ரஷ்யாவின் எரிவாயு ஏற்றுமதியை இரட்டிப்பாக்கும் வகையில் இக்குழாய் நிறுவப்பட்டுள்ளது.

எனினும் இந்த குழாய்மூலம் எரிவாயு கொண்டு செல்லும் திட்டம் இதுவரை செயற்படத் தொடங்கவில்லை. இத்திட்டம் ஜேர்மன் சட்டத்திற்கு இணங்கவில்லை எனக் கூறி இதற்கான ஒப்புதல் வழங்குவது இடைநிறுத்தப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (அ)

## கோவிட் கட்டுப்பாடுகளை நீக்கவுள்ளது சுவீடன் அரசு

ஸ்ரொக்ஹோம், பெப். 09

சுவீடனில் அமுலில் உள்ள பெரும்பாலான கொவிட் கட்டுப்பாடுகள் பெப்ரவரி 9 ஆம் திகதி முதல் நீக்கப்படும் என்று சுவீடிஷ் அதிகாரிகள் அறிவித்துள்ளனர்.

நாட்டில் தற்போது கோவிட் தொற்று நோய் நிலவரம் ஓரளவு கட்டுப்பாட்டுக்குள் இருப்பதால் கட்டுப்பாடுகளை நீக்கும் முடிவு எடுக்கப்பட்டதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

ஒமைக்ரோன் திரிபு முந்தைய திரிபுகளை போல கடுமையான நோய்க்கு வழிவகுக்காது என சுவீடனின் பொது சுகாதார நிறுவனம் மதிப்பிட்டுள்ளது.

இதையடுத்து கட்டாய தடுப்பூசி சான்றிதழ் மற்றும் பிற கட்டுப்பாடுகளை நீக்க முடிவு செய்யப்பட்டுள்ளது.

கொவிட் கட்டுப்பாடுகள் இரண்டு கட்டங்களாக நீக்கப்படும் என சுவீடன் சுகாதார அமைச்சு அறிவித்துள்ளது. முதல் கட்ட கட்டுப்பாடுகள் பெப்ரவரி 9 ஆம் திகதி நீக்கப்படும். இரண்டாவது கட்டமாக ஏப்ரல் முதலாம் திகதி முதல் கட்டுப்பாடுகள் தளர்த்தப்படும். முதல் கட்டத்தில் பொது நிகழ்வுகள், பார்கள், உணவகங்கள், வணிக வளாகங்கள் மற்றும் பொது போக்குவரத்து உட்பட பல்வேறு இடங்களில் நுழையும்போது தடுப்பூசி சான்றிதழை சமர்ப்பிக்க வேண்டும் என்ற கட்டுப்பாடு நீக்கப்படும். எதிர்காலத்தில் ஏற்படும் அசௌகரியங்களை தவிர்க்கும் வகையில், 12 வயதுக்கு மேற்பட்ட அனைவரும் விரைவில் தடுப்பூசி போட்டுக் கொள்ளுமாறு அதிகாரிகள் பரிந்துரைத்துள்ளனர். (அ)





## மடகாஸ்கரை புரட்டிய பட்சிராய் சூறாவளி!

### 20பேர் உயிரிழப்பு 55,000க்கும் மேற்பட்டோர் இடம்பெயர்வு!

மடகாஸ்கரின் கிழக்கு கடற்கரையில் பட்சிராய் சூறாவளி தாக்கியதில் குறைந்தது 20பேர் உயிரிழந்துள்ளதோடு 55,000க்கும் மேற்பட்டோர் இடம்பெயர்ந்துள்ளதாக அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

மணிக்கு 235 கிலோமீற்றர் (மணிக்கு 146 மைல்) வேகத்தில் காற்று வீசும் வகை 4 சூறாவளியான பட்சிராய், மானஞ்சரி நகருக்கு அருகே தீவின் கிழக்குக் கடற்கரையைத் தாக்கியது.

ஜனவரி 22ஆம் திகதி தாக்கிய மற்றொரு வெப்ப மண்டல புயலான அனாவின் விளைவுகளால் ஏற்கனவே தத்தளித்து வரும் மடகாஸ்கருக்கு மேலும் பேரழிவைக் கொண்டு வந்த பட்சிராய் சூறாவளி மடகாஸ்கரின் கடற்கரையை தாக்கியது.

இந்த ஆண்டின் இரண்டாவது பெரிய சூறாவளியான பட்சிராய், மடகாஸ்கரை விட்டு வெளியேறும்போது மேலும் சிதறி மொசாம்பிக்கிற்கு கடுமையான ஆபத்தை ஏற்படுத்தக் கூடுமென என்று வானிலை துறை தெரிவித்துள்ளது. பட்சிராய் சுமார் 3,000 குடியிருப்புகள் மற்றும் அரசு கட்டடங்களை அழித்ததுடன், மானஞ்சரி மற்றும் அருகிலுள்ள நகரங்களில் 5,700 பேரை வெள்ளத்தில் மூழ்கடித்தது என்று அதிகாரிகள் தெரிவித்தனர்.



# பீஜிங் குளிர்கால ஒலிம்பிக் ஐரீனுக்கு 5 தங்கப் பதக்கம்!

பீஜிங், பெப். 09

பீஜிங் குளிர்கால ஒலிம்பிக் போட்டியில் 1500மீ. ஸ்பீட் ஸ்கேட்டிங்கில் 5ஆவது தங்கப் பதக்கத்தை வென்றார் டச்சு வீராங்கனை ஐரீன் உஸ்ட்.

சீனாவின் பீஜிங் நகரில் குளிர்கால ஒலிம்பிக் போட்டிகள் 2022 நடைபெற்று வருகின்றன.

இதில், திங்கள்கிழமை ஸ்பீட் ஸ்கேட்டிங் பிரிவு 1500 மீ. பந்தயத்தில் தங்கப் பதக்கம் வென்றார் நெதர்லாந்தின் ஐரீன். 35 வயதான ஐரீன் தனிநபர் பிரிவில் 5 ஒலிம்பிக் போட்டிகளிலும் தங்கப்பதக்கம் வென்று சாதனை படைத்துள்ளார்.

இதேவேளை, அவர் ஒட்டுமொத்தமாக ஒலிம்பிக்கில் 12 பதக்கங்களை கைப்பற்றியுள்ளார் என்பது குறிப்பிடத்தக்கது. (ஐ)



# இந்தியா - மே. இ. தீவுகளின் இரண்டாவது போட்டி இன்று!

அஹமதாபாத், பெப். 09

இந்தியா - மேற்கிந்தியத் தீவுகள் மோதும் இரண்டாவது ஒருநாள் போட்டி அகமதாபாத்தில் இன்று புதன்கிழமை நடக்கவுள்ளது.

முதல் போட்டியில் சிறப்பான துடுப்பாட்டம் மற்றும் பந்துவீச்சால் இந்தியா வெற்றி பெற்றது.

இன்றைய போட்டியில் அணியில் மாற்றம் இருக்காது. துடுப்பாட்டத்தில் அணித் தலைவர் ரோஹித் சர்மா, சூர்யகுமார் யாதவ் நல்ல நிலையில் உள்ளனர். இஷான் கிஷனும், தீபக் ஹூடாவும் தங்களுக்கு கிடைத்த வாய்ப்பை சரியாக பயன்படுத்திக் கொண்டனர்.

முன்னாள் அணித் தலைவர் விராட் கோலியின் ஆட்டம் ஏமாற்றத்தை அளித்தது. அவர் அதில் இருந்து மீண்டு சிறப்பான இன்னிங்சை வெளிப்படுத்துவார் என்ற எதிர்பார்ப்பு ரசிகர்களிடம் உள்ளது.

கடந்த போட்டியில் சுழற்பந்து வீரர்கள் ஆதிக்கம் செலுத்தினர். யசுவேந்திர சாஹல் 4 விக்கெட்டும், அணிக்கு மீண்டும் திரும்பிய தமிழக வீரர் வாஷிங்டன் சுந்தர் 3 விக்கெட்டும் கைப்பற்றி முத்திரை பதித்தனர்.

இன்றைய போட்டியிலும் அவர்கள் திறமையை வெளிப்படுத்துவார்கள் என்று எதிர்பார்க்கப்படுகிறது. வேகப்பந்தில் முகமது சிராஜ், ஷர்துல் தாகூர் , பிரஷித் கிருஷ்ணா தாக்கத்தை ஏற்படுத்தக் கூடியவர்கள்.

இந்தப் போட்டியில் வெற்றி பெற வேண்டிய நெருக்கடி மேற்கிந்தியத் தீவுகளுக்கு உள்ளது. ஏனென்றால், இதில் தோற்றால் அந்த அணி தொடரை இழந்து விடும்.

முதல் போட்டியில் மேற்கிந்திய வீரர்களின் ஆட்டத்திறன் மோசமாக இருந்தது. ஹோல்டர், பேபியன் அலன் தவிர மற்ற துடுப்பாட்ட வீரர்கள் யாருமே சரியாக ஆடவில்லை. மேலும் பந்துவீச்சும் எடுபடவில்லை. அதை சரி செய்யும் விதமாக இன்றைய போட்டியில் செயல்படும் என்று எதிர்பார்க்கலாம்.

இரு அணிகளம் இன்று மோதுவது 135ஆவது போட்டியாகும். இதுவரை நடந்த 134 போட்டிகளில் இந்தியா 65இலும், மேற்கிந்தியத் தீவுகள் 63இலும் வெற்றி பெற்றுள்ளன. 4 போட்டிகளுக்கு முடிவு இல்லை. 2 போட்டிகள் சமநிலையில் நிறைவடைந்தன. இன்றையதினம் மதியம் 1.30 மணிக்கு போட்டி ஆரம்பமாகிறது.

# தென்னாபிரிக்காவுடனான டெஸ்ட்! நியூசிலாந்து அணியில் புதுமுகங்கள்!

வெலிங்டன், பெப். 09

தென்னாபிரிக்காவுக்கு எதிராக கிறிஸ்ட்சேர்ச்சில் நடைபெறவுள்ள முதலாவது டெஸ்ட் போட்டிக்கான நியூசிலாந்து டெஸ்ட் அணியில் காம் ப்ளெச்சர், ப்ளயார் டிக்னர் ஆகிய இரண்டு அறிமுக வீரர்கள் இணைத்துக் கொள்ளப்பட்டுள்ளனர்.

அத்துடன், சில கால இடைவெளிக்குப் பின்னர் கொலின் டி க்ராண்ட்ஹோம், ஹமிஷ் ரதர்பேர்ட் ஆகியோரும் அணிக்கு மீள அழைக்கப்பட்டுள்ளனர்.

வழமையான அணித் தலைவர் கேன் வில்லியம்சன் உபாதையிலிருந்து இன்னும் முழுமையாக குணம் அடையாததால் இத் தொடரில் அவர் விளையாடமாட்டார் என அறிவிக்கப்பட்டுள்ளது.

கடந்த இரண்டு கிரிக்கெட் பருவகாலங்களில் கென்ட்பறி அணிக்காக மூவகை கிரிக்கெட் போட்டிகளிலும் காம் ப்ளெச்சர் மிகத் திறமையான ஆற்றல்களை வெளிப்படுத்தி வந்துள்ளதால் அவரை குழாத்தில் இணைத்துக் கொண்டுள்ளதாக நியூசிலாந்து அணியின் தலைமைப் பயிற்றுநர் கெரி ஸ்டெட் தெரிவித்துள்ளார். விக்கெட் காப்பாளர் டொம் ப்ளண்டெலுக்கு ஒத்தாசையாக காம்



ப்ளெச்சர் பதில் விக்கெட் காப்பாளராக குழாத்தில் இணைத்துக் கொள்ளப்பட்டுள்ளார்.

இலங்கைக்கு எதிராக 2015இல் வெலிங்டன் டெஸ்ட் போட்டியில் கடைசியாக விளையாடியிருந்த ரதர்பேர்ட், 7 வருடங்களின் பின்னர் அணிக்கு மீளழைக்கப்பட்டுள்ளார்.

நடப்பு பருவகாலத்தில் ஒட்டாகா அணிக்காக விளையாடி வரும் ரதர்பர்ட் 4 போட்டிகளில் 371 ஓட்டங்களைப் பெற்றுள்ளார். உபாதை காரணமாக கடந்த பருவ காலத்தின் பெரும் பகுதியில் விளையாடாமல் இருந்த கொலின் டி க்ராண்ட்ஹோம், கடந்த வருட பிற்பகுதியில் உயிரி பாதுகாப்பு குமிழியை காரணம் காட்டி இந்தியாவுக்கு எதிரான தொடரை தவிர்த்திருந்தார்.முதலாவது போட்டியின் அணி விவரம்:

ரொம் லெதம் (தலைவர்), ரொம் ப்ளண்டெல், டெவன் கொன்வே, கொலின் டி க்ராண்ட்ஹோம், காம் ப்ளெச்சர், மெட் ஹென்றி, கய்ல் ஜெமிசன், டெரில் மிற்செல், ஹென்றி நிக்கல்ஸ், ராச்சின் ரவிந்திரா, ஹாமிஷ் ரதர்பர்ட், ரிம் சௌதி, ப்ள யார் டிக்கர், நீல் வோக்னர், வில் யங்.

# குஷல் மெண்டிஸுக்கு கொரோனா தொற்று!

சிட்னி, பெப். 09

இலங்கை அணியின் விக்கெட் காப்பாளரும், துடுப்பாட்ட வீரருமான குசல் மெண்டிஸுக்கு தொற்று உறுதிப்படுத்தப்பட்டுள்ளது.

சிட்னியில் திங்கட்கிழமை மேற்கொள்ளப்பட்ட அன்ரிஜென் பரிசோதனையின்போதே அவர் கொரோனா தொற்றுக்குள்ளாகியுள்ளமை கண்டறியப்பட்டதாக இலங்கை அணித் தலைவர் தசூன் ஷானக நேற்று நடைபெற்ற இணையவழி ஊடக சந்திப்பின் போது கூறினார்.

நாளை மறுதினம் ஆரம்பமாகும் ஐந்து போட்டிகள் கொண்ட இருபது - 20 தொடரில் அவுஸ்ரேலியாவை எதிர்கொள்ளும் 20 பேர் கொண்ட இலங்கை அணியில் குசல் மெண்டீஸ/ம் ஒரு வீரராக இருந்தார்.

அங்கு சென்றுள்ள இலங்கை அணியில் கோவிட்-19 தொற்றுக்குள்ளான மூன்றாவது வீரர் இவராவார். குசல் மெண்டிஸ் தற்போது கோவிட்-19 நெறிமுறைகளுக்கு உட்பட்டு நேற்று முதல் தனிமைப்படுத்தலில் உள்ளார்.

இதற்கு முன்னர் நுவான் துஷார மற்றும் சாமிக கருணாரத்னவும் மற்றும் இடைக்கால தலைமைப் பயிற்சியாளர் ருமேஷ் ரத்நாயக்க, பயிற்சியாளர் டில்ஷான் பொன்சேகா ஆகியோரும் கொரோனா தொற்றுக்குள்ளாகினர். (ஐ)






# இந்தியா - பாகிஸ்தான் போட்டி; ரிக்கெற் 5 நிமிடத்தில் நிறைவு!

டுபாய், பெப். 09

கிரிக்கெட் ரசிகர்கள் ஆவலுடன் எதிர்பார்க்கும் இந்தியா - பாகிஸ்தான் போட்டியின் ரிக்கெற்கள் 5 நிமிடங்களில் விற்று தீர்ந்தன.

7ஆவது இருபது - 20 உலகக் கிண்ணப் போட்டி எதிர்வரும் ஒக்ரோபர் 16 - நவம்பர் 13 வரை அவுஸ்திரேலியாவில் நடக்கவுள்ளது.

இதில் மொத்தம் 16 அணிகள் பங்கேற்கின்றன. நடப்பு சம்பியன் அவுஸ்திரேலியா, இந்தியா, இங்கிலாந்து, நியூசிலாந்து, தென்னாபிரிக்கா, பாகிஸ்தான், ஆப்கானிஸ்தான், பங்களாதேஷ் ஆகிய 8 நாடுகள் சுப்பர் 12 சுற்றில் விளையாடும்.

இந்தியாவும், பாகிஸ்தானும் ஒரே பிரிவில் உள்ளன. தென்னாபிரிக்கா, பங்களாதேஷ் மற்றும் தகுதி சுற்றில் இருந்து 2 அணிகள் ஆகியவை அந்த பிரிவில் இடம் பெற்று உள்ளன.

இந்நிலையில், கிரிக்கெட் ரசிகர்கள் ஆவலுடன் எதிர்பார்க்கம் இந்தியா - பாகிஸ்தான் மோதல் ஒக்ரோபர் 23ஆம் திகதி நடக்கிறது. இந்தப் போட்டிக்கான ரிக்கெற்கள் நேற்று விற்பனைக்கு வந்தது. வந்த 5 நிமிடங்களிலேயே ரிக்கெற்கள் நிறைவடைந்துவிட்டன. (ஐ)

# ‘கோப்’குழுவில் அநுர!

## புதிய உறுப்பினர்கள் விவரம்

கொழும்பு, பெப். 09

பொது நிறுவனங்கள் தொடர்பான நாடாளுமன்றக்கு குழுவுக்கான (கோப்குழு) உறுப்பினர்கள் நேற்று பெயரிடப்பட்டனர்.

பாராளுமன்றம் நேற்று முற்பகல் 10 மணிக்கு பிரதி சபாநாயகர் தலைமையில் கூடியது.

இதன்போதே பிரதி சபாநாயகர் ரஞ்சித் சிலம்பலாப்பிட்டிய மேற்படி தகவலை வெளியிட்டார்.

கோப் குழு உறுப்பினர்கள் விவரம் வருமாறு:-

மஹிந்த அமரவீர, மஹிந்தானந்த அளுத்கமகே, ரோஹித அபேகுணவர்தன, சரத் வீரசேகர, ஜயந்த சமரவீர, இரா. சாணக்கியன், இந்திக்க அநுருத்த, நாலக கொட ஹேவா, ரவூப் ஹக்கீம், சுசில் பிரேமஜயந்த, அநுரகுமார திஸாநாயக்க, பாட்டளி சம்பிக்க ரவணக்க, ஜகத் புஷ்பகுமார, ஹர்ஷ டி சில்வா, எரான் விக்கிரமரத்ன, நளின் பண்டார மரிக்கார், தொலவத்த, மதுர விதாககே, சாகர காரியவசம், சரித ஹேரத்.

கோப் குழுவின் முதலாவது கூட்டத்தின்போது புதிய தலைவர் நியமிக்கப்படவுள்ளார். (அ)

# பயங்கரவாதத் தடைச் சட்டத் திருத்தம் அடிப்படை உரிமைகளை பாதுகாக்கும்

## வெளிவிவகார அமைச்சு கூறுகின்றது

கொழும்பு, பெப். 09

தற்போதைய பயங்கரவாதத் தடைச் சட்டத்தின் முன்மொழியப்பட்ட திருத்தம் அரசமைப்பின் கீழ் உத்தரவாதம் அளிக்கப்பட்டுள்ள அடிப்படை உரிமைகளைப் பாதுகாப்பதற்கும், முன்னேற்றுவதற்குமானதொரு முற்போக்கான படியாகும் என வெளிவிவகார அமைச்சு தெரிவித்துள்ளார்.

இது தொடர்பில் வெளிவிவகார அமைச்சு வெளியிட்டுள்ள செய்திக்குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:

பாராளுமன்றத்தில் இலங்கை அரசாங்கம் முன்வைக்க உத்தேசித்துள்ள தற்போதைய பயங்கரவாதத் தடைச் சட்டத்தைத் திருத்துவதற்கு முன்மொழியப்பட்டுள்ள சட்டமூலமானது சட்டமாக நிறைவேற்றப்பட்டவுடன், தற்போதைய பயங்கரவாதத் தடைச் சட்டம் இயற்றப்பட்டு கிட்டத்தட்ட 43 வருடங்களின் பின்னர் அதில் திருத்தம் மேற்கொள்ளப்படுவதற்கு வழிவகுப்பதுடன், குறித்த சட்டத்துக்கு உட்பட்ட நபர்களுக்கு அரசமைப்பின் கீழ் உத்தரவாதம் அளிக்கப்பட்டுள்ள அவர்களது அடிப்படை உரிமைகளைப் பாதுகாப்பதற்கும், முன்னேற்றுவதற்குமான உறுதியான பாதுகாப்பை வழங்கும் மிகவும் முற்போக்கான நடவடிக்கையாக அமையும்.

முன்மொழியப்பட்ட சட்டமூலத்துக்கு எதிராக தொழிற்சங்கங்கள் மற்றும் சிவில் சமூக அமைப்புக்கள் உட்பட பல நபர்களால் உயர்நீதிமன்றத்தில் வெளியிடப்பட்ட கடுமையான எதிர்ப்பைக் கருத்தில் கொண்டு, பயங்கரவாத எதிர்ப்புச் சட்டமூலத்தின் மூலமாக தற்போதைய பயங்கரவாதத் தடைச் சட்டத்தைத் திருத்துவதற்கு கடந்த காலத்தில் மேற்கொள்ளப்பட்ட முயற்சிகள் நிறைவேறவில்லை.

பயங்கரவாதத் தடைச் சட்டத்திற்கான திருத்தங்களை இறுதி செய்வதற்கு பின்பற்றப்பட்ட செயன்முறையானது, 1979ஆம் ஆண்டின் 48ஆம் இலக்க பயங்கரவாதத் தடை (தற்காலிக ஏற்பாடுகள்) சட்டத்தை மறுபரிசீலனை செய்வதற்காக அமைச்சரவை துணைக் குழுவின் நியமனம் எனத் தலைப்பிடப்பட்டு, 2021 ஜூன் மாதம் பாதுகாப்பு அமைச்சர் என்ற வகையில் அதிமேதகு ஜனாதிபதி, வெளிநாட்டு அமைச்சர் மற்றும் நீதி அமைச்சர் ஆகியோரால் சமர்ப்பிக்கப்பட்ட கூட்டு அமைச்சரவைப் பத்திரத்தை உள்ளடக்கியுள்ளது.

மேலும், தற்போதுள்ள பயங்கரவாதத் தடைச் சட்டத்தில் திருத்தங்களை மேற்கொள்ளலாமா இல்லையா என்பதை அமைச்சரவைக்கு பரிந்துரை செய்வதற்காக, புதிய சட்டத்தை அறிமுகம் செய்து, பாதுகாப்பு, வெளிநாட்டு, நீதி மற்றும் பொதுப் பாதுகாப்பு அமைச்சுக்களின் பிரதிநிதிகளை உள்ளடக்கிய அதிகாரிகள் குழுவை நியமித்து, அமைச்சரவை துணைக்குழு தனது அறிக்கையை மூன்று மாதங்களுக்குள் அமைச்சரவைக்குப் பரிந்துரையுடன் சமர்ப்பிக்க அதிகாரம் அளித்து, அமைச்சரவை உபகுழுவை நியமிப்பதற்கு அதிமேதகு ஜனாதிபதிக்கு அதிகாரம் அளித்து மேற்கூறிய கூட்டு அமைச்சரவைப் பத்திரத்திற்கு இணங்க 2021.06.21ஆம் திகதி அமைச்சரவையினால் அனுமதி வழங்கப்பட்டது.

அமைச்சரவையின் அனுமதியைத் தொடர்ந்து, நீதி, பொதுப் பாதுகாப்பு மற்றும் வெளிநாட்டு, பாதுகாப்பு அமைச்சுக்களின் அதிகாரிகள் மற்றும் பொலிஸ், சட்டமா அதிபர் திணைக்களம், சட்ட வரைஞர் மற்றும் தேசிய புலனாய்வுத் தலைவர் ஆகியோரை உள்ளடக்கிய அதிகாரிகள் குழுவொன்றை ஜனாதிபதியின் செயலாளர் ஜூன் 2021 இல் நியமித்தார்.

மேலும், அதிகாரிகள் குழுவின் சூழலில் பல்வேறு அமைச்சுக்கள் மற்றும் நிறுவனங்களிடையே விரிவான ஆலோசனைகள் நடத்தப்பட்டதுடன், மேலதிக நிபுணத்துவம் வாய்ந்த விடயங்கள் குறித்து கலந்தாலோசிக்கும் பொருட்டு மேலதிகமான நிறுவனங்கள் அழைக்கப்பட்டன.

அதிகாரிகள் குழுவின் பரிந்துரைகளை மீளாய்வு செய்வதற்காக 2021 ஒக்ரோபரில் ஜனாதிபதியினால் நியமிக்கப்பட்ட அமைச்சரவை உப குழு, வெளிநாட்டு அமைச்சரின் தலைமையில் இடம்பெற்றதுடன், அதிகாரிகள் குழுவின் அறிக்கை ஜனாதிபதி, அமைச்சரவை உப குழுவின் உறுப்பினர்கள் மற்றும் ஜனாதிபதியின் செயலாளர் ஆகியோருக்கு 2021.11.15ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்டது.

அதிகாரிகள் குழுவின் முன்மொழிவுகளை மதிப்பாய்வு செய்த அமைச்சரவை உப குழு, தேர்ந்தெடுக்கப்பட்ட பாராளுமன்ற உறுப்பினர்கள் மற்றும் ஏனைய அரச நிறுவனங்கள் மற்றும் நிபுணர்களுடன் மேலதிக ஆலோசனைகளை நடாத்தியது. இலங்கை சட்ட ஆணைக்குழு, இலங்கை சட்டத்தரணிகள் சங்கம் மற்றும் சிவில் சமூகக் குழுக்களுடன் பயங்கரவாதத் தடைச் சட்டத்திற்கான உத்தேசத் திருத்தங்கள் குறித்து அமைச்சரவை உபகுழுவும் கலந்துரையாடியது.

வாய்மொழியாகவும் எழுத்துபூர்வ சமர்ப்பணங்கள் மூலமாகவும் பரிசீலனைக்கான முன்மொழிவுகள் பெற்றுக்கொள்ளப்பட்டன.

இந்த செயன்முறையின் நிறைவில், பயங்கரவாதத் தடைச் சட்டத்தில் முன்மொழியப்பட்ட திருத்தங்களை அமைச்சரவை உபகுழு இறுதி செய்ததுடன், முன்மொழியப்பட்ட திருத்தங்கள் அடங்கிய சட்டமூலத்தை வர்த்தமானியில் வெளியிடுவதற்கும், அதன் பின்னர் அதனை பாராளுமன்றத்தில் அங்கீகாரத்திற்காக தாக்கல் செய்வதற்கும் 2022 ஜனவரி 24ஆம் திகதி அமைச்சரவை அங்கீகாரம் வழங்கியது.

தடுப்புக் காலத்தைக் குறைத்தல், சித்திரவதைக் குற்றச்சாட்டுகளை நிவர்த்தி செய்வதற்கும் அகற்றுவதற்கும் தடுப்புக்காவலில் உள்ள சந்தேக நபர்கள் தடுப்புக்காவலில் வைக்கப்பட்டுள்ள இடங்களுக்குச் செல்ல நீதவானுக்கு வெளிப்படையாக அதிகாரம் வழங்குதல், பயங்கரவாதத் தடைச் சட்டத்தின் கீழ் நீதித்துறை மீளாய்வுக்கு அங்கீகாரம் வழங்குதல், தடுப்புக்காவலில் அல்லது காவலில் வைக்கப்பட்டுள்ள ஒருவரை சட்டத்தரணிகள் அணுகுவதற்கான சட்டம் மற்றும் அவ்வாறு தடுப்புக்காவலில் அல்லது தடுத்து வைக்கப்பட்டுள்ள நபரின் உறவினர்களுடன் தொடர்புகொள்வதற்கான உரிமை, பிரசுரங்களைத் தடை செய்வது தொடர்பான விதிகளை ரத்துச் செய்தல், பயங்கரவாதத் தடைச் சட்டத்தின் கீழான தடுப்புக் குற்றங்களுக்கு நாளாந்த அடிப்படையில் விசாரணைகளை நடத்துதல், தடுப்புக்காவலில் அல்லது தடுத்து வைக்கப்பட்டுள்ள நபர்களுக்கு பிணை வழங்குவதற்கான ஏற்பாடுகளை மேற்கொள்ளுதல், வழக்குகளை விரைந்து தீர்ப்பதை உறுதி செய்தல், புதிய பிரிவு 15 பி ஐ அறிமுகப்படுத்துவதை உறுதிப்படுத்துதல் ஆகியன அதில் உள்ளடக்கப்பட்டுள்ளன.

இந்த சட்டமூலம் 2022 ஜனவரி 27ஆம் திகதி அரச வர்த்தமானியில் வெளியிடப்பட்டது. அதன்பின்னர், பாராளுமன்றத்தில் இந்த சட்டமூலத்தை தாக்கல் செய்யுமாறு பாராளுமன்றத்தில் உள்ள அவைத் தலைவருக்கு அமைச்சரவை உபகுழுவின் தலைவரான வெளிநாட்டு அமைச்சர் கடிதம் எழுதியுள்ளார்.

1979ஆம் ஆண்டு ஜூலை 24ஆம் திகதி பாராளுமன்றத்தில் சான்றளிக்கப்பட்டதிலிருந்து 1979ஆம் ஆண்டின் 48ஆம் இலக்க பயங்கரவாதத் தடைச் சட்டம் (தற்காலிக ஏற்பாடுகள்) செயல்பட்டு வருவதுடன், 1982 மற்றும் 1988ஆம் ஆண்டுகளில் சிறிய திருத்தங்களுக்கு உட்படுத்தப்பட்டது என்பது குறிப்பிடத்தக்கது.

எனவே, பல ஆலோசனைகளுக்குப் பின்னர், மேற்கூறிய சட்டத்தின் கீழ் விசாரணை மற்றும் நீதித்துறை மீளாய்வுக்கு உட்பட்ட நபர்களின் உரிமைகளை முன்னேற்றுவதற்கும், பாதுகாப்பதற்கும் ஒரு முற்போக்கான படியாக முன்மொழியப்பட்ட திருத்தம் அமைவதுடன், பயங்கரவாத எதிர்ப்புச் சட்டத்தை எதிர்கொள்வதற்காக சிறந்த சர்வதேச நடைமுறைகளை நடைமுறைப்படுத்துவதற்கான ஒரு முக்கியமான நடவடிக்கையாகவும் அமைகின்றது-என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. (அ)


## அந்தியேட்டி வீட்டுக்கிருத்திய அழைப்பு



அமரர்

### அருச்சுனன் பரிமளம்

மலர்வு 15.02.1946 உதிர்வு 10.02.2022

அன்புடையீர்!

கடந்த 10.01.2022 திங்கட்கிழமை அன்று எங்கள் அன்புத் தெய்வம் அமரர் அருச்சுனன் பரிமளம் அவர்கள் சிவபதமடைந்தார்.

அன்னார் பரமு - தங்கம்மா தம்பதியரின் அன்பு மகளும், சின்னத்தம்பி அருச்சுனன் (JP) அவர்களின் அன்பு மனைவியும், விவேகானந்தர் (பொலிஸ் உத்தியோகத்தர் - கிளிநொச்சி) அவர்களின் பாசமிகு தாயாரும், விவேகானந்தர் தர்சிகா அவர்களின் அன்பு மாமியாரும், சரஸ்வதி, கமலாதேவி, தர்மலிங்கம், சாரதாதேவி, லீலாவதி மற்றும் இரத்தினேஸ்வரி ஆகியோரின் சகோதரியும், ஏகாம்பரம், மகாலிங்கம், இந்திராதேவி, குணரத்தினம், சிவம் மற்றும் கார்த்திகேசு ஆகியோரின் மைத்துனியும், செல்வவதனா, கேமவதனா, பிரபாகரன், திலகவதனா, ஜீவஸ்காந்தன், ஜீவவினோதன், சிவகாந்தன், கமலினி, பிரபு, சிவசோபா, சிவதர்சினி ஆகியோரின் சிறியதாயும், துஷ்யந்தன், துஷ்யந்தி, துஷீபன், பிரகாஷ், பிரஜீவ், பிரதீப், பிரசண், பிரதாபன் ஆகியோரின் பெரிய தாயும், சோபிநாத், நிஷால்ட் ஆகியோரின் மாமியுமாவார்.

அன்னாரின் அந்தியேட்டி கிரியைகள் கடந்த 07.02.2022 திங்கட்கிழமை காலை 7மணிக்கு கீரிமலை தீர்த்தக்கரையில் இடம்பெற்றது. வீட்டுக்கிருத்திய நிகழ்வுகள் நாளை 09.02.2022 புதன்கிழமை நண்பகல் 12.00 மணிக்கு அன்னாரின் இல்லத்தில் நடைபெறும். அதனைத் தொடர்ந்து இடம்பெறும் ஆத்ம சாந்திப் பிரார்த்தனையிலும், மதிய போசன நிகழ்விலும் கலந்து கொள்ளுமாறு தங்களை அன்புடன் அழைக்கின்றோம்.

முகவரி:
**ஏழாலை மத்தி,
சிவகுரு வீதி, ஏழாலை.**

தகவல் :
**குடும்பத்தினர்.**

## ‘இனப் படுகொலை’ ...

தெரிவிக்கும் விதத்தில் வெளியிட்ட நீண்ட அறிக்கையிலேயே கனடாவுக்கான தூதரகம் மேற்படி கூறியுள்ளது. அந்த அறிக்கையில்,

ஒன்ராறியோவின் கல்வி அமைச்சர் ஸ்டீபன் லெஸ் - அப்பாவி தமிழ் மக்களுக்கு எதிராக நடை பெற்ற ஒரு இனப் படுகொலையை நாங்கள் அங்கீகரிக்கின்றோம் - மற்றும் - கொழும்பில் ஆட்சியின் கைகளில் 140,000 அப்பாவிகள் கொல்லப்பட்ட ஒரு இனப்படு கொலை - என்பன உள்ளிட்ட கருத்துக்களைக் குறிப்பிட்டிருந் தமை தொடர்பில் நாங்கள் ஏமாற் றம் அடைகின்றோம். இந்த நிகழ் வில் கலந்து கொண்ட ஸ்கார்பரோ - ரூஜ் பார்க் மாகாண பாராளுமன்ற உறுப்பினர் விஜய் தணிகாசலமும் தனது கருத்துக்களில் - தமிழ் இனப்படு கொலை - என்று குறிப்பிட்டுள்ளார்.

2021 ஏப்ரல் 07ஆம் திகதியிட்ட இராஜதந்திரக் குறிப்பில், கனடாவின் வெளியுறவு, வர்த்தகம் மற்றும் அபிவிருத்தித் திணைக்களம் - இலங்கையில் இடம் பெற்ற இனப்படு கொலை தொடர்பான குற்றச்சாட் டுக்கள் தொடர்பில் கனடாவின் உத்தியோகபூர்வ நிலைப்பாட்டை வெளிவிவகார, வர்த்தகம் மற்றும் அபிவிருத்தித் திணைக்களம் தெளிவுபடுத்தியுள்ளது. இலங் கையில் இனப்படுகொலை இடம் பெற்றதாக கனடா அரசாங்கம் கண்டறியவில்லை என்பதை திணைக்களம் உத்தியோகபூர்வமாக உறுதிப் படுத்த முடியும் - எனக் குறிப்பிட்டுள்ள தெளிவுபடுத்தலை நாங்கள் பாராட்டுகின்றோம். மேலும், கனடா அரசாங்கம் தமிழீழ விடுதலைப் புலிகள் இயக்கத்தை பயங்கரவாத அமைப்பாக தடை செய்துள்ளது.

இந்தப் பின்னணியில், ‘தமிழ் இனப் படுகொலை’ என்ற வார்த்தை மீண்டும் மீண்டும் பயன்படுத்தப்படுவது, ஒன்ராறியோவில் வசிக்கும் இலங்கைக் கனேடியர்களின் பிள்ளைகள் மற்றும் சமூகத்தினரிடையே கருத்து வேறுபாடுகளையும் தப்பான அபிப்பிராயத்தையும் உருவாக்குகின்றது. எனவே, சமூக நல்லிணக்கத்தை கருத்திற்கொண்டு சர்வதேச சமூகத்தில் இலங்கை பற்றிய தவறான கருத்துக்கள் பரப்பப்படுவதை தடுக்கும் வகையில் இவ்வாறான குற்றச்சாட்டுக்களை நிராகரிக்க வேண்டும்.

இலங்கையில் இறுதிக்கட்ட மோதலின் போது, உலகம் கண்ட மிகக் கொடூரமான பயங்கரவாதக் குழுக்களில் ஒன்றான தமிழீழ விடுதலைப் புலிகள் என்ற சர்வதேச அளவில் தடைசெய்யப்பட்ட பயங்கரவாதக் குழுவை அரசாங்கப் படைகள் எதிர்கொண்டன. ஏற்படுத்தியிருந்தது. 2009இல் இராணுவ மோதலின் இறுதிக் கட்டங்களில், விடுதலைப் புலிகள் தவிர்க்க முடியாத தோல்வியை எதிர்கொண்டபோது, தமிழ் மக்களை மனிதக் கேடயங்களாக, பிணைக் கைதிகளாகப் பிடித்து வைத்திருந்ததுடன், மோதல் பிரதேசங்களிலிருந்து பொது மக்களை நகர்த்துவதற்கான அனைத்து முயற்சிகளையும் மறுத்திருந்தனர். பொதுமக்கள் உயிரிழப்புக்கள் குறித்த குற்றச்சாட்டு மற்றும் எண்ணிக்கையை மிகைப்படுத்திக் கூறுவதானது, அரசாங்கத்தின் முன்னேற்றத்தைத் தடுப்பதற்காக வெளிநாட்டுத் தலையீட்டை வலுக்கட்டாயப்படுத்த புலிகள் முயன்ற வழிமுறையாகும்.

எனவே, விடுதலைப் புலிகளுடனான இராணுவ ஈடுபாட்டின் போது ‘இனப் படுகொலை’ என்ற போலியான குற்றச்சாட்டுக்களின் செயல் மற்றும் / அல்லது உள்நோக்கம் இருந்ததாகக் கூறுவதற்கு எந்தவித ஆதாரமும் இல்லை. ‘இனப்படுகொலையை’ பரிந்துரைக்கும் நிகழ்வுகளின் வடிவமும் இல்லை. இராணுவ மோதலின் கடைசிக் கட்டத்தில் நிலைமையைக் கருத்தில் கொண்டு, தந்திரோபாய தெரிவுகள் நியாயமானவையும், விகிதாசாரமானவையுமாகும் என இராணுவ நிபுணர்கள் குறிப்பிட்டுள்ளனர்.

ஐ. நா. செயலாளர் நாயகத்தின் நிபுணர்கள் குழு அறிக்கை கூட இலங்கை அரசாங்கத்திற்கு எதிரான ‘இனப்படுகொலை’ குற்றச்சாட்டைக் கொண்டிருக்கவில்லை. 2015இல் இலங்கை மீதான ஐக்கிய நாடுகளின் மனித உரிமைகள் விசாரணைக்கான உயர்ஸ்தானிகர் அலுவலகத்தின் முக்கிய கண்டுபிடிப்புக்கள் இலங்கையின் ‘போர்க்குற்றங்கள்’, ‘இனப் படுகொலை’ என்று கூட பரிந்துரைக்கவில்லை. இனப்படுகொலையின் கூற்றை ஆதரிக்கும் குழுக்கள், மோதலின் இறுதி மாதங்களில் ‘40,000 பொதுமக்கள் இறந்திருக்கலாம்’ என நிபுணர்கள் குழு அறிக்கையில் எந்த ஆதாரமும் இல்லாமல் செய்யப்பட்ட கூற்றை பின்பற்றுகின்றனர். இலங்கை இராணுவத்தால் இறுதியாக மீட்கப்பட்ட மக்களின் உண்மையான எண்ணிக்கையை வைத்து 40,000 பொதுமக்கள் மரணங்கள் இடம் பெற்றன என்ற கற்பனையான புள்ளிவிவரத்துடன் நிபுணர்கள் குழு அறிக்கை வெளிவந்ததுடன், 3 இலட்சத்து 30 ஆயிரம் என்ற அனுமான எண்ணிக்கைக்கு எதிராக இது அண்ணளவாக 290,000 ஆகும்.

ஜூலை 2006 முதல் மே 2009 வரை விடுதலைப் புலிகளுக்கு எதிரான இறுதிப் போரின் போது இலங்கை ராணுவத்தால் உயிரிழந்தவர்களின் எண்ணிக்கை 5,876 ஆகும். 2008 மற்றும் 2009 இல் இயற்கை அல்லாத காரணங்களால் வடக்கு மாகாணத்தில் இறந்ததாகக் கூறப்படும் (9,283) இலங்கையின் ஆயுதப் படைகளை விட விடுதலைப் புலிகள் அதிக எண்ணிக்கையிலான இறப்புகளைச் சந்தித்திருப்பார்கள் என்று கருதுவது தர்க்க ரீதியானதாக இருக்கும் என்பதுடன், அவர்களில் பெரும்பான்மையானவர்கள் விடுதலைப் புலிகள் அல்லது நேரடியாகப் போரில் ஈடுபட்டவர்களாக இருந்திருப்பார்கள் - என்று கூறப்பட்டுள்ளது. (ஐ)

## வடக்கில் நேற்று...

மருத்துவமனை ஆய்வுகூடத்தில் நேற்று செவ்வாய்க்கிழமை 113 பேரின் மாதிரிகள் பி. சி. ஆர். சோதனைக்கு உட்படுத்தப்பட்டன.

இதன்படி, யாழ். போதனா மருத்துவ மனையில் 24 பேருக்கும், பருத்தித்துறை ஆதார மருத்துமவமனையில் ஒருவரும் என யாழ்ப்பாணம் மாவட்டத்தில் 25 பேர் தொற்றாளர்களாக அடையாளம் காணப்பட்டனர்.

வவுனியா - பூவரசங்குளம் பிரதேச மருத்துவமனையில் ஐந்து பேர் தொற்றாளர்களாக அறியப்பட்டனர். இரணைமடு விமானப் படை முகா மில் 3 பேரும், கிளிநொச்சி பொது மருத் துவமனையில் இருவரும் என மாவட்டத் தில் ஐவர் தொற்றாளர்களாக அறியப்பட் டனர்.

முல்லைத்தீவு மாவட்ட பொது மருத்துவமனையில் ஒருவரும், மன்னார் மாவட்ட பொது மருத்துவமனையில் ஒருவருமாக வடக்கு மாகாணத்தில் 37 பேர் தொற்றாளர்களாக இனங்காணப்பட்டுள்ளனர். (ஐ)

## மீனவர்...

வாதாரத்தை பாதுகாப்பதற்கான உரிமை உறுதிப்படுத்தப் பட வேண்டும். பல பத்தாண்டுகளாக கட லில் துன்புறுவ தும் மடிந்துபோவதும் தொடர்கதையாக கூடாது.

“இலங்கையின் வடகிழக்கு கரையோரங்களில் வாழ்ப வர்களின் தொழில், வீடமைப்பு, குடிநீர், சுகாதாரம் இதர சமூக பாதுகாப்பு விடயங்கள் உறுதி செய்யப்பட வேண் டும். விஞ்ஞானத்துக்கு புறம்பான சுற்றாடலுக்கு பெரும் சேதம் விளைவிக்கும் மடி வலை தடை செய்யப்பட வேண்டும். ஆழ்கடல் மீன்பிடி ஊக்குவிக்கப்பட வேண்டும். குறுகிய அரசியல் நோக்கங்களுக்காக மீனவ மக்களின் நலன்களை பலியிட முடியாது. இரு தரப்பு மீனவர்கள் இடையிலான கலந்துரையாடல்கள் பேச்சுவார்த்தைகள் சகோதரத்துவம் உறவுகள் பேணப்பட வேண்டும்” என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. (அ)

## இந்தியா -...

பயணமாக இந்தியா சென்றுள்ள வெளிவிவகார அமைச்சர் ஜீ. எல். பீரிஸ், இந்திய வெளிவிவகார அமைச்சர் கலாநிதி எஸ்.ஜெயசங்கர், தேசிய பாதுகாப்பு ஆலோசகர் அஜித் தோவால், வெளிவிவகார செயலாளர் ஹர்ஷ்வர்தன் ஷிரிங்லா ஆகியோரையும் சந்தித்து கலந்துரையாடினார்.

இதன்போது பொருளாதார ஒத்துழைப்புகள், இரு நாடுகளுக்குமிடையிலான உறவுகள் தொடர்பில் இரு தரப்பு கலந்துரையாடல்கள் இடம்பெற்றன என்று இந்தியாவில் உள்ள இலங்கை தூதரகம் தெரிவித்துள்ளது.

திருகோணமலை எண்ணெய் குதங்கள் தொடர்பான உடன்படிக்கை இரு தரப்புக்கும் வெற்றியளிக்கும் நிலைமை உருவாகியுள்ளது என்று இந்தியாவுக்கு வெளிவிவகார அமைச்சர் இதன்போது சுட்டிக்காட்டியுள்ளார். (ஐ)

## தமிழருக்கு...

இந்தியாவுக்க இருநாள் சுற்றுப் பயணம் சென்றுள்ள வெளிவிவகார அமைச்சர் ஜீ. எல். பீரிஸ் நேற்று முன்தினம் இந்திய வெளியுறவு அமைச்சரை சந்தித்த போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார். மேலும், தமிழருக்கான விடயங்களை உறுதி செய்வதற்கு அதிகாரப் பரவல் மிக முக்கியமானது என்றும் வெளிவிவகார அமைச்சர் அழுத்தமாகத் தெரிவித்தார் என்று அவரின் அமைச்சு வெளியிட்ட செய்திக் குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ஐ)

## ஜனாதிபதி...

புக்கும் ஜனாதிபதிக்கும் இடையிலான சந்திப்பு இடம்பெறும் என்று கூறப்பட்ட போதிலும் 8 மாதங்களுக்கு மேலாகியும் இந்த சந்திப்பு ஏன் இடம்பெறவில்லை என்ற கேள்விக்க பதிலளித்தபோதே அவர் மேற்கண்டாவாறு கூறினார்.

தமிழ் மக்களுக்கான அதிகாரப் பகிர்வு குறித்த கேள்விக்கு பதிலளித்த அமைச்சர் பீரிஸ், “13ஆவது திருத்தம் உட்பட தமிழர்களுக்கு அதிகாரங்களை பகிர்ந்தளிப்பதும் அங்கு அபிவிருத்திகளை மேற்கொள்வதும் மிக மெதுவாகவே இடம் பெற்று வருகின்றன”, என்று ஏற்றுக் கொண்டார். (ஐ)

## பயங்கரவாத...

பயன்படுத்தி இலங்கை அரசாங்கம் மோசமான துஷ்பிரயோகங்களில் ஈடுபடுகின்றது எனத் தெரிவித்துள்ள சர்வதேச மனித உரிமைகள் கண்காணிப்பகம் இந்த சட்டத்தை கைவிடுமாறு இலங்கை அரசாங்கத்திற்கு ஐரோப்பிய ஒன்றியம் அழுத்தங்களை கொடுக்கவேண்டும் எனவும் கேட்டுள்ளது.

மதிப்பிழந்த பயங்கரவாத தடைச்சட்டத்தை பயன்படுத்தி நீண்டகாலமாக தன்னிச்சையாக தடுத்து வைத்திருத்தல் சித்திரவதைகள் போன்றவற்றில் இலங்கை அரசாங்கம் ஈடுபடுகின்றது.

பரந்துபட்ட துஷ்பிரயோகங்களை முடிவுக்கு கொண்டுவருவதற்கு உதவாத உத்தேச திருத்தங்களை நிராகரிக்க வேண்டும். பயங்கரவாத தடைச் சட்டத்தை நீக்குவதாக முன்னைய அரசாங்கங்கள் அளித்த வாக்குறுதிகளைமறுத்துவிட்டு இலக்கு வைக்கப்பட்ட பொதுமக்களின் அடிப்படை உரிமைகளை பறிப்பதற்காக இலங்கை அதிகாரிகள் தொடர்ந்தும் பயங்கரவாத தடைச் சட்டத்தை பயன் படுத்துகின்றனர்.

ராஜபக்ஷ அரசாங்கத்தின் மனித உரிமைகள் துஷ்பிரயோக நடவடிக்கைகள் பயங்கரவாத தடைச் சட்டத்தை திருத்துவதற்கான முன்மொழிவுகள் என அது வெளியிட்டுள்ள தவறாக வழிநடத்தும் திருத்தங்கள் மூலம் முடிவிற்கு வராது. ஐரோப்பிய ஒன்றியம், ஐக்கிய இராச்சியம், அமெரிக்கா ஆகியன இலங்கை அரசாங்கம் அதன் கடப்பாடுகளை ஏற்று மனித உரிமைகளை பாதுகாப்பதற்கான அர்த்தமுள்ள நடவடிக்கைகளை எடுக்க வேண்டும் என அழுத்தம் கொடுக்க வேண்டும் - என்றும் கூறியுள்ளார். (ஐ)

## சிவாஜி, ரவிகரன்...

வைக்கப்பட்டுள்ளது.

கடந்த 2018ஆம் ஆண்டு பெப்ரவரி மாதம், முல்லைத்தீவு - வட்டுவாகல் பகுதியில், மக்களுக்கு சொந்தமான 617 ஏக்கர் காணியை கடற்படைக்கு சுவீகரிக்க அளவீட்டுக்கு சென்ற நில அளவீட்டாளர்களுக்கு எதிர்ப்புத் தெரிவிக்கப்பட்டது.

இதையடுத்து, நில அளவைத் திணைக்கள உத்தியோகத்தர்களை கடமையை செய்யவிடாமல் தடுத்தனர், வாகனத்துக்கு சேதம் விளைவித்தனர் என்ற குற்றச்சாட்டுக்களில் எம். கே. சிவாஜிலிங்கம், து. ரவிகரன் ஆகியோர் உட்பட நால்வர் மீது வழக்கு பதிவு செய்யப்பட்டது. இந்த வழக்கே எதிர்வரும் ஜூலை 26ஆம் திக திக்கு திகதியிடப்பட்டுள்ளது.

## இலங்கை...

சிரியர் ஜி.எல்.பீரிஸ் இந் தியாவுக்கு வருகை தந்துள் ளார். இலங்கை மிகப் பெரிய பொருளதார நெருக்கடிகளை சந்தித்து வரும் நிலையில், இந்திய - இலங்கை ஒப்பந்தத்தின் 1.4ஆம் சரத்தில் உறுதி செய்யப்பட்ட இலங்கைத் தீவின் வடக்கு - கிழக்கு தமிழர் தாயகம் பகுதியில், இடம்பெற்று வரும் நில அபகரிப்பு மற்றும் சிங்கள குடியேற்றங்கள், ஒப்பந்தத்தின் அச்சரத்த அழித்து வருவதாக அமைகின்றது.

இந்நிலையில், இலங்கைக்கான இந்தியாவின் உதவி வழங்கல் என்பது இந்திய - இலங்கை ஒப்பந்தத்தின் 1.4ஆம் சரத்தை உறுதி செய்தே வழங்கவேண்டும் - என்றுள்ளது. (ஐ)

## தென்கொரியாவு...

மற்றும் பங்கேற் பாளர்கள், கொரிய தீபகற்பத்தின் அமைதியான நல்லிணக்கத்திற்கான வாய்ப்புகள் குறித்து உரையாற்றுவார்கள்.

சியோலில் இந்த மாநாட்டில் ஆயிரத்துக்கும் மேற்பட்டோர் கூடுவார்கள் என எதிர்பார்க்கப்படுகிறது. (அ)

## ஆரியகுளத்தில்...

அவர் சென்ற பக்கத்துக்கு எதிர்ப்பக்கமாக நிறுத்தப்பட்டிருந்த மினி பஸ்ஸூடன் மோதியே இந்த விபத்து இடம்பெற்றுள்ளது.

இதில், பருத்தித்துறை - அல்வாய் தெற்கை சேர்ந்த இந்திரசிங்கம் நிருபன் (வயது 32) என்பவரே உயிரிழந்தார். (ஐ-3)

## 35ஆக உயர்ந்தது...

தன என்று அரசாங்க தகவல் திணைக்களம் நேற்று அறிவித்தது.

இதன்படி, 30 வயதுக்கு கீழ் ஓர் ஆணும் ஒரு பெண்ணுமாக இருவரும், 30 - 59 வயதுப் பிரிவில் 4 ஆண்களும் ஒரு பெண்ணுமாக ஐவரும் 60 வயதுக்கு மேற்பட்ட 17 ஆண்களும் 11 பெண்களுமாக 28 பேரும் என மொத்தமாக 35 பேர் உயிரிழந்தனர்.

இந்த மரணங்களின் எண்ணிக்கையுடன் நாட்டில் தொற்றால் உயிரிழந்தவர்களின் எண்ணிக்கை 15 ஆயிரத்து 656ஆக உயர்ந்துள்ளது. (ஐ)

## யாழ்ப்பாண...

தெரிவித்தார்.

மேலும், யாழ்ப்பாணத்தில் கொரோனா தொற்று ஜனவரி மாத முற்பகுதியிலிருந்து அதிகரித்து செல்கின்றது. இந்த அதிகரிப்பு ஆரோக்கியமானதாக இல்லை. தற்போது அனைத்துச் செயல்பாடுகளும் - குறிப்பாக, போக்குவரத்து, கற்றல் நடவடிக்கைகள் மீள ஆரம்பித்துள்ள கொரோனா தொற்றின் நிலை மேலும் அதிகரிக்கக்கூடிய வாய்ப்புள்ளது என்று சுகாதார துறையினர் எச்சரித்துள்ளார்கள்.

எனவே, சுகாதார அமைச்சு இறுதியாக வெளியிட்ட விதிகளுக்கு அமைவாக பொது மக்கள் தங்கள் நடவடிக்கைகளை மேற்கொள்ளவேண்டும். கட்டாயமாக முகக்கவசம் அணியவேண்டும்- என்றார்.

ஈழநாடு
Eelanadu

# தேர்தலுக்காக தனியார் ஊழியர்களிடமிருந்து 70 பில்லியன் ரூபாயை எடுக்க அரசு முயற்சி!

## எதிர்க்கட்சி குற்றச்சாட்டு

கொழும்பு, பெப். 09

**ஊழியர் சேமலாப நிதியம் மற்றும் ஓய்வூதிய கொடுப்பனவு நிதி என்பவற்றை மேலதிக வரிச் சட்டமூலத்தில் உள்ளடக்குவதற்கான சரத்துக்கள் தயார் செய்யப்பட்டுள்ளதாக எதிர்க்கட்சி குற்றம் சாட்டியுள்ளது.**

மேலதிக உபரி வரிச் சட்டமூலம் தொடர்பான வர்த்தமானி வெளியிடப்பட்ட நிலையிலேயே ஐக்கிய மக்கள் சக்தியின் பாராளுமன்ற உறுப்பினர் ஹர்ஷ டி சில்வா இதனை கூறியுள்ளார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்- 2020 ஏப்ரல் 1, இல் தொடங்கும் மதிப்பீட்டு ஆண்டில் இருந்து ஊழியர் சேமலாப நிதியம் உட்பட பல நிதிகளுக்கு 25 வீதம் மேலதிக கட்டணம் விதிக்கப்படும்.

சட்டமூலத்தின்படி, ஓய்வூதிய நிதியம், வருங்கால வைப்பு நிதி, ஓய்வூதியக் கொடுப்பனவு நிதி அல்லது அதற்கு இணையான நிதியொன்று கம்பனியின் வரையறைக்குள் உள்ளடக்கப்படும்.

இலங்கையின் வரலாற்றில் முதன் முறையாக கோட்டாபய ராஜ பக்ஷ அரசாங்கம் ஊழியர் சேமைலாப நிதி மற்றும் ஊழியர் நம்பிக்கை நிதி இலாபங்களுக்கு 25 வீத வரியை விதித்துள்ளது.

மேலும் உள்ளூராட்சி தேர்தல் பிரச்சாரத்திற்காக தனியார் துறை ஊழியர்களிடமிருந்து 70 பில்லியன் ரூபாயை எடுத்துக்கொள்ள அரசாங்கம் முயற்சிக்கிறது.

குறிப்பாக அந்த பணத்தை பிரதேச சபை உறுப்பினர்கள் மூலம் விநியோகிக்க ஆளும் கட்சி திட்டமிடப்பட்டுள்ளது-என்றார்.

(அ)

# சஜித் பிரேமதாஸ-ஜோன்ஸ்டன் பெர்னாண்டோ பாராளுமன்றத்தில் கடுமையான வாய்த்தர்க்கம்!

கொழும்பு, பெப். 09

எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸவுக்கும் அரசாங்கத்தின் பிரதம கொறடா ஜோன்ஸ்டன் பெர்னாண்டோவுடன் இடையில் நேற்று நாடாளுமன்றத்தில் கடுமையான வாய்த்தர்க்கம் இடம் பெற்றது.

பாராளுமன்ற அமர்வுகளை நடத்திக் கொண்டிருந்த பாராளுமன்ற பிரதிக் குழுக்களின் பிரதித் தலைவர் அங்கஜன் இராமநாதனையும் எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ கடுமையாக சாடினார்.

இலங்கையின் தற்போதைய பொருளாதார நிலை, அந்நிய செலாவணி நெருக்கடி உள்ளிட்ட 11 கேள்விகளை நிதி அமைச்சரிடம் எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ எழுப்பியிருந்தார்.

மேலும் பொருட்களின் விலை உயர்வைக் கட்டுப்படுத்த நிதி அமைச்சு எடுத்த நடவடிக்கை, பணவீக்கத்துக்கான காரணங்கள் மற்றும் பிற முக்கிய பொருளாதாரப் பிரச்னைகள் குறித்து அவர் கேள்வி எழுப்பினார். இதற்கு பதிலளிக்காதமை காரணமாக எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸவுக்கும் அரசாங்கத்தின் பிரதம கொறடா ஜோன்ஸ்டன் பெர்னாண்டோவுடன் இடையில் கடுமையான வாய்த்தர்க்கம் இடம்பெற்றது.

(அ)

## தேசியப் பாடசாலை அதிபர் நியமனம் உடன் ஆராயுமாறு ஜனாதிபதி பணிப்பு

கொழும்பு, பெப். 09

தேசிய பாடசாலைகளுக்கான அதிபர்களை நியமிப்பது தொடர்பில் ஆராயுமாறு ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ கல்வி அமைச்சின் செயலாளருக்கு பணிப்புரை விடுத்துள்ளார். நேர்காணலின் போது அல்லது அதன் பின்னரான நேர்காணல் குழு அல்லது பொதுச் சேவை ஆணைக் குழுவின் கல்வி சேவைக் குழு மீது ஏதேனும் தேவையற்ற செல்வாக்கு உள்ளதா என்பது குறித்து ஆராயப்பட உள்ளது. (அ)



## கிளிநொச்சியில் நேற்று பெண்கள் போராட்டம்!

கிளிநொச்சி, பெப். 09

பெண்கள் வாழ்வுரிமைக் கழகத்தின் ஏற்பாட்டில் கவனவீர்ப்பு போராட்டம் ஒன்று நேற்று முன்னெடுக்கப்பட்டது. இந்த போராட்டம் நேற்று முற்பகல் 10 மணியளவில் கிளிநொச்சி பழைய மாவட்ட செயலகத்துக்கு முன்பாக ஆரம்பிக்கப்பட்டது.

இதன்போது பெண்கள், சிறுவர்களின் உரிமையை பாதுகாத்தல், அதிகரித்து வரும் விலைவாசியை கட்டுப்படுத்தல் உள்ளிட்ட விடயங்களை உள்ளடக்கிய பதாதைகளை ஏந்தியிருந்துடன், கோசங்களும் எழுப்பப் பட்டன.

தொடர்ந்து போராட்டக்குழுவினர் ஏ-9 வீதி ஊடாக மாவட்ட செலகம் வரை சென்று கவனயீர்ப்பில் ஈடுபட்டனர். (அ)

## மஹிந்தவின் ஜெட் விமான பயணம் இலஞ்ச ஆணைக்குழு விசாரணை

கொழும்பு, பெப். 09

பிரதமர் மஹிந்த ராஜபக்ஷ கடந்த வருடம் திருப்பதிக்கு மேற்கொண்ட தனிப்பட்ட ஜெட் விமானம் பயணம் குறித்து இலஞ்ச ஊழல் ஆணைக்குழு விசாரணைகளை ஆரம்பிக்க தீர்மானித்துள்ளது.

2021 டிசெம்பர் 31 ஆம் திகதி ஊடகவியலாளர் தரிந்து உடுவகெதரவினால் தாக்கல் செய்யப்பட்ட முறைப்பாட்டின் அடிப்படையில் விசாரணைகள் ஆரம்பிக்கப்படவுள்ளன.

இந்த தகவலை இலஞ்சம் அல்லது ஊழல் குற்றச்சாட்டுகளை விசாரணை செய்யும் ஆணைக்குழு எழுத்து மூலமாக குறித்த ஊடகவியலாளருக்கு தெரிவித்துள்ளது.

ஜெட் பயணம் குறித்த செய்திகள் ஊடகங்களில் வெளியாகி சர்ச்சையை ஏற்படுத்தியதை அடுத்து, இது குறித்து ஊடகங்களும் எதிர்க்கட்சிகளும் பல கேள்வியை எழுப்பியிருந்தன.

இந்நிலையில் திருப்பதி பயணத்துக்காக பிரதமரின் நெருங்கிய சகா ஒருவரால் விமானம் பரிசாக வழங்கப்பட்டதாக பிரதமரின் தலைமை அதிகாரி யோஷித ராஜபக்ஷ தெரிவித்திருந்தார். (அ)

## மரண அறிவித்தல்

பிறப்பு
13 - 03 - 1951



இறப்பு
06 - 02 - 2022

### வாரித்தம்பி ஈஸ்வரநாதன்

யாழ். முள்ளிப்பற்று முள்ளியான் நித்தியவெட்டைப் பிறப்பிடமாகவும், கனடா Toronto வை வதிவிடமாகவும் கொண்ட வாரித்தம்பி ஈஸ்வரநாதன் அவர்கள் 06.02.2022 ஞாயிற்றுக்கிழமை அன்று கனடாவில் இறைபதம் அடைந்தார்.

அன்னார் காலஞ்சென்ற வாரித்தம்பி – இலட்சுமி தம்பதியரின் அன்பு மகனும், காலஞ்சென்ற கந்தவனம் – சற்குணம் தம்பதிகளின் அன்பு மருமகனும், நவமணி (கனடா) அவர்களின் அன்புக் கணவரும், ஸ்ரீறங்கநாயகி, கோகுலன், விஜிதா, சுதாகரன் ஆகியோரின் அன்புத் தந்தையும், அறிவழகன், தர்ஷினி, தவனேந்திரன், யாழினி ஆகியோரின் அன்பு மாமனாரும், புகனா, அபிஷா, அன்பு, தமிழ், தனுஷாந், துஷாலி, அனுஜன் ஆகியோரின் அன்புப் பேரனும், காலஞ்சென்ற வேலா யுதம், வல்லிபுரநாதன், இராஜலட்சுமி, கதிர்காமநாதன் மற்றும் தனபூபதி, மகேஸ்வரநாதன், யோகவதி, பாக்கிய வதி, அதிஸ்ரலிங்கம், விமலேஸ்வரன் ஆகியோரின் அன்புச் சகோதரரும், காலஞ்சென்ற பாக்கியலட்சுமி, சிவபாக்கியம், திருநாவிக்கரசு, நவரத்தினம், இராமலிங் கம் மற்றும் துவாரகாதேவி, ரேவதி, நடராஜா, மனோன் மணி, சின்னமலர் ஆகியோரின் அன்பு மைத்துனரும், காலஞ்சென்ற நடராசா, தனபாலசிங்கம்(குஞ்சுத்தம்பி) மற்றும் சந்திர உதயம், சரஸ்வதி, மார்க்கண்டு, தங்கராசா ஆகியோரின் மைத்துனரும் ஆவார்.

பார்வைக்கு :
Saturday, 12 Feb 2022 6:00 PM - 9:00 PM
Lotus Funeral and Cremation Centre Inc. 121 City View Dr, Etobicoke, ON M9W 5A8, Canada

கிரியை :
Sunday, 13 Feb 2022 7:00 AM - 9:00 AM
Lotus Funeral and Cremation Centre Inc. 121 City View Dr, Etobicoke, ON M9W 5A8, Canada

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

தொடர்புகளுக்கு :
**தவனேந்திரன் - மருமகன்**
**Mobile : +14167865846**

தகவல்:
**குடும்பத்தினர்**










இப்பத்திரிகை 707, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம் என்ற முகவரியில் அமைந்துள்ள ஈழநாடு பிறைவேற் லிமிட்டெட் நிறுவனத்தினரால் 09.02.2022 அன்று ஏ9 வீதி, நாவற்குழியில் உள்ள ஈழநாடு பிறைவேற் லிமிட்டெட் அச்சகத்தில் அச்சிட்டு வெளியிடப்பட்டது.

# இன்றைய தொலைக்காட்சி நிகழ்ச்சி நிரல்

**காலை**
6.00 மணி : பக்திப்பாடல்கள்
6.30 மணி : வணக்கம் டான்



6.31 மணி : தினம் ஒரு திருக்குறள்
6.35 மணி : சமயம் சார்பான நற்சிந்தனைகள்
6.55 மணி : இன்றைய ராசி பலன்
7.15 மணி : கதை வழி அறமொழி
7.20 மணி : சித்த மருத்துவம்
வழங்குபவர் டாக்டர்
விவியன் சத்தியசீலன்



7.30 மணி : இன்றைய பத்திரிகைகளில்
8.30 மணி : காலை செய்திகள்
9.00 மணி : கலாட்டா காலை-நேரலை
10.30 மணி : தொடர்நாடகம்
11.00 மணி : கலக்கல் ஸ்ரார் (மறு ஒளிபரப்பு)

**பகல்**
12.00 மணி : சிரிக்கலாம் வாங்க-நேரலை
1.00 மணி : சாட்சியம் ( மறு ஒளிபரப்பு )
1.30 மணி : சுப்பர் சீன்ஸ்-தெனாலி ராமன்,உன் சமையல் அறையில் திரைப்படங்களின் காட்சிகள்
4.30 மணி : குட்டீஸ் தர்பார்-சிறுவர் நேரலை நிகழ்ச்சி



5.30 மணி : குறுந்திரை நேரம்
6.00 மணி : டொப் 10 மூவீஸ்-புதிய 10 திரைப்படங்களின் தரவரிசை

**இரவு**
7.00 மணி : பாரதீ
8.00 மணி : இரவுச் செய்திகள்
9.00 மணி : துறைக்கு அப்பால்
9.30 மணி: பத்துக்கு 10



10.00 மணி : நேருக்கு நேர்

**காலை**
6.00 மணி : சிரி சிரி சிரி
8.00 மணி : சிரிப்பு சரடிவெடி
10.00 மணி : ஒரு பட கொமடி
11.00 மணி : சிரிப்போ சிரிப்பு

**பகல்**
1.00 மணி : நகைச்சுவை மன்னன்
கவுண்டமணி செந்தில் நடிப்பில் கலக்கல் காட்சிகள்
3.00 மணி : குண்டக்க மண்டக்க
5.00 மணி : ஒரு பட கொமடி
6.00 மணி : கொமடி கலாட்டா

**இரவு**
8.00 மணி : ஒரு படக்கொமடி
9.00 மணி : சிரிப்போ சிரிப்பு
10.00 மணி : விடிய விடிய சிரிப்பு தான்

**காலை**
6.00 மணி : பனிப்பூக்கள்
7.00 மணி : திசை எட்டும் இசை எட்டும்
8.00 மணி : வணக்கம் டான் மியூசிக்
9.00 மணி : மெல்லிசை
10.00 மணி : கேட்டாலே பரவசம் (நேரலை)

**பகல்**
12.00 மணி : ராஜா ராணி
1.00 மணி : விசை இசை
3.00 மணி : வட்ஸ் அப் (நேரலை)
4.00 மணி : டீ டைம் ராகங்கள் (நேரலை)
5.00 மணி : இனிது இனிது
6.00 மணி : என்றென்றும் இசை
7.00 மணி : ஓய்வெடு நிலவே

**இரவு**
8.00 மணி : காற்றில் வரும் கீதம்
9.00 மணி : நிலவு தூங்கும் நேரம்

**காலை**
5.15 மணி : தரம் 06 - விஞ்ஞானம்
6.00 மணி : தரம் 07 - தமிழ்
6.45 மணி : தரம் 08 - தமிழ்
7.30 மணி : தரம் 09 - கணிதம்
8.15 மணி : தரம் 10 - கணிதம்
9.00 மணி : க.பொ.த உயர்தரம் (கலைப்பிரிவு)
நாடகமும் அரங்கியலும்
10.00 மணி : க.பொ.த உயர்தரம் (வணிகப்பிரிவு)
வணிகக்கல்வி
11.00 மணி : க.பொ.த உயர்தரம்
(கணிதம்,விஞ்ஞானப்பிரிவு) உயிரியல்

**பகல்**
12.00 மணி : தரம் 06 - விஞ்ஞானம்
1.00 மணி : தரம் 07 - தமிழ்
2.00 மணி : தரம் 08 - தமிழ்
3.00 மணி : க.பொ.த சாதாரண தரம் சங்கீதம்
3.40 மணி : க.பொ.த சாதாரண தரம் விஞ்ஞானம்
4.20 மணி : க.பொ.த சாதாரண தரம் விஞ்ஞானம்
5.00 மணி : க.பொ.த சாதாரண தரம் சித்திரம்
5.40 மணி : க.பொ.த சாதாரண தரம் புவியியல்
6.20 மணி : க.பொ.த சாதாரண தரம்
மாதிரி வினாத்தாள்

**இரவு**
7.00 மணி : க.பொ.த சாதாரண தரம்
மாதிரி வினாத்தாள்

**காலை**
5.00மணி : சிவாய மந்திரம்
6.00 மணி : சுப்ரபாதம்
6.30 மணி : சுப்ரபாதம்
7.00 மணி : இன்றைய சிந்தனை
7.05 மணி : இன்றைய நாள்
7.20 மணி : ஈழத்து சித்தர்கள்
7.30 மணி : மங்கள இசை
8.00 மணி : அருளுரை
8.30 மணி : திருவாசகம்
9.00 மணி : திருவிழா-01
10.00 மணி : பஜனை
10.30 மணி : தமிழககோவில் திருவிழா
11.00 மணி : பக்திமலர்

**பகல்**
12.00 மணி : திரையில் பக்தி
12.30 மணி : திருவிழா-02
6.00 மணி : கந்தசஷ்டி கவசம்

**இரவு**
7.00 மணி : செய்திகள்
7.30 மணி : அருளுரை
8.00 மணி : திருவிழா-01

**காலை**
7.00 மணி : நாளொரு நற்சிந்தனை
8.00 மணி : ஜெபமாலை
9.30 மணி : ஞானவழி
(மறு ஒளிபரப்பு ஞாயிறு)
10.00 மணி: நாளொரு நற்சிந்தனை
(மறு ஒலிபரப்பு)
10.30மணி : திருப்பலி (யாழ்ப்பாணம்)
11.30 மணி : மறைக்கல்வி
(மட்டக்களப்பு) ஞாயிறு

**பகல்**
12.00 மணி : திருப்பலி (திருகோணமலை)
01.00 மணி : திருப்பலி (மட்டக்களப்பு)
03.00 மணி : திருப்பலி (யாழ்ப்பாணம் மறு ஒலிபரப்பு)
04.00 மணி: திருப்பலி (மட்டக்களப்பு)
05.00 மணி : திருப்பலி (திருகோணமலை)
06.00 மணி :நாளொரு நற்சிந்தனை
(மறு ஒலிபரப்பு)
06.00 மணி : இயேசுவின் போதனைகள்
07.30 மணி : அன்பியம்( சனி மறுஒளிபரப்பு)

**காலை**
6.00 மணி : கிராத்
7.00 மணி : இறை சிந்தனை
7.30 மணி : இஸ்லாமிய பாடல்
8.00 மணி : கலந்துரையாடல்
9.00 மணி : இஸ்லாமிய சீரிஸ்
10.00 மணி : மனதோடு பேசலாம்
10.30 மணி : கண் வசண்ணம் கை வண்ணம்
11.00 மணி : சுவனப்பாதை
11.30 மணி : வரலாறு சொல்லும் வைத்தியம்

**பகல்**
12.00 மணி : லுகர் அதான்
12.30 மணி : இஜ்லாமிய வரலாறு
1.00 மணி : இஸ்லாமிய திரைப்படம்
2.00 மணி : கஸீதா
2.30 மணி : இறை சிந்தனை
3.00 மணி : பாடல்கள்
3.30 மணி : பள்ளிவாசல் ஆவணப்படம்
4.00 மணி : சிறுவர் இஸ்லமிய கார்டூன்
5.00 மணி : இறை தென்றல்
6.00 மணி : தாஜீமதுல் குர்ஆன்

**இரவு**
7.00 மணி : பிறை பிரசங்கம்
8.00 மணி : இஸ்லாமிய வரலாறு